24 மணி நேரமும் உளுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 210 ஆனி 12 ஆம் நாள் வியாழக்கிழமை 27 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# "19" திருத்தம் நாட்டுக்குச் சாபக்கேடு

# தெரிவுக்குழுவில் முன்னிலையாகேன்

## மைத்திரி திட்டவட்டம்

- அரச தலைவர் தேர்தலின் பின்பே பொதுத்தேர்தல்
- நாட்டின் பாதுகாப்பில் திருப்தி
- அவசரகாலச் சட்டம் இனிமேல் நீடிக்கப்படாது
- நால்வருக்கு விரைவில் சாவுத் தண்டனை



கொழும்பு, ஜூன் 27
'அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நாட்டுக்கு ஒரு சாபக்கேடு. இதை எதிர்வரும் அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் ஒழித்தால் கூட நல்லதுதான்.' இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

'நாடாளுமன்றின் சிறப்புத் தெரிவுக்குழுவானது நாடகத்தையே அரங்கேற்றி வருகின்றது.
இதற்கான கதை, திரைக்கதை வசனமெல்லாம் அலரிமாளிகையில் இருந்தே எழுதப்படுகின்றது' எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்றுக் காலை ஊடகப் பிரதானிகளுடன் நடத்திய சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:

**'19ஆவது' திருத்தத்தை ஒழிக்கவேண்டும்**
நாட்டின் உறுதித்தன்மை இன்மைக்கு 19ஆவது திருத்தச் சட்டமே காரணம்.

19

## புலனாய்வுப் பிரிவு சரிந்துவிடவில்லை

*இராணுவத்தளபதி இவ்வாறு தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 27
புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஓரிருவரை கைது செய்தமையால் முழு புலனாய்வுப் பிரிவும் சரிந்துவிட்டது என்று சொல்ல முடியாது என இராணுவத் தளபதி

06

## சாவுத் தண்டனையை ஆதரிக்காது ஐ.தே.க.

### ஹர்ஷண எம்.பி. கவலை

கொழும்பு, ஜூன் 27
சாவுத் தண்டனை விதிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி என்ற வகையிலும் ஆட்சியில் உள்ளவர்கள்

06

## 50 வயதைக் கடந்தால் ஓய்வூதியம் கிடையாது

*என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே நிரந்தர நியமனம் வழங்கப்படுகின்றது*

யாழ்ப்பாணம், ஜூன் 27
தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் 50 வயதைக் கடந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட மாட்

06



## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஸஹ்ரானின் மனைவி சாட்சியம்

கொழும்பு, ஜூன் 27
உயிர்த்த ஞாயிறு தினமான ஏப்ரல் 21ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்ப

19

## ரிசாத்தின் சாட்சியமளிப்பு நாளை வரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 27
முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சாட்சியமளிப்பதற்காக நேற்று மாலை முன்னிலையானா

19

## இலங்கைக் கடலில் அத்துமீறிய 7 பேர் நேற்றுக் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜூன் 27
இந்தியாவில் இருந்து இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி உள்நுழைந்த இரு இந்தியப் படகுகளை நேற்றையதினம் இலங்கை கடற்படையினர் கைப்பற்றியதோடு

19

## சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் முன்னேற்றம் கண்டுள்ளோம்

*ஐ.நாவுக்கு இலங்கை பதில்*

19

## கைதான நபர்களை விடுவிக்குமாறு ரிசாத் அழுத்தம் கொடுக்கவில்லை

*தெரிவுக்குழு முன் இராணுவத் தளபதி சாட்சியம்*

கொழும்பு, ஜூன் 27
'உயிர்த்த ஞாயிறு தினமன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்னர், கைதுசெய்யப்பட்ட நபர்கள் எவரையும் விடுதலை செய்யுமாறு முன்னாள் அமைச்சர்

19

யாழில் பிரமாண்டமான வளாகத்தில்
One year Top Up Degree
UGC Recognized International Degree
www.blccampus.edu.lk
- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- BSc in Psychology
- Bachelor of Business in Banking & Finance
- B.Ed (Teaching of English as Second Language-TESL)

✓ தனித்துவமான உயர்கல்விச் சேவை.
✓ தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்

For more information: 0777 174 443



BLC CAMPUS
Entry requirement
HND / any Equal Qualification in the similar study
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk

தை மாதம் 10ஆம் திகதி ஜனவரி 24, 2020ஆம் ஆண்டு சனிபகவான் தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு நகர்கிறார். இந்த சனிப்பெயர்ச்சியால் தனுசு மகரம் கும்பம் ராசிக்காரர்களுக்கு ஏழரைச் சனி காலமாகும். விருச்சிக ராசிக்காரர்கள் ஏழரைச் சனியில் இருந்து விடுபடுகிறீர்கள்.




# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2020 - 2023

# துலாம்

சனிபகவான் இதுவரை துலாம் ராசிக்கு 3ஆம் இடத்தில் சஞ்சரித்தவர் இனி 4ஆம் இடத்தில் மகரம் ராசியில் 30 மாதங்கள் சஞ்சாரம் செய்வார். இது அர்த்தாஷ்டமச் சனி எனப்படும். இதை நினைத்து பயப்படவோ அல்லது கவலைப்படவோ வேண்டாம். அவரவர் பிறப்பு ஜாதகத்தை பொறுத்து இதன் தன்மை மறுபடும். எனவே அர்த்தாஷ்டமச் சனி நடக்கப் போகிறதே என்று ஒரு போதும் கவலையோ அச்சமோ படத்தேவையில்லை. வேலை, கல்வி, திருமணம், வருமானம் ஆகியவை எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம்.

உங்கள் ராசிக்கு நான்கு, ஐந்தாம் வீட்டுக்கு அதிபதியான சனிபகவான் 4ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் காலத்தில் இதுவரை வேலை இல்லாமல் இருந்தவர்களுக்கு வேலைக்கான வாய்ப்பும் சந்தர்ப்பமும் அமையும். எதிர்பார்த்த வேலை கிடைப்பதில் தாமதம் இருந்தாலும் முதலில் கிடைத்த வேலையை ஏற்று கொண்டு திருப்தியற்ற வேலையாக இருந்தாலும் திருப்தியாக செயலாற்ற வேண்டும். நான்காம் வீடு என்பது சுக ஸ்தானம், இந்த இடத்தில் அமரும் சனிபகவான் உங்கள் ராசியை பத்தாம் பார்வையாக பார்க்கிறார்.

மூன்றாம் பார்வையாக உங்கள் ராசிக்கு ஆறாம் வீடான ருண ரோக சத்ரு ஸ்தானத்தை பார்க்கிறார், ஏழாம் பார்வையால் உங்களின் தொழில் ஸ்தானத்தை பார்வையிடுகிறார்.

**வேலையை காதலியுங்கள்**

4ஆம் வீட்டில் சனி சஞ்சாரம் என்பது தொழிலில் தகராறு மற்றும் தொழிலில் நிச்சயமற்ற தன்மையை உருவாக்குவார். அதே சமயம் வேலையில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். உழைப்புக்கு அஞ்சாமல் வேலையில் சளைப்பில்லாமல் விரும்பி செய்யுங்க. உங்க வேலையை காதலித்தால்தான் அந்த வேலையில் நீங்கள் நீண்ட நாட்கள் நிலைத்து இருக்க முடியும். இல்லையெனில் வேலையில் அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டு வேலையை விட வேண்டியிருக்கும்.

வேலை காரணமாக சிலருக்கு இடமாற்றம் கிடைக்கும், வெளியூர், வெளிநாடு செல்லவேண்டியிருக்கும். பதவி உயர்வு நீண்ட இழுபறிக்குப் பின்னர் கிடைக்கும். வேலையின் காரணமாக உயர்வு ஏற்பட்டாலும் அதிக உழைப்பு குறைந்த வருவாய் என்ற சூழ்நிலையை சனி பகவான் உருவாக்குவார்.

**வீடு வண்டி வாகனம்**

நான்காம் இடம் தாய் ஸ்தானம் இந்த இடத்தில் சனி அமர்வதால் அம்மாவின் உடல்நிலை சற்று பாதிக்கப்படும். எனவே அம்மாவை அவ்வப்போது மருத்துவரிடம் காட்டி உடல்நலத்தை கவனிக்கவும். சமூகத்தில் இதுவரை இருந்த வந்த நிலை மாறி சற்று மதிப்பும் மரியாதையும் கூடும். இதுவரை இருந்து வந்த தேவையற்ற அலைச்சல்கள் குறைந்து ஒரு இடத்தில் நிலையாக இருக்க வாய்ப்பு அமையும். இடம் வாங்குவதற்கு வீடு வாங்குவதற்கு வண்டி வாகனம் வாங்குவதற்கு வாய்ப்புகள் தானாக வந்து சேரும்.

**கடன்கள் அதிகரிக்கும்**

ஆறாம் வீடான ருண ரோக சத்ரு ஸ்தானத்தை சனி பார்வையிடுவதால் இனம் தெரியாத நோய்கள் வந்து போகும் ஏதோ நோய் இருக்குமோ என்று நினைத்து அவதிப்பட நேரிடும். நேரத்துக்கு சாப்பிடுங்கள். சரியான, சத்தான உணவுகளை சாப்பிடுவதுதான் ஆரோக்கியத்திற்கு நல்லது. நெருங்கிய உறவினர்களை விட்டுப் பிரிய நேரிடும். எதிர்பார்த்த செய்திகள் தகவல்கள் சற்று தாமதித்து சாதகமாக வந்து சேரும். கேட்ட இடத்தில் கடன்கள் கிடைக்கும். கடன்கள் அதிகரித்து கொண்டே போகும்.

முழு திறமையை வெளிப்படுத்தினால் மட்டுமே பிரகாசிக்க முடியும். ஜெயிக்கவும் முடியும். புதிய முயற்சிகளை செய்ய வேண்டாம் வெற்றி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். சனிபகவானின் பார்வை உங்கள் ராசியின் மீது விழுவதால் உற்சாகமாக இருங்கள், வேலைகளை ஒத்திப்போடாமல் உடனே செய்து முடியுங்கள்.

**உழைத்தால் வெற்றி**

மாணவர்களுக்கு இந்த காலகட்டம் சோதனையான காலகட்டமாகும். உழைத்தால் மட்டுமே அதிக மதிப்பெண் பெற முடியும். எப்போதும் உற்சாகமாக, சுறுசுறுப்போடு இருந்தால் மட்டுமே நினைத்த மதிப்பெண்களை பெற முடியும், விரும்பிய கல்லூரிகளில் இடம் கிடைக்கும். விளையாட்டுகளில் கவனம் தேவை. கல்விக்கடன் கிடைப்பதில் இழுபறி ஏற்படும். தேவையற்ற நண்பர்களை வெட்டி விடுங்கள். சோம்பலை விரட்டி சுறுசுறுப்பாக இருங்க படிப்பில் ஜொலிக்கலாம்.


**பெண்களுக்கு மதிப்பு**

பெண்களுக்கு நல்ல வேலை கிடைக்கும், பதவி உயர்வும் தேடி வரும். ஆடை ஆபரண சேர்க்கை கிடைக்கும். கணவன் மனைவி உறவு உற்சாகமாக அமையும். மகிழ்ச்சி நீடிக்கும். பேச்சில் இனிமை கூடும். காதல் திருமணத்தில் முடியும், சிலருக்கு தடைபட்டு வந்த குழந்தை பாக்கியம் கிடைக்கும். உங்களின் பேச்சிற்கு மதிப்பு மரியாதை கூடும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். நிறைய ஓய்வு எடுங்க. வயிறு பிரச்சினைகள் வராமல் இருக்க நேரத்திற்கு சாப்பிடுங்க.

**சனிபகவானை சரணடையுங்கள்**

சனிக்கிழமைகளில் எள் எண்ணெய் தீபம் ஏற்றுங்கள். அம்மாவை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். தீமைகள் குறைந்து நன்மைகள் அதிகம் நடைபெறும்.

# தேங்காய் - ஜோதிடப் பலன்கள்



தேங்காய் உடைக்கும்போது தேங்காய் சரியாக உடையாமல் இருக்கலாம் அல்லது அழுகி இருக்கலாம். இது போன்ற சில நிகழ்வுகள் எம் மனதை சஞ்சலப்படுத்தும். எனவே, தேங்காய் எப்படி உடைந்தால் என்ன மாதிரியான பலன்கள் கிடைக்கும் என்பதைத் தெரிந்துகொள்வோம்.

- சிதறு தேங்காய் உடைக்கும்பொழுது சகுனம் பார்க்க வேண்டியதில்லை. தேங்காய் அழுகி இருப்பின் நினைத்த காரியங்கள் சற்று தள்ளிப் போகும்.
- நாம் அர்ச்சனைக்குக் கொடுத்த தட்டு மாறி வந்தால், அதை நாம் அபசகுனமாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.
- உடைக்கப்படும் தேங்காய், அது உடையும் முறையைப் பொறுத்து எமக்குப் பலன்களைத் தரும்.
- தேங்காய் சரிபாதியாக உடைந்தால் குடும்பத்தில் இருக்கும் மனக்கசப்புகள் நீங்கி குடும்ப ஒற்றுமை ஏற்படும்.
- தேங்காயின் மேல்பகுதி அதாவது கண்பாகம் உள்ள பகுதி பெரிதாகவும், அடிப்பகுதி சிறியதாகவும் உடைந்தால் இல்லத்தில் செல்வம் பெருகும்.
- கண்பகுதி சிறியதாகவும் கீழ்ப்பகுதி பெரியதாகவும் உடைந்தால் குடும்பத்தில் உள்ள பிரச்சினைக்கு உரிய விடயங்கள் தீர்ந்து இல்லத்தில் அமைதி பெருகும்.
- தேங்காய் உடைக்கும்போது ஒரு சிறிய பாகம் அதனுள் விழுந்தால், அதிர்ஷ்ட வாய்ப்புகள் நிச்சயம் உருவாகும்.
- உடைக்கும் தேங்காயின் உட்புறம் பூ இருப்பின் நினைத்த காரியம் கண்டிப்பாக நிறைவேறும், தேங்காய் நீளவாக்கில் இரண்டாக உடைந்தால் பிரச்சினைகள் உருவாகும் என்கின்றனர்.

## twitter

@deepanrdx

எல்லோரையும் போல
வாழ்வதற்கு நீ எதற்கு ?
அந்த எல்லோருமே
இருக்கிறார்களே ?

@deepanrdx

வேர்வை சிந்தாத வாழ்க்கையில் கடைசியில் கண்ணீர்தான் சிந்த வேண்டும்.

@sudhansts

ஞாயிற்றுக்கிழமை ஆடு, கோழிக் கெல்லாம் துக்க நாளாகவும் எமக்கு தூக்க நாளாகவும் அமைகிறது!

@sudhansts

உண்மையில் கூகுல் மேப் என்பது 'வழி' நிவாரணி..

@sudhansts

தமிழில் எழுதினேன் "இங்கிலீஷ் தெரியாதா? என்று ஏளனம் செய் தார்கள். இங்கிலீஷில் எழுதினேன் "தமிழன்தானே" என்று விமர்சித் தார்கள்... விசித்திரமான சமூகம்!



# சந்தானத்துடன் இணையும் கவுண்டமணி

தமிழ் சினிமாவின் காமெடி நடிகர்களில் தனக்கென்று தனி பாதையை உரு வாக்கியவர்களில் கவுண்டமணி முக்கியமானவர். சக காமெடி நடிகர்களிலி ருந்து கதாநாயகர்கள் வரை அனைவரையும் கலாய்த்து தள்ளுவது கவுண் டமணியின் பாணி.

அவருக்கு பின்னால் அதே பாணியை கையில் எடுத்தவர் சந்தானம்.


வடிவேலு திரைத்துறையில் இருந்து விலகிய காலகட்டத்தில் சந்தானத்தின் இந்த பாணி வரவேற்பு பெற்றது. காமெடி நடிகராக வலம் வந்த சந்தானம் தற்போது கதாநாயகனாக நடித்துவரும் நிலையில் அவர் நடிக்கும் புதிய படத் தில் கவுண்டமணியை நடிக்க வைக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பூமராங் படத்தை இயக்கிய கண்ணன் இந்தப் படத்தை இயக்குகிறார். கதா நாயகனாக நடிக்கும் போதும் சந்தானம் அனைவரையும் கலாய்த்து காமெடி செய்துவரும் நிலையில் கவுண்டமணி படத்தில் இணைந்ததால் யார் யாரை கலாய்ப்பர் என்ற கேள்வி எழுந்துள்ளது.

### ஆசி

சற்றே வேகத்தை நிதானமாக்கி
சாலையோர கோயிலைப்
பார்த்து ஒற்றைக் கையால்
கன்னத்தில் போட்டுக்கொண்டு
உடனடியாக வேகம் பிடிக்கும்
வாகன ஓட்டிகளை
துரத்திச் சென்று
பிடிக்க முடியாமல்
சாலையில் விழுந்து
உடைகிறது
கடவுள் வீசும் ஆசி!

- வாழ்க்கல நிம்மதி இல்லன்னா, கொசு கடிச்சாக் கூட அனுகுண்டு விழுந்தா மாதிரிதான் இருக்கும்!
- நினைப்பதற்கும் முடிப்பதற்கும் உள்ள கால இடைவெளியே வெற்றி தோல்வியை நிர்ணயிக்கிறது
- நினைப்பதற்கும் முடிப்பதற்கும் உள்ள கால இடைவெளியே வெற்றி தோல்வியை நிர்ணயிக்கிறது




### பசி

பசி என்ற உணர்வை அறியாத
பணக்காரர்களுக்கு பெருகிப் போனதும்
வயிறுதான்.

பசி என்ற ஒன்றைக் கண்டு
அஞ்சுபவர்களுக்கு சுருங்கிப் போனதும்
வயிறுதான்.

பீச், பார்க் என பெரும் செல்வந்தர்கள்
வயிற்றைக் குறைக்க ஓடுகிறார்கள்.

அவர்களைப் பணக்காரர்களாக்கிய பல
பசித்த தொழிலாளிகள் வயிறை நிறைக்க
ஓடுகிறார்கள்.

இந்த நாட்டில் நடக்கும் எல்லா தவறுகளின் பின்னாலும் இருப்பது ஒன்று நிறைந்த வயிறு இல்லை, பசியால் மெலிந்த வயிறு.

போலி மருந்து, போலிச் சாராயம், போலிச் சிரிப்பு, போலிக் கண்ணீர், போலி பாசம், போலி வாழ்க்கையென இந்தப் பெரிய தேசத்தில் எல்லாவற்றிலுமே போலி உண்டு, பசியைத் தவிர.



பசி

### தோல்வி

ஆலமரத்துக்குமா காதல் தோல்வி.
விழுதுகளாய் தாடி.

### சுவை

மருத்துவமனை படுக்கையில்
கிடப்பவருக்கு பார்க்க வந்தவர்கள்
தருகிறார்கள் இனிக்கும் பழங்களும்
கசக்கும் அறிவுரைகளும்....

### சோகம்

திருவிழா விருந்தோம்பில் மகிழ்ந்து
போனவர்களுக்கு தெரிந்திருக்குமா
விருந்தான ஆட்டின் சோகம்?



# பழம் தின்னாத குரங்கு...

மன்னர் கிருஷ்ணதேவராயர் அவையில், விகடகவியாக இருந்த தெனாலிராமனின் கோமாளித் தனத்தால், அரச சபை எப்போதும் குதுாகலமாக இருக்கும்.

ஒரு நாள் சபையில், காரசாரமாக விவதாம் நடந்துக் கொண்டிருந்தது. "பால் வேண்டாத பூனையும், பழம் தொடாத குரங்கும் உண்டோ அதுபோல, பணத்தை விரும்பாத மனிதனும் கிடையாது" என்று, சபையில் ஒருவர் கூறினார். அவர் சொல்வது தான் சரியென்று, மற்றவர்கள் தலையசைத்தனர்.


அப்போது, தெனாலிராமன், "உலகில் தேடிப் பார்த்தால், பால் குடிக்காத பூனையும், பழம் விரும்பாத குரங்கும், பணம் வேண்டாத மனிதரும் நிச்சயம் கிடைப்பர்" என்று கூறினான்.

அரசர் எரிச்சலுடன், "ராமா மறுத்துப் பேச வேண்டும் என்பதற்காக, எதை வேண்டுமானாலும் பேசாதே" என்று, கொஞ்சம் அதட்டலாகவே கூறினார்.

"அரசே இவற்றை நிரூபித்து விட்டால், எனக்கு என்ன பரிசு, தருவீர்" என்றான்.

"அப்படி நிரூபித்து விட்டால், ஆயிரம் பொன் தருகிறேன்; நிரூபிக்க முடியவில்லையென்றால், பதவியில் இருந்து நீக்கப்படு வாய்" என, கூறினார்.

சவாலை நிறைவேற்றுவதற்காகப் புறப்பட்டான், தெனாலிராமன்.



ஒரு பூனைக் குட்டியை வளர்த்தான். பாலை கொதிக்கக் கொதிக்கக் காய்ச்சி, அதன் முன் வைத்தான். ஆவலாக வாயை வைத்த பூனை, வாயைச் சுட்டுக் கொண்டு ஓடியது. அதன் பின், வெள்ளை நிறத்தில் எதைப் பார்த்தாலும், பயந்து ஓடியது.

அடுத்து, ஒரு குரங்கை வாங்கினான். அதை, நன்கு பழக்கினான். அந்தக் குட்டி குரங்கு, அவனையே வட்டமிட ஆரம்பித்தது.

ஒரு நாள் வாழைப்பழத்துக்குள், ஒரு நீளமான இஞ்சியை வைத்து, குட்டிக் குரங்குக்குக் கொடுத்தான்; ஆசையாகச் சாப்பிட்டது. ஆனால், சற்று நேரத்துக் கெல்லாம் தொண்டை எரிய ஆரம்பிக்கவே, அது தரையில் புரண்டு அலறியது. காறி உமிழ்ந்தது.

பச்சை வாழை, செவ்வாழை, மொந்தன் வாழை என, பல வகைப் பழங்களையும் இஞ்சி சொருகிக் கொடுத்தான். அது வாழைப்பழத்தைக் கண்டாலே, அலறி ஓட ஆரம்பித்தது.

அடுத்து, ஒரு ஊருக்குச் சென்றான். அந்த ஊரில், பரம ஏழை ஒருவன் இருந்தான். அவனை, சினேகம் பிடித்தான்.

அந்தப் பரம ஏழையிடம், "நீ, 24 மணி நேரமும், என்னுடனே இருக்க வேண்டும்; ஒருவேளை, சோற்றைக் கண்ணால் பார்க்காமல் இருந்தால், 10 பொன், நாள் பூராவும் பட்டினி கிடந்தால், 30 பொன், பட்டினி கிடப்பதாய் வெளியில் சொன்னால், பொன் தர மாட்டேன்; அப்படி நீ சொல்லி விட்டால், எனக்கு, 30 பொன், நீ தர வேண்டும் அல்லது உழைக்க வேண்டும்.

"இப்படி உன்னால் எவ்வளவு நாள் முடியுமோ, அவ்வளவு நாள் இருக்கலாம். முடியவில்லையென்றால், சொல்லி விடு, அதுவரை உள்ள வெகுமதியை வாங்கிக் கொள்ளலாம்; திருட்டுத்தனமாக ஒரு பருக்கையைச் சாப்பிட்டாலும், பரிசு கிடையாது

"நீ உயிரோடு இருக்க, குளிகைகள் தருவேன். உன்னால் முடியாது என்று சொன்ன பின், உன்னை மன்னரிடம் அழைத்துச் செல்வேன். அரசர் உனக்குப் பணம் தருவார். அதை நீ பெற்றுக் கொண்டால், நான் தந்ததை போல, மூன்று மடங்காகத் திருப்பி தர வேண்டும். அரசரிடமிருந்து பணத்தை வாங்க மறுத்தால், நீ பெற்றிருக்கும் வெகுமதியோடு, 100 பொற்காசுகள் சேர்த்து தருவேன். என்ன சொல்கிறாய்" என்றான் ராமன்.

நன்கு யோசித்தான் பரம ஏழை. 'வருமானம் இல்லாமல், தினமும் பட்டினி கிடக்கிறோம்; இங்கே ஒரு நாளைக்கு, 30 பொன்; 10 நாள் பட்டினி கிடந்தால், 300 பொன். மேலும் கூடுதலாக, 100 பொன் கிடைக்கும். கண்ணியமாக வியாபாரம் செய்து பிழைக்கலாம்.

"எதற்காகவோ அரசரிடம் அழைத்துப் போகிறேன் என்கிறானே! இவனில்லாமல் அரசரிடம் செல்வதால் என்ன பயன் 10, 20 பொன் தருவார்; ராமன் சொன்னபடியே செய்யலாம்" என்ற முடிவுக்கு வந்தான்.

குறிப்பிட்ட நாளில், அந்த ஏழை, பூனைக் குட்டி, குரங்குக் குட்டியுடன் அரச சபைக்குச் சென்றான், தெனாலிராமன்.

"அரசே இவரே பணம் வேண்டாத மனிதர்" என்று கூறி, ஏழையை அரசர் முன் நிறுத்தினான்.

ஒரு தட்டு நிறையப் பொற்காசுகளும், ஆபரணங்களும் எடுத்து வரச் சொல்லி, அந்த ஏழையின் எதிரே வைத்து, "தேவையானதை எடுத்துக் கொள்" என்று கூறினார் அரசர். "இதில் ஏதோ சூது இருக்கிறது" என்று நினைத்த ஏழை, "அரசே இந்தப் பொற்காசுகள் எனக்கு வேண்டாம்." என்று மறுத்து விட்டான்.

"என்னப்பா அதிசயமாக இருக்கிறது; எல்லாரும் பணத்துக்கு ஆவலாய் பறக்க, நீ மட்டும் ஏன் பெற்றுக் கொள்ள மறுக்கிறாய்..." என்று கேட்டார் அரசர்.

"அரசே பணத்தை தின்ன முடியுமா? பசி வந்தால் சோறு தானே வேண்டும். பணத்தை பார்த்தால், அதில் குழந்தையை, மனைவியை, அம்மா, அப்பாவைப் பார்க்க முடியுமா? என்னை சீக்கிரம் விடுங்கள்; நான் போக வேண்டும்" என்று கூறியபடியே அங்கிருந்து ஓடி விட்டான் ஏழை.

"தெனாலிராமா ஏன், இவன் இப்படிப் பேசுகிறான்" என்று கேட்டார் அரசர்.

"அதை அப்புறம் சொல்கிறேன் பால் குடிக்காத பூனை, பழம் தின்னாத குரங்கை பார்க்க வேண்டாமா" என்று கேட்டான்.

பூனைக்குட்டியையும், குரங்குக் குட்டியையும் அவையோர் முன் காண்பித்தான், தெனாலிராமன்.

ஒரு அகலமான பாத்திரத்தில், சுவையான பசுவின் பாலை எடுத்து வரக் கட்டளையிட்டார், பால் வந்தது. தெனாலிராமனின் பூனையோ, பாலைப் பார்த்தது தான் தாமதம், நாலு கால் பாய்ச்சலில் எகிறிக் குதித்து, ஓடியது.

குரங்கை ஒருவர் தடவிக் கொடுத்து, மலை வாழைப்பழத்தை உரித்து, அதன் வாய்க்கு முன் நீட்டினார். அவரைப் பிராண்டி விட்டு, அங்கிருந்து ஓடியது குரங்கு. போட்டியில் வெற்றி பெற்ற தெனாலிராமன், ஆயிரம் பொன்களைப் பெற்று, வீட்டுக்குச் சென்றான்.




## தெரிந்து கொள்வோம்

காண்டா மிருகத்தின் கொம்பு, மனிதனுக்கு ஊட்டம் அளிக்க வல்லது என்பது கிராம மக்கள் நம்பிக்கை. விஞ்ஞானம் இதைப் பற்றி முடிவு செய்யவில்லை.

ஆனால், காண்டாமிருகத்தின் கொம்பை, பொடி செய்து பானமாகத் தயார் செய்து பயன் படுத்துகின்றனர்.

முற்காலத்தில், காண்டாமிருக கொம்பாலான கோப்பையை அரசர்கள் உபயோகித்தனர். விஷம் கலந்த எந்த திரவத்தையும், இதில் ஊற்றினால், நிறம் மாறி விடும். அதனால், மன்னர்களின் உயிர் காக்கும் பாத்திரமாக, காண்டாமிருகக் கொம்புகள் இருந்துள்ளன.

## சரியான நிழலை இணைப்போம்





## பொன்மொழிகள்

- எல்லோரையும் நம்புவது அபாயகரமானது. ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் அபாயகரமானது.
- எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.
- தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது
- சண்டைக்குப் பின் வரும் சமாதானத்தை விட, என்றும் சண்டையே இல்லாத சமாதானம் தான் வேண்டும்.
- ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.
- நேற்றைய பொழுதும் நிஜமில்லை; நாளைய பொழுதும் நிச்சயமில்லை; இன்றைக்கு மட்டுமே நம் கையில்.
- அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து. அறிவை வளர்த்துக் கொண்டால் எல்லாவிதமான பயங்களும் அகன்று விடும்.

## வர்ணம் தீட்டுவோம்





## குறும்பு பண்ணாதே குட்டித் தம்பி


குட்டித் தம்பி குட்டித் தம்பி
குறும்பு பண்ணாதே- உந்தன்
சுட்டித்தனம் காட்டி இங்கே
குறும்பு பண்ணாதே!

அம்மா அப்பா சொற் கேட்டு
வாழ வேண்டும் நீ
அனைவருமே போற்றிடுவர்
நாளும் உன்னையே

ஆசானை நித்தமும் நீ
வணங்கிடல் வேண்டும்
அறிஞனாக உலகத்திலே
வலம் வரவேண்டும்

இறைவனிலே நம்பிக்கை
உனக்கு வேண்டும்
இல்லை என்று சொல்லாது
அருள் புரிவாரே

# நேர்மறையான செயற்பாடுகள் வெற்றிகளுக்கு வழிவகுக்கும்



அன்ரனி பீற்றர்

எந்தவொரு விடயத்தையும் நாம் எடுத்துக் கொண்டாலும் எதிர்மறையான எண்ணங்கள். வார்த்தைகள் அல்லது பேச்சுக்கள் அந்தச் செயற்பாட்டை முன்னெடுக்கையில் தடுமாற்றத்தை அல்லது குழப்பத்தை ஏற்படுத்தி விடுவதை நாம் அனுபவத்தின் வாயிலாக அறிந்திருக்கின்றோம். இதற்காகத்தான் எமது முன்னோர்கள் நற்காரியங்களைச் செய்கின்றபோது மங்கலகரமாக வாழ்ந்த குடும்பத்தினரை அல்லது குடும்பத்தின் தலைவரை தலைமையேற்று அந்த வைபவத்தை நடத்திடத் தெரிந்திருந்தார்கள். காரணம் அவர் எல்லோரின் மதிப்பைப் பெற்றவராகவும் அனுபவத்தில் முதிர்ந்தவராகவும் நேர்மறையான சிந்தனைகள் மூலமாக அவரின் வார்த்தையை எல்லோரும் ஏற்கின்ற நிலைக்ளிலே அந்த நிகழ்வுகள் சிறப்பாக அமைந்து காணப்பட்டன.

**கல்வியை எடுத்துக்கொண்டால்**

கல்வி கற்கும் ஒரு பிள்ளையை வீட்டிலோ பாடசாலையிலோ அல்லது மேலதிக வகுப்பிலோ அந்தப் பிள்ளையின் பெற்றோரோ ஆசிரியர்களோ அந்தப்பிள்ளை படிக்க மாட்டான் இதையெல்லாம் அவனாலே செய்ய இயலாது. அவன் படித்தாலும் சித்தியெய்த மாட்டான் என்று அவனைக் குத்திக்காட்டும் எதிர்மறையான வார்த்தைகளை உதிர்க்கக்கூடாது. அடிக்கடி அந்த மாணவன் கேட்கும்போது இந்தப் பேச்சுக்கள் கூடிய மனஅழுத்தத்தை ஏற்படுத்தி அவனுடைய செயற்பாடுகளை மட்டம் தட்டி கீழே இறக்கி விடுகின்றன. இதனாலே கல்வியாலே பாதிக்கப்படும் அவன் பிறழ்வான செயற்பாடுகளுக்கு ஆளாக்கப்பட்டு விடுகின்றான். ஆனால் ஒருசில மாணவர்கள் இந்த எதிர்மறையான வார்த்தைகளைச் சவாலாக ஏற்று யாரும் எதிர்பார்க்காமலே உயர்நிலையை அடைந்து காட்டியவர்களும் விதிவிலக்காக இருக்கவே செய்கிறார்கள். பெரும்பாலும் எதிர்மறையான பேச்சுக்கள் குழப்பங்களை உருவாக்கும் தீமையின் செயற்பாடுகளையே இடம்பெறச் செய்து விடுகின்றன. நேர்மறையான சிந்தனைகளே தடைகள், தோல்விகளையும் தாண்டி அவனது வெற்றிக்கு வழிகாட்டுகின்றன.

**சமூக வாழ்க்கையில்**

நேர்மறையான சிந்தனைகள், பேச்சுக்கள் என்னும்போது ஒத்த எண்ணப்பாடு என்றுகூடச் சொல்லலாம். இதன்மூலமாகவே முன்னேற்றகரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை நாம் காணலாம். ஒரு கயிறு இழுத்தல் போட்டியை எடுத்துக்கொண்டால் எந்தப் பக்கம் ஒத்த எண்ணம்கொண்ட பலசாலிகள் இருக்கின்றார்களோ அந்தப் பக்கமே வெற்றி இலக்கை அடைகிறார்கள். அதுபோல நிறைவான நேர்த்தியான தொடரான பயற்சிகளை எடுக்கின்றவர்களே போட்டிகள், பரீட்சைகள், சாதனைகளில் வெற்றிவாகை சூடுகின்றார்கள். இதற்குக் காரணம் எதிர்மறையான எண்ண அலைகளைவிட நேர்மறையான எண்ண அலைகளே. எனது முயற்சி வீண்போகாது, எந்தத் தடையும் என்னை ஒன்றும் செய்துவிடாது, நான் வெல்வேன் என்ற உற்சாகம் வெற்றி இலக்கை நோக்கி அவர்களை வழிப்படுத்துகின்றது. மாறாக எதிர்மறையான வார்த்தைப் பயன்பாடுகள் இடையூறுகள், தடைகள், அச்சுறுத்தல்கள் அவர்களை அடைகின்றபோது செயற்பாடுகளைக் கைவிட்டுப் பின்வாங்கச் செய்து தோல்வியை ஏற்படுத்துவதையும் காண்கிறோம். ஆனால் சமூகவெளியிலே இவற்றுக்கு விதிவிலக்காகவும் எதிர்மறைச் சிந்தனைகள் பேச்சுக்கான சவாலாக எடுத்து வெற்றி அடைவதையும் குறிப்பிடலாம். எனவேதான் நேர்மறையான சிந்தனைகள், பேச்சுகள் அவ்வாறே எதிர்மறையான எண்ணங்கள் வார்த்தைகள் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கின்ற சக்திகளாக இருக்கின்றன என்பதை உளவியலாளர்களும் குறிப்பிடுகின்றனர்.'

**அரசியலை நோக்கின்**

ஆரம்ப காலங்களிலே நேர்மறையான ஒத்த எண்ணங்களுடனே தமிழ்மக்களின் அரசியல் பயணங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தன. காலப்போக்கில் எதிர்மறையான எண்ண அலைகள் வீசியமையால் பிறழ்வுகள் ஏற்பட்டு கட்சிகளிடத்தில் பிரிவினைகள் ஏற்பட்டன. தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பேச்சுக்கள், உடன்படிக்கைகள், வாக்குறுதிகள் எல்லாம் காலாதிகாலமாக பேராண்மைக் கட்சிகளினாலே ஏமாற்றங்களை, பின்னடைவுகளை, தோல்விகளை ஏற்படுத்தின. இவ்வாறு தமிழ்க் கட்சிகளை எதிர்மறை எண்ணங்களுடன் ஏமாற்றுகின்றவைகளாகவே கடந்தகால அரசுகள் செயற்பட்டன. எனவே தற்காலம் வரை தமிழ்க்கட்சிகள் இதைத்தான் கேட்கும். அரசும் இதைத்தான் சொல்லும். இப்படித்தான் செய்யும் என்ற எண்ணப்பாடுகள் மக்கள் மனதிலே இடம்பிடித்து எதிர்மறை அதிர்வலைகளே மேலோங்கி நின்றன. எனவேதான் ஆயுதபலத்தால் இதனை முறியடிக்க இளைஞர்கள் இயக்கங்களாகி எதிர்மறை எண்ணங்களை முறியடித்து சுதந்திர வாழ்வைப் பெற்றிட முப்பது வருடங்களுக்கு மேலாக ஆயுதப் போராட்டத்தைக் கையில் எடுத்தார்கள். இங்கும்கூட எதிர்மறை எண்ணங்களின் சூழ்ச்சிகளே பெரும் பேறாகிமாறி அழிவுகளையும், இழப்புக்களையும், தோல்விகளையும் அனுபவிக்கச் செய்துவிட்டன. மாண்டுவிடாதவர் மீண்டெழுந்தாலும் மீண்டும் எமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள ஒத்தஎண்ணப்பாட்டுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக 99வீத அரசியல் பிரதி நிதித்துவத்தை தேர்தலிலே மக்கள் கொடுத்திருந்தார்கள். மக்கள் நேர்மறையாகச் சிந்தித்ததன் விளைவாகவே இதைக் கருதலாம். இலங்கை அரசியலிலும் சர்வ ஆதிக்கம் தோற்கடிக்கப்பட்டது. புதிய ஆட்சி 2015ஆம் ஆண்டு மலர்ந்ததும் நேர்மறையான ஒத்த எண்ணப்பாட்டின் இணக்கப்பாடு மூலமே தோற்றுவிக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டு ஒக்ரோபரில் ஜனநாயக வழிக்கு முரணாக எதிர்மறையாகப் பிரிந்திருந்தவர்கள் மீண்டும் நேர்மறையாக ஒன்றுபட்டதன் விளைவாகவே ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. பின்பும் நேர்மறையான ஒத்த செயற்பாட்டிலே வழக்குத் தொடுக்கப்பட்டு நீதிமன்றத் தீர்ப்பின்மூலம் வெற்றியும் கண்டு முன்னைய அரசே பதவிக்கு வந்துள்ளது. எதிர்க்கட்சி மாற்றப்பட்டுள்ள நிலையிலே புதிய அரசமைப்பு வரைவு வராது என்ற எதிர்ப்புக்கள் மத்தியிலே நாடாளுமன்றம் வரை அது வந்துள்ளது. வெல்வது தோற்பது என்பதுக்கும் அப்பால் தமிழ்மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் கொடுக்கப்படவேண்டும். அரசியல் சட்டரீதியாக என்ற எண்ணம் சட்டமன்றம் வரை வந்ததே 40 ஆண்டுகளின் பின்னர் ஒரு வெற்றியாகவே எண்ணப்படவேண்டும். அத்துடன் நாட்டுத் தலைமையை அரசைத் தீர்மாகிக்கும் சக்தி தமிழ்க் கட்சிகளிடமே இருந்தது, இருக்கிறது. இனிமேலும் இருக்கும் என்பதும் நோக்கப்படவேண்டிய ஒன்றாகும். இலட்சியங்கள் மாற்றமடையாது. ஆனால் காலத்துக்கு ஏற்ப வடிவங்கள் மாறலாம். தோல்வியின் படிக்கட்டுகளில் ஏறி நின்றுதான் வெற்றியின் இலக்கை அடையவேண்டும். தனித்துவாழ முடியாது. ஆனால் தனித்துவமாக வாழலாம். எதிர்மறைச் சிந்தனைகள் பிரித்துவைக்கும். நேர்மறையான சிந்தனைகள் சேர்ந்தியங்கும். அதுவே வெற்றிக்கும் வழிவகுக்கும்.

> **தமிழ்க் கட்சிகளை எதிர்மறை எண்ணங்களுடன் ஏமாற்றுகின்றவைகளாகவே கடந்தகால அரசுகள் செயற்பட்டன. எனவே தற்காலம் வரை தமிழ்க்கட்சிகள் இதைத்தான் கேட்கும். அரசும் இதைத்தான் சொல்லும். இப்படித்தான் செய்யும் என்ற எண்ணப்பாடுகள் மக்கள் மனதிலே இடம் பிடித்து எதிர்மறை அதிர்வலைகளே மேலோங்கி நின்றன. எனவேதான் ஆயுதபலத்தால் இதனை முறியடிக்க இளைஞர்கள் இயக்கங்களாகி எதிர்மறை எண்ணங்களை முறியடித்து சுதந்திர வாழ்வைப் பெற்றிட முப்பது வருடங்களுக்கு மேலாக ஆயுதப் போராட்டத்தைக் கையில் எடுத்தார்கள். இங்கும்கூட எதிர்மறை எண்ணங்களின் சூழ்ச்சிகளே பெரும் பேறாகி மாறி அழிவுகளையும், இழப்புக்களையும், தோல்விகளையும் அனுபவிக்கச் செய்துவிட்டன.**

**கட்டுரையாளர்**
**ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்**



## மணமகள் தேவை

மாகாண சுகாதார திணைக்களத்தில்
நிரந்தர அரச பணியிலிருக்கும்
38 வயதுடைய வாய் பேச முடியாத
தொழில்நுட்பவியலாளருக்கு பொருத்தமான
மணமகள் தேவை.

தொடர்பு : 077 465 8638

(IN 10552)(4.17)

ஓம் விராட் விஸ்வப்பரப்பிரம்மனே நமஹ

## விஸ்வகர்மா சிற்பக்கூடம்
### (பரம்பரை பஞ்சகம்மாளர்)

பரம்பரை விஸ்வகர்மாவால் காஸியப்ப சிற்பசாஸ்திரம், ஸ்ரீதத்துவநிதி, சிற்பச்செந்நூல், முதலான மூர்த்திதியான ஆதாரநூல்களின்படி தேவாங்குலமுறைப்படி, காற்புறவாய் அளவின்படியும் உற்ஸவமூர்த்திகள், சிலாவிக்கிரகம், கலஸங்கள், துவாஜஸ்ஸதம்பம், காண்டாமணிகள், குடைகள், சோட உபசாரங்கள், வெள்ளி, தங்க அங்கிகள், முதலான அனைத்துப் பொருள்களும் முறையாக சிற்ப சாஸ்திரப்படி செய்து தரப்படும். (உற்ஸவமூர்த்திகள் பின்னப்பட்டால் முறையாக செய்து தரப்படும்.) (CS 26297)(4.17)

விஸ்வஸ்ரீ -தியாகராஜா ரவிசங்கர் ஆச்சாரி
97/2, ST.JAMES ST.COLOMBO - 15
vkscentre@gmail.com 077 900 6584

### 50...

டாது என்ற நிபந்தையின் பெயரிலேயே நிரந்நர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக தொண்டர் ஆசிரியர்களாக இருந்தவர்கள் என்ற அடிப்படையில் இன்றைய தினம் நிரந்தர நியமனம் வழங்கப்படுவோர் பட்டியலில் எக்காலத்திலும் பணியாற்றாதவர்கள், வெளிநாடுகளில் இருந்து திரும்பியோர், கூலித் தொழிலை இறுதி வரை மேற்கொண்டவர்கள் உட்பட கடைச்சிப்பந்திகளின் பெயர் விபரங்களும் உள்ளடங்குவதாக குற்றம் சாட்டப்படுவதோடு 50 வயதினைக் கடந்தவர்களும் உள்ளனர் என்றும் கூறப்படுகிறது. இது தொடர்பில் செயலரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த பட்டியலில் உள்ள 50 வயதைக் கடந்தவர்களுக்கு ஓய்வூதியத்துக்கு உரித்தில்லை எனக் குறிப்பிட்டே நியமனம் வழங்கப்படுகின்றது.

அதேபோன்று ஏனைய குறைபாடுகள் தொடர்பில் தகவலாக கூறப்பட்டாலும் இதுவரையில் இருவர் தொடர்பில் மட்டுமே எம்மிடம் முறையிடப்பட்டுள்ளது.

அதனால் ஏனோயோரின் பட்டியலும் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளதால் இந்தப் பட்டியலில் தகுதியற்றவர்கள் இருப்பின் எவர் வேண்டுமானாலும் முறையிடலாம். அவ்வாறு முறையிட்டால் அது தொடர்பில் உரிய முறைப்படி விசாரணைகள் இடம்பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். '

(ம-105)

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 256
சீட்டிழுப்பு திகதி ▸ 26.06.2019 நீலம்

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| W | 26 31 65 | 02 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10, 688, 384/=

29.06.2019 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.ட சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

## தேவை

கணினி தட்டச்சு (ரைப்செற்றிங்), பக்கவடிவமைப்பு
தெரிந்தவர் எமது அச்சுக்கூடத்துக்கு தேவை.
உடன் விண்ணப்பிக்கவும்.
தலைவர், சிவபூமி தொழிற் பயிற்சி நிலையம்
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் .

### புலனாய்வுப்...

லெப்.ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்யும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நேற்று முன்னிலையாகி சாட்சியம் வழங்கிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர்க் காலத்தில் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பலர் உயிரிழந்திருக்கிறார்கள். அவர்களின் சாவு படைத்தரப்பைச் சரிவடையச்செய்யவில்லை - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3201 திகதி:2019.06.26 புதன்கிழமை
ஊதா
SATURDAY FORTUNE

| வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் |
|---|---|---|
| 05 10 22 30 A | 26 | 48,779,490/- |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>A என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 651
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.06.26
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 63,620,505/-
வெற்றி இலக்கங்கள் 09 17 36 64
ஆங்கில எழுத்து P
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>A என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

கோடிபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 460 சீட்டிழுப்பு திகதி: 2019.06.25
வர்ணம்: இளஞ்சிவப்பு செவ்வாய்க்கிழமை
A 05 08 32 42
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 129,045,043/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 26.06.2019 | 2547 | பச்சை |

கடகம்
வெற்றி இலக்கங்கள் 10 12 41 52
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,076,864/=
27.06.2019 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

### சாவுத்...

என்ற வகையிலும் ஆதரவு தெரிவிக்கப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

அத்தோடு அரசதலைவர் தான் கூறியதை ஒருபோதும் செய்வதில்லை என சுட்டிக்காட்டிய அவர் சாவுத் தண்டனையையும் செயற்படுத்த கூடாது எனப் பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சாவுத் தண்டனை வழங்குவதால் மட்டும் குற்றங்களை ஒருபோதும் குறைக்க முடியாது. சாவுத் தண்டனை குறித்து நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றார்.

(ம)

## உவகை கொண்டு வாழ்த்துகின்றோம்



### கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல்
SLAS LL.B., B.Com, MPA
பிரதிப் பணிப்பாளர் - நிர்வாகம்
சுகாதார சேவைகள் திணைக்களம்- வ.மா.
அவர்கள் நேற்றையதினம் (26.06.2019)
பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச
மாநாட்டு மண்டபத்தில்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின்
சட்டமாணிப் பட்டம் - LL.B
பெற்றதையிட்டு பெருமையுடன்
வாழ்த்தி மகிழ்கின்றோம்.
Congratulations
வாழ்த்துவோர்:
உள்ளூராட்சி சேவையில்
இணைந்து பணியாற்றிய நண்பர்கள்.
(IN/60777)(13.17)

உ
அம்பிகை துணை
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக



புங்குடுதீவு 04, பிட்டியம்பதி
## ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய மகோற்சவ காலத்தில் விரதமிருக்கும் அடியார்களுக்கான அறிவித்தல்

மேற்படி ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருப்பதால் இந்த ஆண்டுக்கான மகோற்சவ தினம் விகாரி வருடம் 29.06.2019 சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து (10) தினங்கள் முற்பகல் 11.30 மணிக்கு விஷேட வழிபாடுகளுடன் 08.07.2019 திங்கட்கிழமை நிறைவடையும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

அன்றைய தினம் பி.ப. 02.00 மணிக்கு ஆலய முன்றிலில் மகாசபைக் கூட்டம் நடைபெறவுள்ளதால் நிர்வாக சபையினர், மகா சபையினர் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

-ஆலய பரிபாலன சபை.

## Tribute to our LECTURER



| Born | Called to Glory |
|---|---|
| 08 | 25 |
| 03 | 05 |
| 1948 | 2019 |

**Kandasamy Sivaji**

We, the teacher trainees of Palaly teacher's college
were fortunate and had benefitted of your knowledge experience
and expertise in the field of education.
We were delighted by the heights you reached and kept in the
teaching of English.
Your memories shall always linger in our heart.

Head, Past Teacher trainees
2006 – 2008 Batch
Palaly Teacher's College

## University of Jaffna, SriLanka
## Faculty of Arts

### Walk- in- interview

Walk in Interview for the appointments of Temporary Assistant Lecturer in English Literature and Music (Vocal, Veena, Violin, Miruthangam) will be held on 09th July 2019 at 9.30am in the Mini Board Room of the Faculty of Arts, University of Jaffna

**Minimum requirements/Qualifications for the Post of Temporary Assistant Lecturer**

1. A degree with specialization in the relevant subject with first or second class (upper division) Honors.

   Or

2. A degree with specialization in the relevant subject with second class (Lower division) Honors.

   Or

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other degree with at least second class Honors and

   (b) a recognized postgraduate degree in the relevant subject.

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 40,324/ p.m (fixed) |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview for the above mentioned posts with educational and any other relevant certificates (originals) along with certified copies, National identity Card and self prepared application.

**Registrar**
**University of Jaffna**

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



27.06.2019
**விவேகானந்தன் பொன்ரதம்**

ஆண்டுகள் ஒன்பது கடந்தாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது
ஒவ்வொரு செயலும் உங்களை நினைவூட்டுகிறது
உங்கள் பிரிவு எங்களை வாட்டுகிறது
உங்கள் நினைவுடன் வாழும்

கணவர் - தி.விவேகானந்தன்
சகோதர, சகோதரிகள்,
சித்தி, பெறாமக்கள், மருமக்கள்.

(cs 26276)(13.17)

## அருள்மிகு
## காளியம்பாள் தேவஸ்தானம்
### கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
### பல வேலையாள் தேவை

மேற்படி தேவஸ்தானத்தில் பல வேலையாள் ஒருவர் கடமை புரிய தேவைப்படுகின்றது. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். தங்குமிட வசதி தேவைப்பட்டால் ஒழுங்கு செய்து தரப்படும். விண்ணப்பத்தினை தலைவர், அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

(CS 26289)(14.17)

**செயலாளர்.**

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர் **ச.திலீபன்**
அவர்களது மாமியார்
**திருமதி**
**மரியதிரேஸ் பேரின்பம்**
அவர்கள் 25.06.2019 அன்று காலமானார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - ஆசிரியர் வட்டம்**

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## காண்டீபன் விபூசினி

திதி : 27.06.2019

ஆண்டு ஒன்று சென்றதம்மா
ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறாத துயரத்தை தந்து நீ
சென்றுவிட்டாய்
பூத்துக்குலுங்கிய எங்கள் குடும்பம்
கண்ணீர் பூக்களால்
நிறைந்து விட்டதம்மா
எங்கு பார்த்தாலும் உன்
புன்னகை பூத்த முகம் தெரியுதம்மா
மீண்டும் புன்னகை பூத்த மலராக
வருவாய் என விழியோரம்
வழியும் கண்ணீருடன்
காத்திருக்கின்றோம்.

குடும்பத்தினர்.

## தேவை

யாழ்ப்பாணத்தில் பில் கிளாக், பொதியிடல், சமையல் உதவியாளர் என்பவற்றிற்கு பெண் வேலையாள்கள் தேவை. **077 174 6101**

## வேலையாள்கள் தேவை

ஐஸ்கிறீம் விற்பனையாளர்கள் தேவை. தங்கிநின்று வேலை செய்யக்கூடிய வெளி மாவட்டத்தவர்கள் விரும்பத்தக்கது.

**077 369 6713, 076 029 0832**

## கருங்கற்கள் தேவை

01. 6/9" கற்கள்
02. 4" கற்கள்
03. 1 ½" சல்லி
04. ¾" சல்லி
05. ½" சல்லி
06. கருங்கல் டஸ்ற் (Dust)

(CS 26295)(14.17)

**தொடர்பு: 076 866 3944**
(திங்கள் முதல் சனி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை மட்டும் தொடர்புகொள்ளவும்.)

## வேலையாள்கள் தேவை

- பில் கிளார்க்
- Rolls சுற்றுபவர் (ஆண், பெண்)
- சப்ளையர்ஸ்
- Ice Cream Room இல் வேலை செய்பவர்.
- Ice Ceram தயாரிப்பவர்.

(CS 26286)(14.17)

**077 267 2888**


## பெயர்மாற்றம்

**ஆறுமுகம் சோமாலி** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **ஆறுமுகம் செபமாலை** என மாற்றம் செய்வதோடு இனி வரும் எல்லா ஆவணங்களிலும் செபமாலை என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**ஆறுமுகம் செபமாலை.**

E.S Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 . 04 . 1928 | 25 . 06 . 2019 |

## குமாரவேலு விசுவலிங்கம் கந்தசாமி
### (தொண்டர்) B.Com, Dip in Co.op
**(முன்னாள் பொதுமுகாமையாளர், சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)**

பணிப்புலம், பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குமாரவேலு விசுவலிங்கம் கந்தசாமி (தொண்டர்) 25.06.2019 செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.06.2019) புதன்கிழமை கனடாவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

அன்னாரது அஞ்சலி நிகழ்வு வரும் 29.06.2019 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மறுமலர்ச்சி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 . 05 . 1953 | 25 . 06 . 2019 |

## துரைராசா சந்திரசேகரம்
### (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

62, பொன்னம்பலம் வீதி, அரியாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா சந்திரசேகரம் 25.06.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், பிறேமா, தர்மசேகரம் புஸ்பா, புனிதா (ஆசிரியை, யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை) காலஞ்சென்ற சோமசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரியின் மைத்துனரும், லக்ஸ்மன், தர்சன், கார்த்திகா, தர்ஷிகா காலஞ்சென்ற வசிகரன் ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**62, பொன்னம்பலம் வீதி,**
**அரியாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 245 6781**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அரசமைப்பையல்ல ஆளைத்தான் மாற்றவேண்டும்

ஆட்டைக்கடிச்சு, மாட்டைக்கடிச்சுகடைசியிலமனிசனக் கடிச்சு.... என்றொரு சொல்வடை உண்டு. அதே போன்று நாட்டின்தற்போதைய நிலைக்கு அது காரணம் இது காரணம்என்றுகூறிவந்தஅரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன கடைசியில் இந்த அரசமைப்புத் திருத்தங்கள்தான் எல்லாப் பிரச்சினைக்கும் காரணம் என்று திருவாய் மலர்ந்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்தபன்னாட்டு மண்டபத்தில்நடத்தப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரசதலைவர் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்திருக்கிறார். சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் அரசமைப்பின் 18ஆவது மற்றும் 19ஆவது திருத்தங்களைஒழிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவினால் கொண்டுவரப்பட்டது 18ஆவது திருத்தம். அது ஏகாதிபத்திய அதிகாரத்தை நோக்கி நாட்டை அழைத்துச் சென்றது என்று குற்றஞ்சாட்டியிருக்கும் மைத்திரிபால, 19ஆவது திருத்தம் நாட்டில் பலமான அரசு ஒன்று ஏற்படுவதைத் தடுத்திருக்கின்றது என்றும் குற்றஞ்சாட்டியிருக்கிறார். இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருதில் ஒரு பங்காளியாக இருந்தவர் மைத்திரிபால சிறிசேனவே.

இந்தத் திருத்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட மிகமுக்கிய மான்பணி, அரசதலைவரின்அதிகாரங்களைவெட்டிக்குறைத்தமை. ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர மற்றெல்லா அதிகாரங்களையும் கொண்டிருக்கிறது என்று முன்னாள் அரச தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன வர்ணித்த நிறைவேற்று அரச தலைவர் பதவியின் அதிகாரங்களை வெட்டிக்குறைத்து அதனை ஓர் அலங்காரப் பதவியாக மாற்றியமைதான் 19ஆவது திருத்தத்தின் ஆகக்கூடுதலான அடைவு.

அப்படித்தனது அதிகாரங்களைவெட்டிக்குறைத்ததன்மூலம் தான் விரும்பக்கூடிய, தனது சொல்லுக்குத் தலையாட்டக்கூடிய ஆட்சி ஒன்றை ஏற்படுத்த முடியாமல் போய்விட்டமையால்தான் நாடு இன்று நிலையான, பலமான ஆட்சி ஒன்றை ஏற்படுத்தமுடியாமல்போய்விட்டது என்பதுதான்அரசதலைவர் கூறுவதன் சாராம்சம்.

ஆனால், அடிப்படையில் அவர் ஒன்றை மறந்துவிட்டார். 19ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்காகத்தான் மைத்திரி அரச தலைவராக்கப்பட்டார். இல்லையேல் அவருக்கு அந்தப் பதவி கிடைத்திருக்க வாய்ப்பில்லை. ஆட்சியிலும் இத்தகையகுழப்பங்கள்ஏற்பட்டிருக்கப்போவதில்லை. நிறைவேற்ற அரச தலைவர் பதவியை ஒழித்து நாடாளுமன்றத்தின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்காக நிலைமாறு காலத்தின் காபந்து அரச தலைவராகச் சத்தம் சந்தடியற்று இருக்க வேண்டும் என்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் மைத்திரிபால சிறிசேன.

ஆனால், உயரப் பறந்த ஊர்க்குருவி தன்னைப் பருந்தாகவே எண்ணிக்கொண்டதன்விளைவாகநிறைவேற்றுஅதிகாரஅரச தலைவர் பதவிக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையிலான அதிகாரப் போட்டி தொடங்கியது. நாடு பல அரசியல் முரண்பாடுகளைக் கண்டது.

ஆக மொத்தத்தில் 19ஆவது திருத்தத்தில் தவறல்ல, அந்தத் திருத்தைஅடைவதற்காகக்கொண்டுவந்துஅமர்த்திய ஆளில்தான் பிழை. நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க வந்தவர், வழக்கம்போல தனக்கு முந்தைய அரச தலைவர்களைப் போன்றே அந்தப் பதவியின் அதிகாரப் போதையில் சிக்கிக் கொண்டு அதை ஏன் விட்டுக்கொடுக்கவேண்டும் என்று சிந்திப்பதன் விளைவாகவே நாட்டின் சகல பிரச்சினைகளும் தோற்றம் பெற்றன.

எனவே 18ஆவது 19ஆவது திருத்தங்களை ஒழிப்பதைவிட பதவியில் இருப்பவரை அதிலிருந்து துரத்திவிட்டால் போதுமானது.

# தனி வழியில் செல்வதே தமிழருக்கு ஒரே தெரிவு

சேரலாதன்



அரச தலைவர் தேர்தல் அநேகமான நவம்பர் மாதத்துக்குள் இடம்பெறவுள்ளது என்று தெரியவந்துள்ளது. அரசமைப்பின் பிரகாரம் டிசெம்பர் 7ஆம் திகதிக்குள் இந்தத் தேர்தல் நடத்தி முடிக்கப்படல் வேண்டும். ஆகவே நவம்பர் மாதத்தில் இருந்து இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடு உள்ளதென்றே நம்ப முடிகின்றது.

ஆனால் நாட்டின் பிரதான கட்சிகள் தமது வேட்பாளர் தொடர்பாக இதுவரையில் உறுதியாகத் தெரிவிக்கவில்லை. மகிந்த அணியின் சார்பாக கோத்தபாயவின் பெயர் நீண்ட காலமாக அடிபட்டு வருகின்ற போதிலும் அது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை. தமது கட்சியின் வேட்பாளரை செப்ரெம்பர் மாதமே அறிவிக்கவுள்ளோம் என்று மகிந்த கூறியிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தற்போதைய அரச தலைவர் அரசமைப்பின் பிரகாரம் இன்னொரு தடவையும் தேர்தலில் போட்டியிட முடியும். ஆனால் போட்டியிடுவது தொடர்பான அறிவித்தல் அவர் பக்கமிருந்து இதுவரையில் தெளிவாகத் தெரியப்படுத்தப்படவில்லை. ஆனால் அரச தலைவர் தேர்தல் தொடர்பாக மகிந்த தரப்பினருடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார் என்று தகவல்கள் கசிந்துள்ளன. இந்தத் தேர்தலில் மும்முனைப்போட்டி இருக்காதென அரச தலைவர் தெரிவித்துள்ளதால் மகிந்த தரப்பிலிருந்து ஒருவர் அல்லது சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகக் களத்தில் இறக்கப்படுவதற்கான சாத்தியங்களே அதிகமுள்ளன.

> கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் கூட்டமைப்பில் ஆதரவு கிடைத்தால் மகிந்தவை வெற்றி கொள்வதற்கு மைத்திரியால் முடிந்தது. ஆனால் தற்போது அந்த நிலையில் அவர் இல்லையென்பது அவருக்கும் நன்கு தெரியும்.

### ஐ.தே.கவுக்குள் பிரிவு

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரையில் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பதிலாக சஜித் பிரேமதாச அல்லது கருஜயசூரிய போட்டியிடுவதையே அந்தக்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் விரும்புகின்றனர் என்று தெரிகின்றது. கருஜயசூரிய சிறிதுகாலம் மகிந்தவுடன் இணைந்து பணியாற்றியவர் என்பதால் அவர் மீது கட்சிக்குள் முழு நம்பிக்கை இல்லையென்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மறைந்த முன்னாள் அரச தலைவரான ஆர்.பிரேமதாசவின் மகனான சஜித் பிரேமதாசவுக்குக் கட்சிக்குள் நல்ல செல்வாக்கு உள்ளது. தந்தையின் வழியில் அவர் கிராமங்களில் வீட்டுத் திட்டங்களை அமைத்து ஏழை மக்களுக்கு வழங்கி வருவதால் கிராமப் புற மக்களின் செல்வாக்கு அவருக்கு அதிகளவில் உள்ளது. அதுமட்டுமல்லாது அவரொரு சிறந்த கட்சி விசுவாசியாகவும் அரசிலில் நேர்மையாளராகவும்விளங்கி வருகின்றமை அவரது தகுதியை மேலும் அதிகரித்துள்ளது. அவரை அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக நியமித்தால் தாம் அவருக்கு ஆதரவு வழங்கப்போவதாக மைத்திரிபால சிறி



சேன ஒரு கட்டத்தில் குறிப்பிட்டதை நினை வில் கொள்ள வேண்டும்.

### நிலமை தலைகீழ்

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் கூட்டமைப்பில் ஆதரவு கிடைத்தால் மகிந்தவை வெற்றி கொள்வதற்கு மைத்திரியால் முடிந்தது. ஆனால் தற்போது அந்த நிலையில் அவர் இல்லையென்பது அவருக்கும் நன்கு தெரியும்.

தமிழர்கள் தமது ஜனநாயகக் கடமைகளை ஒரு போதுமே புறம்தள்ளிவிட முடியாது. அரச அதிபர் தேர்தலிலும் அவர்கள் அதை நிறைவேற்றியே ஆகவேண்டும். ஆனால் கடந்த தடவை அவர்கள் விட்ட தவற்றை மீண்டும் செய்வதற்கு முன்வரக் கூடாது. ஏனென்றால் மகிந்த மகிந்தவைப் புறமொதுக்கி விட்டு மைத்திரிக்கு ஆதரவு வழங்கியதால் எந்த நன்மையும் அவர்களுக்குக் கிடைத்துவிடவில்லை. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஒருபோதுமே அரச தலைவராகவர முடியாதவாறு இந்த நாட்டின் அரசமைப்பு இறுக்கமான முறையில் வரையப்பட்டுள்ளது. வேட்பாளர் ஒருவர் 50சதவீதத்துக்கும் மேலான வாக்குகளைப் பெறும்போது தான் தேர்தலில் வெற்றியீட்ட முடியுமென அரசமைப்பில் கூறப்பட்டுள்ளது.

### பலத்தை காட்டலாம்

ஆனால் சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் இது சாத்தியமானதல்ல. ஆகவேதான் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவருக்குத் தமது வாக்குகளை அளிக்கவேண்டிய கட்டாயத்திலுள்ளனர். இதற்கு மாற்றீடாக சிறுபான்மையினர் பொதுவானதொரு வேட்பாளரைத் தேர்தலில் நிறுத்த முடியும். வெற்றி கிடைக்காது போனாலும் சிறுபான்மையினரின் பலத்தைக் காண்பிக்க முடியும். தமிழர்கள், முஸ்லிம்கள் மலையகத் தமிழர்கள் ஒன்றிணையும் போதுதான் இது சா்ததியமாகும். ஆனால் இது சாத்தியமாகுமா?என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

கல்முனையில் முஸ்லிம்கள் தமிழர்களுக்கு எதிராகக் கிளம்பி நிற்பதைப் பார்க்கும்போது அவர்களுடன் உறவைப்பேணுவது தொடர்பாகத் தமிழர்கள் சிந்திக்க முடியாதுள்ளது. கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதையே முஸ்லிம்கள் நோக்கமாகக் கொண்டுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது.

அதுமட்டுமல்லாதுகொ்டிய போர் ஒன்றுக்குத் தமிழர்கள் முகம்கொடுத்தபோது முஸ்லிம்கள் என்ன செய்தார்கள் என்பதையும் நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மலையக் தலைமைகள் எந்த வகையிலும் அரசுடன் இணைந்துபதவிக்ளைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இவர்களை நம்பி இவர்களுடன் கூட்டணி அமைக்க முடியுமா?

### தனிவழி சிறப்பு

பேரினவாதிகளுக்குப் பின்னால் செல்வதைத் தமிழர்கள் இனியாவது தவிர்த்துக்கொள்ள வேண்டும். மத்தியில் ஆட்சி புரிபவர்களால் தமக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

எதிர்வரும் அரச தலைவரைத் தெரிந்தெடுப்பதற்கான தேர்தலில் தமிழர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவர் வேட்பாளராக நிறுத்தப்படல்வேண்டும். வெற்றியை எதிர்பார்த்து இது இடம்பெறக்கூடாது. பேரினவாதிகளுக்குப் பின்னால் செல்வதைத் தவிர்ப்பதற்கும் தமிழர்களின் பலத்தை வெளிப்படுத்துவதற்கும் இதுவே சிறந்ததொரு சந்தர்ப்பமாகும்.

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்
# செய்திகள்

09
வியாழக்கிழமை 27 ஜூன் 2019

### முல்லைத்தீவில் தங்கியுள்ள
## தென்பகுதி கடற்தொழிலாளர்களால் வடபகுதியின் கடல் வளம் பாதிப்பு!
### அரச அதிகாரிகளிடம் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜூன் 27

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் தங்கியிருந்து தொழில் புரிந்துவரும் தென்பகுதிக் கடற்தொழிலாளர்களால் வடமாகாணத்தின் கடல்வளம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது என்று சுண்டிக்குளம் கடற்தொழிலாளர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் மனுக் கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட சாலைப்பகுதியில் தங்கியுள்ள தென்னிலங்கை கடற்தொழிலாளர்கள் 500ற்கும் மேற்பட்ட படகுகள் வைத்து தொழில் செய்து வருகின்றார்கள். இவர்களுக்கான தொழில் அனுமதி கடற்தொழில் அமைச்சினால் கொடுக்கப்பட்ட போதும் அட்டை பிடிப்பு என்ற பெயரில் அனுமதியினை பெற்று சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதால் வடக்கில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

40 குதிரைவலுகொண்ட இயங்திரங்களைப்பாவித்து தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிக்கின்றனர். கரைவலை தொழில்செய்யும் மீனவர்களின் வலைகளை வெட்டுவதும், கடலில் சங்குகளை எடுப்பதும், பெரிய ஆயுதங்களால் மீன்களைக் குத்திப்பிடிப்பதும், சுருக்கு வலைகளை பயன்படுத்துவதும், குண்டுவைத்து மீன்களை பிடிப்பதும் போன்ற செயல்களில் அவர்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர். எனவேமிகவிரைவாக அவர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிடின் மிக விரைவில் பெரியதொரு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிவரும் என்றவாறாக அவர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர். (ம-105)



### திருகோணமலையில் இன்று பற்பல நிகழ்வுகளில் ரணில்

கொழும்பு, ஜூன் 27

திருகோணமலை மாவட்டத்துக்கு நாளை 27ஆம் திகதி வியாழக்கிழமை பயணம் மேற்கொள்ளும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தம்பலகாமம் சுகாதார மருத்துவமனைக்கு இன்று அடிக்கல் நடவுள்ளார். அத்துடன், வீதித் திறப்பு விழா மற்றும் இடம்பெயர்ந்த மக்களுக்கான குடியேற்ற வீடுகளைத் திறந்து வைத்தல், வீட்டுப் பயனாளிகளுக்கான பத்திரங்கள் வழங்கல், ஆசிரிய நியமனம் வழங்கல் ஆகிய நிகழ்வுகளிலும் அவர் கலந்து கொள்கிறார்.

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், மறுவாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் செயற்படுத்தப்படும் இந்த அபிவிருத்தித் திட்டங்களில், தம்பலகாமம் ஆரம்ப சுகாதார நிலையம் 75 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. காலை 11 மணியளவில் தம்பலகாமம் சுகாதார நிலையத்துக்கு அடிக்கல் நடப்படும். அடுத்து, வடக்கு - கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டு உள்நாட்டுக்குள் இடம்பெயர்ந்த மற்றும் இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்து நாடு திரும்பிய வர்களுக்கான வீட்டுத்திட்டத்தின் முதல் கட்டத்தில் தம்பலகாமம் பொற்சோலை கிராம சேவையாளர் பிரிவில் அமைக்கப்பட்ட வீடுகள் திறந்து வைக்கப்படவுள்ளன. முதல் கட்டத்தில் தலா 10 இலட்சம் பெறுமதியான 400 வீடுகள் திருகோணமலை மாவட்டத்தில் வழங்கப்பட்டிருந்தன.

அதே நேரம், 113 மில்லியன் செலவில் மறுசீரமைக்கப்பட்ட சர்தாபுர கன்னியா வீதி, 90 மில்லியன் செலவில் மறுசீரமைக்கப்பட்ட கன்னியா இலுப்பைக்குளம் வீதி, மற்றும் 2 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இலுப்பைக்குளம் ஏ.பி.சி வீதி ஆகியனவற்றையும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க திறந்து வைக்கிறார்.

அதேநேரம், மாலை 2 மணிக்கு திருகோண்மலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீண்டகாலமாக தொண்டர் அடிப்படையில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வில் தலைமை அமைச்சர் தலைமை அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன், வடக்கு - கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டு உள்நாட்டுக்குள் இடம்பெயர்ந்த மற்றும் இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்து நாடு திரும்பியவர்களுக்கான வீட்டுத்திட்டத்தின் 2ஆம் கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 600 பயனாளிகளுக்கான பத்திரங்கள் வழங்கும் நிகழ்விலும் கலந்து கொள்கிறார். இந்த நிகழ்வு, திருகோணமலை உவர்மலை விவேகா னந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் கிழக்கு மாகாண ஆளுநர், மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலர்கள், மேலதிக மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், திட்டமிடல் பணிப்பார்கள், உதவித்திட்டமிடல் பணிப்பாளர்கள், மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம)

### முல்லையில் 30ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம்
#### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று அறிவிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 27

முல்லைத்தீவில் எதிர்வரும் 30ஆம் திகதியன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அறிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாகப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று செய்தியாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்த அவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதி முல்லைத்தீவில் போராட்டமொன்றை முன்னெடுக்கப்போவதாக அறிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி ம.ஈஸ்வரி இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் 41ஆவது அமர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. கடந்த 40ஆவது அமர்விலும் காணாமல் போனவர்கள் தொடர்பில் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. நாங்கள் இந்த போராட்டத்தினை தொடர்ச்சியாக செய்து கொண்டிருக்கின்றோம் என்பதைக் காட்ட வேண்டும்.

நாங்கள் பத்து ஆண்டுகளாக காணாமல் போனவர்களை தேடி வருகின்றோம். எங்களுக்காக எந்த அரசியல் பிரதிநிதிகளும் போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. எங்களைப்பற்றி எடுத்துக் கதைப்பதற்கு கூட நாதியற்றவர்களாக இருக்கின்றோம். எங்கள் தொடர்பான செய்திகளை மீள்நினைவுபடுத்துவதற்கு இந்தப் போராட்டம் அவசியமானது - என்றார். (மரி3)

### கடுவெல ரயில் பாதைகளை அமைக்கும் பணி விரைவில்

கொழும்பு, ஜூன் 27

கடுவெலயிலிருந்து கொழும்பு நகர் வரையிலான தொடருந்துப் பாதையை அமைக்கும் பணிகள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜூலை 03ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளன என்று பெரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாணந்துறையில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

கடந்த ஆட்சியாளர்கள் அதிவேக வீதி, வானூர்தி நிலையங்கள் மேம்பாலங்கள் ஆகியவற்றின் நிர்மாணப்பணிகளில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டனர். எனினும் திட்டங்கள் சரியான முறையில் மக்களை சென்றடையவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## சரவணபவன் எம்.பியின் நிதியில் இந்துக் கல்லூரியில் புதிய அரங்கு
### சிறப்புற நடந்தது அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலின் பார்வையாளர் அரங்குக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் கூடைப்பந்தாட்டத் திடலுக்கான அடிக்கல்லை நட்டார்.

இந்த நிகழ்வு கல்லூரி அதிபர் சதா.நிமலன் தலைமையில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினரைத் தொடர்ந்து அதிபர் உட்பட கல்லூரிச் சமூகத்தினரும், சமுர்த்தி அலுவலர்களும் அடிக்கற்களை நட்டனர். கூடைப்பந்தாட்டப் பயிற்சிகளில் ஈடுபடும் மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் நாடாளுமன்ற உறுப்பினருடன் இணைந்து ஒளிப்படங்களையும் எடுத்துக்கொண்டனர். கிராம எழுச்சித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்த கூடைப் பந்தாட்டத் திடலுக்கான நிதியை ஒதுக்கியுள்ளார். அங்கு மலசலகூடம் அமைப்பதற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நிதியுதவி வழங்கியுள்ளார் என்று பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்ததுடன்,



நாடாளுமன்ற உறுப்பினருக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர். (எ-21)

# முல்லை மதுபான நிலையத்தை திறக்குமாறு பணித்தது ஆளுநரே

## ஒருங்கிணைப்புக் குழுவில் அம்பலம்
## மீண்டும் மூடுவதற்கு தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கிய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த வருட ஆரம்பத்தில் மூடிய மதுபானச்சாலை, ஆளுநர் சுரேன் ராகவனின் உத்தரவின் பெயரில் இயங்கியமை முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அம்பலமானது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முறையான அனுமதிகள் இன்றி மறைமுகமாக அனுமதிகளைப் பெற்று இயங்கிய மதுபானசாலை தொடர்பில் கடந்த ஆண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கடுமையாக விவாதிக்கப்பட்டு இறுதியில் அந்த மதுபானசாலையை மூடுவதாக தீர்மானிக்கப்பட்டது.

அந்த தீர்மானத்தின் பிரகாரம் இந்த ஆண்டு ஆரம்பத்தில் மூடிய மதுபானச்சாலை மீண்டும் எதன் அடிப்படையில் இயங்குகின்றது? இதற்கு யார் அனுமதி வழங்கினார்கள்? என்று நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா கேள்வி எழுப்பி, மாவட்டச் செயலர் பதிலளிக்க வேண்டும் - என்றார்.

குறித்த மதுபானசாலையில் 2 கோடி ரூபா இருப்பு இருந்தமையினால் அதனைத் திறப்பது தொடர்பில் ஆளுநர் செயலகமே எழுத்தில் கடிதம் அனுப்பியது. அதனடிப்படையில் அதை மீண்டும் திறக்க அனுமதிக்கப் பட்டது என்று கரைதுறைப்பற்று பிரதேச செயலர் உண்மையைப் போட்டுடைத்தார். அதனால் அதன் பின்னணி யார் என்பது அங்கு வெளிப்பட்டது.

அங்கு பலமான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட நிலையில், குறித்த மதுபான சாலையை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் தெரிவித்தார். அது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (த-105)

## பொதுக்கூட்டம்

அளவெட்டி,ஜூன் 27

யாழ்ப்பாணம் சங்கானை பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் தலைவர் த.இராசகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஐ-63)

## சட்டவிரோத மணல்: கைதான சாரதிக்கு பிணை

கொடிகாமம்.,ஜூன் 27

அனுமதிப்பத்திரமின்றி மணல் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் கைதான உழவு இயந்திர சாரதி ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 15 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டதுடன், உழவு இயந்திரமும் கைப்பற்றப் பட்டது.

கைது செய்யப்பட்ட கைதடி நுணாவில் வாசியை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ-159)

## அலங்கார உற்சவம்

வவுனியா,ஜூன் 27

வவுனியா நொச்சி மோட்டை சிறி அருள்மிகு கருங்காலியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளைமறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 9 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

தினமும் முற்பகல் 10 மணிக்கு சிறப்பு அபிசேகம் நடைபெறும். மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று விநாயகப் பெருமான் உள்வீதி, வெளி வீதி வலம் வருவார்.

அத்துடன் பிரசாதமும் வழங்கப்படும்.

குடமுழுக்கு தினமான எதிர்வரும் 8 ஆம் திகதி 108 சங்காபிஷேகம் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

### நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் கொலை:

# கமல், அனிதாவின் மீது குற்றப்பத்திரம் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 27

நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளரான ரஜீவ் என்று அழைக்கப்படும் டானியல் றெக்சியன் கொலை வழக்கில், ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரான கமலேந்திரன் மற்றும் றெக்சியனின் மனைவி அனிதா ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் கொலை வழக்கின் சுருக்கமுறையற்ற விசாரணைகள் நிறைவடையாத சந்தர்ப்பத்தில், சட்ட மா அதிபர் தனக்கு இருக்கும் அதிகாரத்தின் கீழ் சந்தேகநபர்கள் இருவருக்கும் எதிராகக் கொலைக் குற்றச்சாட்டை முன்வைத்து யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான கமல் என்று அழைக்கப்படும் கந்தசாமி கமலேந்திரன் மற்றும் றெக்சியனின் மனைவி அனிதா ஆகிய இருவருக்கும் எதிராக இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கொலைக் குற்றச்சாட்டில் கமல் கைது செய்யப்பட்டதும் அவரைக் கட்சியிலிருந்து விலக்குகிறோம் என்று ஈ.பி.டி.பி. தெரிவித்திருந்தது.

2013 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் புங்குடுதீவு பிரதேசத்தில் டானியல் றெக்சியனைக் கொலை செய்ததன் ஊடாக தண்டனைச் சட்ட நடவடிக்கைக் கோவை 296ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றத்தை புரிந்துள்ளனர் என்று இருவருக்கும் எதிராக சட்ட மா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**பின்னணி**

நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளரும் ஈ.பி.டி.பியின் உறுப்பினருமான ரஜீவ் என்று அழைக்கப்படும் டானியல் றெக்சியன் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்டார். அது பற்றிய விசாரணைகளின் பின்னர் (கொலை நடந்து ஒரு வாரத்தில்) கமல் என்று அழைக்கப்படும் கந்தசாமி கமலேந்திரன் கொழும்பில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

அவர் கைதுக்கு முன்னர் டானியல் றெக்சியனின் மனைவி மற்றும் வேலணையைச் சேர்ந்த இளைஞரும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் கமலேந்திரன் மற்றும் றெக்சியனுடைய மனைவி இருவரும் கொலையுடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். பின்னர் இருவரும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் கடும் நிபந்தனையுடனான பிணையில் விடுவிக்கப்பட்டனர். (த-37)

## சாரதிகளுக்கு 34 ஆயிரம் தண்டம்

கொடிகாமம், ஜூன் 27

நான்கு வாகனச் சாரதிகளுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தால் 34 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸாரால் சாரதி அனுமதிப்பதத்திரம் இன்றி மது போதையில் உந்துருளி செலுத்தியமைக்காக இருவருக்கும், மதுபோதையில் உந்துருளி செலுத்திய மற்றைய இருவருக்குமாக மொத்தம் 4 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப் பட்டது.

வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மது போதையில் உந்துருளி செலுத்திய இருவரில் ஒருவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும் மற்றையவருக்கு 9 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

மேலும் மது போதையில் வாகனம் செலுத்திய இரு சாரதிகளுக்கும் தலா 7 ஆயிரம் தண்டம் விதிக்கப்பட்டதுடன் இருவருக்கும் ஒருமாதம் சாரதிப் பத்திரமும் தடுத்து வைக்கப்பட்டது. (ஐ-159)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு சமூக சேவை செய்ய பணிப்பு

கொடிகாமம்,ஜூன் 27

கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த நபருக்கு 150 மணித்தியாலங்கள் சமூகசேவையில் ஈடுபடுமாறு நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது.

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் சாவகச்சேரி பொலிசாரால் கடந்த மாதம் 7 ஆம் திகதி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப் பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 150 மணித்தியாலயம் சமூக சேவை செய்ய வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (ஐ-159)

# காங்கேசன்துறைத் தொகுதியின் தலைவராக சேனாதிராசா தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 27

தமிழ் அரசுக் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதியின் தலைவராக மாவை சோ.சேனா திராசாவும் மானிப்பாய்த் தொகுதிக் கிளையின் தலைவராக தி.பிரகாசும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளைக் குழுக்கள் சீரமைக்கப்பட்டு வரும் நிலையில் காங்கேசன்துறைத் தொகுதிக்கான தெரிவு கடந்த சனிக்கிழமை தொகுதிக் கிளை அலுவலகத்தில் கட்சியின் தலைவரான சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது. அங்கு தற்போதைய கட்சியின் தலைவர் சேனாதிராசா தொகுதியின் புதிய தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இதேநேரம் காங்கேசன்துறை தொகுதிக்கான செயலராக தற்போதைய வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவு செய்யப்பட்டார்.

மானிப்பாய் தொகுதிக்கான தேர்வு நேற்றுமுன்தினம் இணுவிலில் கட்சியின் நிர்வாகச் செயலர் குலநாயகம் தலைமையில் நடைபெற்றது.



தலைவராக வலி.தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தவி சாளர் தி.பிரகாஸ் தெரிவானார். செயலராக அ.ஜெபநேசனும் பொருளாளராக இலவகுமாரும் தெரிவாகினர். (த-105)



## முதியோர்களுக்கான இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜூன் 27
முதியோர்களுக்கான இலவச மருத்துவ முகாம் யாழ்ப்பாணம் நாரந்தனை கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.
சமூக சேவைகள் அமைச்சின் உதவியுடன் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இந்த மருத்துவ முகாம் இடம்பெற்றது.
ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையின் மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி, குடும்பநல அலுவலர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், ஆயுள்வேத வைத்தியர், எழுவைதீவு ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவர், ஊர்காவற்றுறை பிரதேச செயலக அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
இம் மருத்துவ முகாமில் பல் மருத்துவரின் வாய்ப் பரிசோதனை, கண் பரிசோதனை, குருதியில் சீனியின் அளவு, கொலஸ்ரோல் பரிசோதனைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. (ஐ-222)

# 854கிலோ சுறா துடுப்புகளுடன் புதுமாத்தளனில் ஒருவர் கைது





*யாழ்ப்பாணம், ஜூன் 27*

**புதுமாத்தளன் பகுதியில் 854 கிலோகிராம் சுறா மீன்களின் துடுப்புகள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன. அவற்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது.**

கிழக்குக் கடற்படைத் தளத்துடன் இணைந்த கடற்படையினர் புது மாத்தளன் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின்போது 854.3 கிலோகிராம் சுறா துடுப்புகளுடன் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்தனர்.
பார ஊர்தி மூலம் கொண்டு செல்லத் தயாராக இருந்தபோது இந்தச் சுறா துடுப்புகள் கைப்பற்றப்பட்டுள்ளன.
மட்டக்குளியைச்சேர்ந்த48வயதானவரே கைது செய்யப்பட்டுள்ளார்.
சுறா துடுப்புகளுடன் சந்தேகநபர் முல்லைத்தீவு மாவட்ட நீரியல் வளத் துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.
சுறாக்களின் இறக்கைகளை ஏற்றுமதி செய்வதற்காகச் சுறாக்களைப் பெருமளவில் அழிப்பதால் சுறா இனங்கள் அழிந்துபோகும் நிலையை எதிர்கொள்கின்றன என்று சுற்றுச்சூழலியளாலர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
துடுப்புகளுக்காக உலகம் முழுவதும் ஏராளமான சுறாக்கள் கொல்லப்படுகின்றன. கிழக்கு ஆசிய நாடுகளான ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் சுறாதுடுப்புகளைப்பயன்படுத்தித்தயாரிக்கப்படும் சிறப்பு சூப்புக்கு அதிக கிராக்கி உள்ளது.
இதனால்சுறாவேட்டைமிகவும்இலாபகரமான தொழிலாக மாறியுள்ளது.
ஆனால் அழிந்துபோகும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் உயிரினங்களான திமிங்கில சுறா, புதையல் சுறா மற்றும் பெருங்கடல் வெள்ளை துண்டு சுறா ஆகியவற்றைப் பிடிப்பதை இலங்கை தடை செய்துள்ளது.
இதனால்சுறாசூப்புக்குப்பயன்படுத்தப்படும் சுறாக்களின் கருத்தெலும்புப் பகுதியைமட்டும் கடலில் வைத்து வெட்டிவிட்டு சுறாக்களை அப்படியே கடலில் விட்டுவிடுவதும் நடக்கிறது என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. (த-7)

## கலப்பின மிளகாய் விதை உற்பத்தி ஊக்குவிக்கப்படும்

*மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவிப்பு*



யாழ்ப்பாணம்,ஜூன்27
யாழ்ப்பாண மாவட்டத்தில் கலப்பு இன மிளகாய் விதை உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக விவசாயப் பிரிவுதெரிவித்துள்ளது.
இதுபற்றிமேலும்தெரிவிக்கப்பட்டதாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தில் மிளகாய் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் இது வரை காலமும் எம்.ஐ 3 இன மிளகாய் இனங்களையே பயிரிட்டு வருகின்றனர். இந்தமிளகாய்கன்று சுமார் 3 தொடக்கம் 4 மாதங்கள்வரை காய்க்கும். அதன் விதை கிலோ ஒன்று 6 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும். அத்துடன் மிளகாயும் விற்பனை செய்ய முடியும். தற்போது உற்பத்திக் காலத்தைக் கருத்திற்கொண்டு விவசாயிகளுக்கு இலாபம் தரக்கூடிய எம்.ஐ கலப்பு இனமிளகாய் செய்கைஉற்பத்தியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்தக் கலப்பு இன மிளகாய் சுமார் 7 மாதங்கள் வரைகாய்க்கக்கூடியவை. அதன்விதைகள்ஒருகிலோகிராம் 65 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும். இது விவசாயிகளுக்குசாதமாகஅமையும். ஆகவே இந்த முறை 15 விவசாயிகளுக்கு இந்த மிளகாய் வளர்ப்பு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு மிளகாய் விதைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. கடந்த வருடம் இந்த மிளகாய் செய்கை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டது. சுமார் 700கிலோகிராம்மிளகாய் விதை பெறக் கூடியதாக இருந்தது. ஆகவே இந்த முறை இந்தக் கலப்பு இன மிளகாய்செய்கையைஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

## இயற்கை இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவு

சாவகச்சேரி, ஜூன் 27
இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி குடும்பத்தினருக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவுக் காசோலைகள் இடர் முகாமைத்துவ அமைச்சால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
தென்மராட்சிபிரதேசத்தில்கடந்தவருட இறுதிப் பகுதியில் வீசிய கடும் காற்று மற்றும் பெருமழையால் 574 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தன.
இந்தக்குடும்பங்களுக்குமுதற்கட்டமாக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் பிரதேச செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு அவரவர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டன.
இந்தக்குடும்பங்களில்340குடும்பங்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் இரண்டாம் கட்டக் கொடுப்பனவுக்கான காசோலைகள் பயனாளிகளின் பெயர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவை அடுத்த வாரம் தொடக்கம் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகக் கையளிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



## காரைநகரில் பற்றியது தீ

*4 மணி நேரப் போராட்டத்தின் பின்னர் அணைக்கப்பட்டது*

யாழ்ப்பாணம், ஜூன் 27
யாழ்ப்பாணம் காரைநகரில் பன்னங்கூடலுக்குள் பற்றிய தீ நான்கு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் அணைக்கப்பட்டுள்ளது.
காரைநகர் கசூரினா கடற்கரையை அண்டிய பகுதியில் உள்ள பனங்கூடலுக்குள் தீ பற்றியுள்ளது. இரவு 7மணிக்கு தீ எரிய ஆரம்பித்துள்ளது.
தீயைக் கட்டுப்படுத்துவதற்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மற்றும் வட்டார உறுப்பினர் எனப் பலரும் முயன்றனர். எனினும் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் படைக்கு அறிவிக்கப்பட்டது.
சுமார் 7.30 மணிக்குத் தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்குச் சென்றிருந்தனர்.
தீ அதிகமான இடங்களில் பரவியதால் அதை அணைப்பதற்குப் பெரும் போராட்டமே இடம்பெற்றது.
ஒருவாறாக இரவு 11மணிக்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.
இந்தத் தீ விபத்தால் ஏராளமான பனைகளின் அடி கருகியது. பற்றைகளும் எரிந்து சாம்பலாகின. சம்பவம் தொடர்பில் நேற்றுக் காலையே காரைநகர்ப் பிரதேச செயலகத்துக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.
காரைநகர்ப் பிரதேச சபையின் பெண் உறுப்பினர் ஒருவர் தகவல் வழங்கியுள்ளார். தீ பற்றியதற்கான காரணம் உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் குப்பை எரியூட்டப்பட்டதால்தீ பற்றியிருக்கலாம் என்றும், யாராவது புகைத்தலில் ஈடுபட்டுவிட்டு தணலை அங்கு வீசியதால் தீ ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.
சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறையைப் பொலிஸார் மற்றும் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது விசாரணைகளும் இடம்பெற்றுள்ளன.
காரைநகரில் பலமுறை இவ்வாறு தீ விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. காரைநகரில் பொலிஸ் நிலையமோ, தீயணைப்புப் படையோ இல்லை.
இதனால் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கமுடியாது மக்களுக்கும், சொத்துகளுக்கும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இயற்கையும் அழிவைச் சந்திக்கிறது என்று மக்கள் தெரிவித்தனர். (த-21,26)



யாழ்ப்பாணம், அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் தரம் 2 மாணவர்களின் மாதிரிச் சந்தை பாடசாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ஐ-422)



# போதைப்பொருளுக்கு எதிராக விழிப்புணர்வுப் போராட்டம்

தேசிய போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வுப் போராட்டம் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் "ஏற்றத் தாழ்வு பார்க்காத போதை மது", "மதிமயக்கிடதுடிக்கும் மதுவை ஒழி", "மதியை போக்கும்மதுவேபோபோ" "போதை அற்ற தேசத்தை உருவாக்குவோம்"போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சிந்தனையில் தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரம் நாடுமுழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் ஒரு அங்கமாகவே முள்ளிவாய்க்கால் மேற்கு மக்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-222,ரி3)



## போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தமர்வு

கொடிகாமம், ஜூன் 27

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு நேற்றுமுன்தினம் அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் ஏற்பாட்டில் இந்தக் கருத்தமர்வு இடம்பெற்றது.

சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரன் வளவாளராக கலந்து கொண்டார்.

நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான வை.ஜெகதாஸ் ,அ.நிமலரோகன், திருமதி வி.பாரத்பத்மா, கு.குகானந்தன், சி.கஜன், சாவகச்சேரி பிரதேச சபையின் முதன்மை முகாமைத்துவ உதவியாளர் சி.பத்மநாதன், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போதை என்றால் என்ன? போதையை ஏன் பாவிக்கின்றனர்? போதை பாவிப்பதால் ஏற்படும் பிரச்சனை என்ன? போதைக்கு அடிமையானவர்களை எப்படி நல்ல நிலைக்கு மாற்றுவது. எந்த வடிவில் போதைப் பொருள்கள் கிடைக் கின்றன, அதனை எவ்வாறு இல்லாமல் செய்யலாம் போன்ற விழிப்புணர்வு விளக்கங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ-159)

• • •

யாழ்ப்பாணம், ஜூன் 27

போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு காரைநகர் பிரதேச சபை மண்டபத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு தவிசாளர் வி.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வடக்கு பிரதேசநல்லொழுக்க சம்மேளனத்தின் செயலர் எஸ்.குமராசிங்கம் , நெறியாளுகை உறுப்பினர் பு.அருமைத்துரை ஆகியோர் வளவாளர்களாகப் பங்குபற்றி கருத்துரையாற்றவுள்ளனர்.

எனவே காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செயலர், மக்கள் பிரதிநிதிகள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள், அழைக்கப்பட்ட பாடசாலை மாணவர்களையும் உரிய நேரத்துக்கு வருகை தருமாறு பிரதேச சபை தவிசாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ-9,50)

## கவிதைத் தொகுதி அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 27

மூத்த எழுத்தாளர் சாவகச்சேரி கல்வயலூர் பாவலர் ச.முருகையாவின் 'கிழக்கும் மேற்கும்' என்னும் கவிதைத் தொகுதி அறிமுக நிகழ்வு நடைபெறவுள்ளது.

கொழும்புத்துறை மேற்கு வதரி பீட மன்னுலாடும் விநாயகர் ஆலய மண்டபத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் கலாநிதி நா.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.(ஐ-9)

தென்மராட்சியில்

# போதைஒழிப்பு விழிப்புணர்வு நடைபவனி



சாவகச்சேரி, ஜூன் 27

போதை ஒழிப்புத் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி தென்மராட்சிப் பிரதேசசெயலகத்தால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அரச தலைவர் பணியகத்தின் தேசிய போதை ஒழிப்புத் திட்டத்தின் கீழான போதை ஒழிப்பு வாரச் செயற்பாடுகளின் நான்காம் நாள் நிகழ்வாக விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன்,சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி, சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகள், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்கள் பிரதேச செயலக அலுவலர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலக முன்பாக நடைபவனிஆரம்பித்துஏ-9 முதன்மை வீதி வழியாக சாவகச்சேரி பேருந்து நிலையத்தைச் சென்றடைந்து அங்கிருந்து சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானம் வரை பேரணி சென்றது. பேரணியுடன் போதை ஒழிப்பு தொடர்பான பதாகைகளுடன் பெருமளவு வாகனங்களும் பங்குபற்றின.

போதையற்ற நாட்டை உருவாக்குவோம், குடி குடியைக் கெடுக்கும், குடிப் பழக்கம் உடல் நலத்தைக் கெடுக்கும், புகைப் பிடித்தால் புற்றுநோய் உண்டாகும், போதைப் பொருள் பாவனையற்ற மகிழ்ச்சியான சூழலை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம், குறைந்த வயது முதுமையான தோற்றத்துக்கு காரணம் மதுசாரப் பாவனை, திருப்திகரமான பாலுறவுக்கு சாராயம் குடிப்பவர் தகுதியற்றவர், மதுசாரம் சிகரட் பாவனையாளருடன் வாழும் வாழ்க்கை நாற்றமான வாழ்க்கை, புகைத்தல் மற்றும் மதுபானத்தின் அபாயத்தை ஒழித்து வறுமை நிலையினைக் குறைத்து அபிவிருத்தியினை மேம்படுத்துவோம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் பொதுமக்களால் எடுத்துவரப்பட்டன.

சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் உரையாற்றினர்.

பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி அலுவலர்களின் போதையினால் எற்படும் விளைவுகள் தொடர்பான சிறப்பு தெருநாடகமும் இடம்பெற்றது. (ஐ-9,131,159)



## போதைதடுப்பு வசனங்களுடன் பறக்கவிடப்பட்ட பலூன்கள்

யாழ்ப்பாணம்,ஜூன் 27

போதை ஒழிப்பு வாரத்தின் நான்காம் நாளான நேற்று போதைத்தடுப்பு வாசகங்களைத் தாங்கிய பலூன்கள் பறக்கவிடப்பட்டன.

ஆளுநரின் பங்குபற்றலுடன் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.இதில் ஆளுநர் அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டு பலூன்களை பறக்க விட்டனர்.

இதேவேளை வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்ட செயலங்கள், திணைக்களங்களிலும் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ஐ-7)

## போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

யாழ்ப்பாணம்,ஜூன் 27

போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வுப் பேரணி ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

கரவெட்டிப் பிரதேச செயலகமும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து இப்பேரணியை ஒழுங்கு செய்திருந்தது.

பிரதேச செயலகத்தில் இருந்து ஆரம்பமான இப்பேரணி பருத்தித்துறை முதன்மை வீதியூடாக இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நிறைவடைந்தன.

பேரணியில்செயலகஅலுவலர்கள்,சமுர்த்திஅலுவலர்கள்,பாடசாலைமாணவர்கள், பொலிஸார் ம்றும்சமுர்த்திபயனாளிகள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (ஐ-108)

## போதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜூன் 27

ஆவணங்களின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 19 ஆயிரம்ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் வாகனம் செலுத்துவதற்கான சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ,வாகன வரிப் பத்திரம் போன்ற ஆவணங்களின்றியும் மது போதையிலும் வாகனம் செலுத்தியதாக சாரதி ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு நேற்று விசாரணக்கு எடுக்கப்பட்ட போது, விசாரணையின் போது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இக் குற்றங்களுக்காக 19 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு தலா 10 ஆயிரத்து 500 ரூபா வீதமும், தலைக்கவசமின்றி வாகனம் செலுத்திய ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாவும், போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனம் செலுத்திய ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# விதைகள் உற்பத்திப் பண்ணையில் லட்சக்கணக்கில் நிதிக் கையாடலா?

## *விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன*

வவுனியா, ஜூன் 27

வவுனியா அரச விதை உற்பத்திப்பண்ணையில் லட்சக் கணக்கான ரூபா நிதிக் கையாடல் இடம்பெற்றுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. நிதிக்கையாடல்கள் குறித்து வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளது என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா அரச விதை உற்பத்திப் பண்ணையிலுள்ள நெல் அறுவடை செய்யும் இயந்திரம் கடந்த பெரும் போக நெல் அறுவடையின்போது தலைமைச்செயலர் அல்லது மாகாண விவசாயப் பணிப்பாளரின் அனுமதி பெறப்படாமல், இரவு பகலாக தனிநபர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கப்பட்ட நிதி கணக்கிலிடப்படாது கையாடல்கள் இடம்பெற்றுள்ளன என்றும், விவசாயப் பண்ணையிலுள்ள பயன் தரு மரங்கள் எவ்வித அனுமதியுமின்றி பண்ணை ஊழியர்களைக் கொண்டு தறிக்கப்பட்டு, அவை மரக்குத்திகளாக மாற்றி பாரஊர்தியில் ஏற்றிச் செல்லப்பட்டு வெளி நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன என்றும் அந்த நிதியும் கையாடல் செய்யப்பட்டுள்ளன என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஏக்கர் ஒன்றுக்கு 12 ஆயிரம் ரூபா முதல் 15 ஆயிரம் ரூபா வரையில் மகாறம்பைக்குளம், பூந்தோட்டம் போன்ற பகுதிகளுக்கு நெல் அறுவடை செய்யும் இயந்திரம் வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றும் இதன் மூலம் லட்சக் கணக்கான நிதி கையாடல்கள் இடம்பெற்றுள்ளன என்றும், மரக் குற்றிகளை விற்பனைசெய்வதன் மூலம் லட்சக் கணக்கான நிதிக் கையாடல்கள் செய்யப்பட்டுள்ளன என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து, வடக்கு மாகாண ஆளுநர், தலைமைச் செயலர், மாகாண விவசாயப் பணிப்பாளர், ஆகியோருக்கு முறையிடப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணை அறிக்கை வடக்கு மாகாணக் கணக்காய்வுத் திணைக்களத்தில் பாரப்படுத்தப்பட்டதன் பின்னரே ஊழல் மோசடி இடம்பெற்றதா இல்லையா என்ற முடிவுக்கு வரமுடியும் என்றும் தகவறிந்த வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

அரச அலுவலகங்களில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றது உறுதி செய்யப்பட்டால் குறித்த திணைக்களத் தலைவருக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் அண்மையில் அறிவித்திருந்தார். எனினும் வடக்கு மாகாண ஆளுநருக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டும் அவரால் நிதிக் கையாடல்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (து-21)

---

### சாவகச்சேரி ப.கூ.சங்க

# சிற்றுண்டி நிலையத்தில் சைவப் புரியாணி 100ரூபா

சாவகச்சேரி, ஜுன் 27

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிற்றுண்டி நிலையத்தில் மற்றொரு சேவையாக சைவப் புரியாணி 100 ரூபா விலையில் நேற்றுமுன்தினம் தொடக்கம் வழங்கப்பட்டு வருகிறது. பிரதி செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இந்தச் சைவப் புரியாணி விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சிற்றுண்டி வகை எது எடுத்தாலும் பத்து ரூபா விலையில் விற்பனை செய்யும் இந்த சிற்றுண்டி நிலையத்தில் கடந்த மாதம் தொடக்கம் மதிய சைவ உணவுப் பொதி 80 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க செவ்வாய் வெள்ளி ஆகிய தினங்களில் பொதி செய்யப்பட்ட புரியாணி 100 ரூபா விலையில் விநியோ கிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் சிற்றுண்டி நிலையங்களில் 15 ரூபா, 20 ரூபா, 30 ரூபா ஆகிய விலைகளில் விற்பனை செய்யும் கடலை வடை உழுந்து வடை வாய்ப்பன் றோல் சூசியம் மோதகம் போண்டா கொம்பு பணிஸ் மற்றும் பணிஸ் போன்ற சிற்றுண்டிகள் பத்து ரூபா விலையிலும், இடியப்பம் 5 ரூபாவுக்கும் பிட்டு பத்து ரூபாவுக்கும் தோசை இட்லி அப்பம் போன்றவை 15 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9)

---

# கடவைக் காப்பாளர்களுக்கு நியமனம் பெற்றுத் தரவும்

## *அதன் ஒன்றியத் தலைவர் கோரிக்கை*

வவுனியா, ஜூன் 27

வடக்குக் கிழக்கில் தொடருந்துக் கடவையில் பணியில் ஈடுபடும் தமக்கு அரச நியமனங்களின்போது கடைப்பிடிக்கப்படும் அடிப்படைத் தகுதியில் மாற்றங்களை ஏற்படுத்தி நிரந்தர தீர்வு பெற்றுத்தர வேண்டும் என்று வடக்கு - கிழக்கு தொடருந்துக் கடவைக் காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் றொகான் ராஜ்குமார் கோரிக்கை விடுத்து ள்ளார். வவுனியா தொடருந்துக் கடவைக் காப்பாளர் சங்கத்தின் ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐந்து ஆண்டுகளாக நிரந்தர நியமனம் தொடர்பாகப் பலதரப்பட்ட வகையிலும் முயற்சித்தோம்.

நாள் ஒன்றுக்கு 250 ரூபா சம்பளத்தில் கடவைகளில் எமது கடமைகளை நேர்த்தியாகச் செய்து வருகின்றோம். நாட்டில் இருக்கின்ற மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக அர்ப்பணிப்புடன் ஐந்து தொடக்கம் ஏழு ஆண்டுகள் பணியாற்றி வருகின்றோம்.

தற்போது தொடருந்துத் திணைக்களத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் தனிப்பட்ட சிபார்சில் பல ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்றார்கள். முன்பு போக்குவரத்து அமைச்சராக இருந்த நிமால் சிறிபாலடி சில்வா காலத்திலும் ஆயிரத்து 200 ஊழியர்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர். இருந்த போதும் அதில் எங்களுடைய ஊழியர்கள் உள்வாங்கப்படவில்லை. தற்போதுள்ள போக்குவரத்துத் துறை அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தலைமையிலே தொடருந்துத் திணைக்களத்தின் பல்வேறு வெற்றிடங்களுக்குப் புதிய ஊழியர்கள் இணைத்து கொள்ளப்படுகின்றனர். ஆனால் நாங்கள் இதுவரை காலமும் பொலிஸாரால் மாதம் வழங்கப்படும் 7ஆயிரத்து 500ரூபா சம்பளத்திலேயே அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றோம்.

இதுவரை காலமும் எமது எதிர்காலம் தொடர்பாக எதுவித திட்டமிடலோ அல்லது எமக்கான நிரந்தர தீர்வோ எட்டப்படவில்லை. வடக்கு-கிழக்கில் 450 ஊழியர்களும் இலங்கை முழுவதும் 2ஆயிரத்து 368 ஊழியர்கள் தொடருந்துத் திணைக்களங்களில் கடவைக் காப்பாளர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். பலர் அங்கவீனமுற்றவர்களாகவும், பலர் வயது முதிர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். வடக்கு-கிழக்கில் 150 பேர் மாத்திரமே அரச தொழில் பெறுவதற்கான தகுதி உடையவர்களாக காணப்படுகின்றனர். மேலும் நாடு முழுவதிலும் சுமார் ஆயிரம் பேர் மாத்திரமே அரச தொழில் பெறுவதில் தகுதியுடையவர்களாக இருக்கின்றனர். எமது சேவையைக் கருத்திற் கொண்டு அரச நியமனங்களின் போது கடைப்பிடிக்கப்படும் அடிப்படைத் தகுதியில் மாற்றங்களை ஏற்படுத்தி எமக்கான நிரந்தரத் தீர்வு ஒன்றைப் பெற்றுத்தர வேண்டும்என்று மைத்திரி பாலசிறிசேனவுக்குஎழுத்து மூலமாக அறிவித்திருக்கிறோம்- என்றார். (து-21)

---

# *அலங்கார உற்சவம்*

வவுனியா, ஜூன் 27

வவுனியா கற்குழி அருள்மிகு சிறி முத்துமாரி யம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 ஆம் திகதி வியா ழக்கிழமை தேர்த் திருவிழா வும், 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

திருவிழா நாள்களில் ஒவ்வொருநாளும் சிறப்பு சொற்பொழி, பஜனை, அன்னதானம் என்பன நடைபெறவுள்ளன. (ஜ-222)

---

# கட்டாக்காலி மாடுகளை பிடித்து பகிரங்க ஏலத்தில் விற்பனை

சாவகச்சேரி, ஜுன் 27

சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் காணப்படும் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

பொதுச் சந்தை வளாகத்தில் தினமும் கட்டாக்காலி மாடுகளால் தமது விற்பனைப் பொருள்கள் சேதமாக்கப்பட்டு வருகின்றன எனவும் இதனால் தமக்கு நட்டம் எற்படுவதாகவும் இவற்றினைக் கட்டுப்படுத்துமாறும் வியாபாரிகள் முறையிட்டுள்ளனர்.

இந்த நிலையில் சந்தை வளாகத்தில் பகல் வேளைகளில் காணப்படும் மாடுகள் பிடிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களுக்கு முன்னறிவித்தல் ஏதுமின்றி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமெனவும் அறிவித்துள்ளார்.

இதேவேளை சாவகச்சேரிப் பிரதேசத்தில் பலாப்பழ சீசன் ஆரம்பித்துள்ளதால் வளவுகளுக்குள் பழுக்க வைக்கப்படும் பலாப்பழங்களை கட்டாக்காலி மாடுகள் சேதமாக்கி வருகின்றன என வரியிறுப்பாளர்கள் பலர் தெரிவித்தனர். (ஜ-9)

---



# மன். கிளை முதன்மை வீதி 70 லட்சத்தில் சீரமைப்பு

மன்னார், ஜுன் 27

மன்னார் பூநகரி முதன்மை வீதியிலுள்ள சிவபுரம் கிராமத்திலிருந்து திருக்கேதீச்சரம் கோவிலுக்குச் செல்லும் கிளைப் பிரதான வீதி 70 லட்சம் ரூபா செலவில் தார் வீதியாக செப்பனிடப்படவுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இந்த வீதி திருக்கேதீச்சரம் வட்டார உறுப்பினர் பாலசிங்கம் கதிர்காமநாதனின் சிபார்சில் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


வீதிச் சீரமைப்பின் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அதை ஆரம்பித்து வைத்தார். (து-213)

---

# யோகா தினத்தை முன்னிட்டு சிறப்பு யோகாப் பயிற்சிகள்

கொடிகாமம், ஜுன் 27

பன்னாட்டு யோகா தின சிறப்பு யோகாப் பயிற்சிகள் செரண்டிப் சிறுவர் இல்லத்தால், மு/குமுழமுனை மகா வித்தியாலய மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. கடந்த ஒரு வாரம் வழங்கப்பட்ட இந்தப் பயிற்சி நெறியின் இறுதி நாள் பயிற்சிகள் நேற்று வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு வித்தியாலய அதிபர் க.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது. செரண்டிப் சிறுவர் இல்ல யோகா ஆசிரியர் பு.பிரணவன் வளவாளராக கலந்து கொண்டு இந்த யோகாப் பயிற்சியை வழங்கினார். (எ-159)



# திருக்கேதீச்சர அலங்கார வளைவு அமைப்பில் மன்னார் பிரதேச சபையால் தடைவரக்கூடாது

## மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் இடித்துரைப்பு

மன்னார், ஜூன் 27

மன்னார் திருக்கேதீச்சர வீதி வரவேற்பு அலங்கார நுழைவாயில் அமைக்க மன்னார் பிரதேச சபை அனுமதி வழங்கியது. சில தினங்களில் குறித்த வரவேற்பு நுழைவாயில் அமைப்பதை நிறுத்துமாறு கூறி அனுமதியை மீளப் பெற்றுள்ளது. இந்த நடவடிக்கைகள் மன்னாரில் மதங்களுக்கு இடையிலும், மக்களுக்கு இடையிலும் பிரச்சினைகளை அதிகரிப்பதாக அமைந்துள்ளன என்று மன்னார் நகர சபை உறுப்பினர் எஸ்.மைக்கல் கொலின் தெரிவித்தார்.



மன்னார் நகர சபையின் 16 ஆவது அமர்வு சபையின் சபா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார், மாந்தை சந்தியில் உள்ள வரவேற்பு நுழைவாயில் தொடர்பில் தொடர்ந்தும் பிரச்சினை ஏற்பட்டு வருகின்றது. மன்னார் பிரதேச சபை இனி வரும் காலங்களில் இவ்வாறு முடிவுகளை மேற்கொள்ளாது மக்களுடன் இணைந்தும், சர்வமதத் தலைவர்களுடன் இணைந்தும் இந்தப் பிரச்சினைக்கு முடிவை மேற்கொள்ள வேண்டும்.

இரு மதத்தவர்களும் ஒன்றிணைந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். ஒரு சிலர் அரசியல் இலாபத்துக்காக இந்தப் பிரச்சினையைப் பூதாகாரமாக்கிக் கொண்டு போகின்றனர். இந்து மக்களாக இருந்தாலும் சரி, கிறிஸ்தவ மக்களாக இருந்தாலும் சரி இரு மதத் தலைவர்களும் ஒன்றிணைந்து இந்தப் பிரச்சினையை இணக்கப்பாட்டுடன் தீர்ப்பதற்கு நகர சபை உறுப்பினர்கள் முழுயான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

மன்னார் நகர சபையின் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமை உரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய அரசானது ஒரு உறுதியற்ற நிலையில் காணப்படுவதினால் நாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவது பற்றி ஏற்கனவே பல்வேறு தரப்பினரினால் தெரியப்படுத்தப்பட்டிருந்தும் அதற்கு உரிய தீர்வு எட்டப்படவில்லை.

இதனால் குறித்த பிரச்சினை பெரும் பிரச்சினையாக மாறி இனங்களுக்கு இடையிலும், மதங்களுக்கு இடையிலும் பிரச்சினையாக மாறுவதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய அரசு தெளிவான முடிவை எடுக்க முடியாத காரணத்தாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த பிரச்சினைக்கு முன்னரே தீர்வு காணப்பட்டிருந்தால், இந்த நிலை எப்போதோ சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருக்கும். தற்போது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. எமது நகர சபையைப் பொறுத்த மட்டில் நாங்கள் நல்ல முறையிலே அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அனைவருடைய ஒத்துழைப்பும் எமக்கு இருக்கின்றது. எதிர் காலத்திலே நகர சபையூடா அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதற்கும், நகர சபையூடாக வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் அனைத்து உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு எமக்கு தேவை -என்றார். (த-56)

# மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன் 27

யாழ்ப்பாணம், கனகரத்தினம் மகா வித்தியாலய மாணவி திலக்சனா ரவீந்திரனின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வு நடைபெறவுள்ளது. நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தலைவர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தின ராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார். திலக்சனா கொக்குவில் இந்துக் கல்லூரி இசை ஆசிரியர் சி.துரை ராசாவின் மாணவி ஆவார். (ஜ-9)





# மாணவர்கள் மத்தியில் தெளிவூட்டும் செயலமர்வு

மன்னார்,ஜூன் 27

மாணவர்கள் மத்தியில் இனம் மதம் சார்ந்த பிரிவினைகளை நீக்கி நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தெளிவூட்டும் சிறப்பு நிகழ்வுகள் மன்னாரில் நேற்று இடம்பெற்றன.

மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மற்றும் மன்னார் அல்ஹஸ்கார் தேசிய பாடசாலை ஆகியவற்றில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்றன.

தேசிய சமாதான பேரவை மற்றும் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

அண்மைக் காலமாக நாட்டில் இடம் பெறும் முரண்பாடுகளின் மத்தியில் மாணவ சமுதாயம் எவ்வாறு விழிப்புணர்வுடன் செயற்படுவது தொடர்பாகவும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதில் மாணவர்களின் பங்களிப்பை எவ்வாறு முன்னேற்றுவிக்கலாம் என்பது தொடர்பாக ஆசிரியர்களாலும் மாணவத் தலைவர்களாலும் விரிவுரைகள் வழங்கப்பட்டன

அதே நேரத்தில் முரண்பாடான சமயங்களில் தீர்மானங்கள் எடுப்பதிலும் பண்மைத்துவம் சார்ந்த விடயங்களை எவ்வாறு கருத்தில் கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகவும் நடை முறை ஆலோசனை வழங்கப்பட்டது அத்துடன் நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் அடங்கிய சுவரொட்டிகளும் மாணவர்கள் மத்தியில் காட்சிப்படுத்தப்பட்டன. (ஜ-56)

# கோப்பாய்– நீர்வேலியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

கோப்பாய், நீர்வேலி பகுதிகளில் இரவில் திருடர்களின் கைவரிசை மீண்டும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

வீடுகளுக்குள் புகுந்து வீட்டுக்காரரைத் தாக்கிவிட்டு பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் செல்கின்றனர். அதனால் அங்குள்ள மக்கள் பயத்தில் இரவைக் கழிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பருத்தித்துறை வீதியில் நீர்வேலி வில்லுமதவடிக்கு அருகில் உள்ள வீடு ஒன்றுக்குள் திருடர்கள் புகுந்து அங்கிருந்த பணம் மற்றும் பொருள்களைக் களவாடித் தப்பிச்சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது. வீட்டின் ஜன்னல் கம்பியை தந்திரமாக உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் அங்கிருந்த ஒரு தொகை பணம் மற்றும் பொருள்களை களவாடிச் சென்றுள்ளனர்.

வீட்டுக்காரர் மிகவும் சாதுரியமாக திருடர்களைக் கண்டு வீட்டு அறைக்குள் ஓடி அயலவர்களுக்குத் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தனர். அயலவர்கள் சிலர் கூக்குரல் போட்டு வந்ததும் திருடர்கள் தாம் வந்த உந்துருளிகளில் தப்பிச் சென்றுள்ளனர்.

அதனைவிட இராசவீதியிலும் வீடு ஒன்றுக்குள் புகுந்த திருடர்கள் வீட்டுக்காரர்கள் விழிப்படைந்து கூக்குர லிட்டதும் தப்பிச் சென்றுள்ளனர்.

கைதடி-மானிப்பாய் வீதி கோப்பாயில் அண்மையில் வீடு ஒன்றில் தனிமையில் இருந்த மூதாட்டியைத் தாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு கோப்பாய் நீர்வேலி பிரதேசங்களில் மீண்டும் திருடர்களின் கைவரிசை தலைதூக்கியிருப்பதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்கு இரவு வேளையில் பொலிஸார் தமது ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேசமயம் நீர்வேலி வில்லுவடி பகுதியில் வீடு ஒன்றில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற திருட்டு சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டும் வருகின்றனர். (த-17)

# வீதிச் சீரமைப்பு வேலைகள் இரு மாதங்களாக தாமதம்

வலி.தென்மேற்கு, ஜூலை 27

வீதி சீரமைக்க அடிக்கல் நட்டு இரண்டு மாதங்களாகியும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லையென்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். வேலைகளைத் தாமதிக்காது பணிகளை விரைவில் ஆரம்பிக்குமாறும் மக்கள் தவிசாளரைக் கோரியுள்ளார். வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் ஆனைக்கோட்டை கிராமத்தில் மீனவர் வாழும் சாவல்கட்டு பகுதியிலுள்ள ஒரு வீதி 50 வருடங்களுக்கு மேலாகச் சீரமைக்கப்பட வில்லை.

மழை காலங்களில் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள், மாணவர்கள் போக்குவரத்து செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர். இது பற்றி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் கவனத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது. துரித கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 60 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியிருந்தார். இந்த நிலையில் வேலைக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினரால் அடிக்கல் நடுகை செய்யப்பட்டது. இரு மாதங்கள் கடந்த நிலையிலும் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இது குறித்து தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, வேலை தாமதத்துக்கு ஒப்பந்தகாரரே காரணம். இரு கடிதங்கள் ஒப்பந்தகாரருக்கு அனுப்பப்பட்டன. மாவட்டச் செயலரின் கவனத்துக்கும் இது கொண்டு செல்லப்பட்டுள்ளது - என்றார். (த-115)

# இரண்டு சந்தைகளை சீரமைக்க நிதி ஒதுக்கீடு

வலி.தென்மேற்கு, ஜூலை 27

பொதுமக்களினதும் உறுப்பினர்களினதும் கோரிக்கையைத் தொடர்ந்து வலி. தென்மேற்கு பிரதேசத்திலுள்ள இரு சந்தைகள் சுமார் 2கோடி ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவுள்ளன. முதற்கட்டமாக இரு சந்தைகளுக்கும் தலா 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்தார்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் ஒன்பது சந்தைகள் இருக்கின்றன. இவற்றில் நவாலியூரிலுள்ள பிரசாத் சந்தை மிகவும் பழைமை வாய்ந்த கட்டடத்தில் வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வருகின்றது. சொந்தக் காணி இல்லாமல் பல இடங்களில் இயங்கி வந்த இளவாலைச் சந்தை தனி நபரொருவர் பிரதேச சபைக்கு அன்பளிப்பாக வழங்கிய காணியில் தற்போது இயங்கி வருகின்றது.

வசதியீனங்கள் மத்தியில் பல குறைபாடுகளுடன் இயங்கிவரும் இவ்விரு சந்தைகளையும் காலத்துக்கேற்றவாறு அமைத்துத் தரும்படி பொதுமக்களும் இரண்டாம் வட்டார உறுப்பினரான ச.அச்சுதபாதனும் தவிசாளரைக் கோரினார். இதனைத் தொடர்ந்து இரு சந்தைகளையும் அமைப்பதற்கான நடவடிக்கையை தவிசாளர் மேற்கொண்டுள்ளார்.

கடலுணவு விற்பனைப் பகுதி மரக்கறி விற்பனைப் பகுதி மற்றும் வர்த்தக நிலையங்களுடன் அமைக்கப்படவுள்ள இரு சந்தைகளுக்கும் முதல் கட்டமாக தலா ரூபா 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-115)

# வடக்கு ஆளுநராகியதும் குடியை விட்டுவிட்டேன்

## சுரேன் ராகவன் இப்படிக் கூறுகிறார்

கிளிநொச்சி, ஜூன் 27

வடக்கு மாகாண ஆளுநராக பொறுப்பேற்ற ஜனவரி ஏழாம் திகதி தொடக்கம் குடியை விட்டுவிட்டேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

தேசிய போதை தடுப்பு வாரத்தின் வடக்கு மாகாண நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் விழிப்புணர்வு வாகன பேரணி இடம்பெற்றது. அதன் இறுதியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் கூடியிருந்தவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: முன்னர் நான் 'சோசல் ட்றிங்' அதாவது விருந்துபசாரங்களில் கலந்து கொண்டால் மட்டும் மது அருந்துவதுண்டு. அது எனது நண்பர்களுக்கு தெரியும். ஆனால் ஆளுநராகப் பொறுப்பேற்ற ஜனவரி ஏழு முதல் எந்தவொரு குடியையும் தனிப்பட்ட ரீதியாகவோ, பிரத்தியேகமாகவோ கையில் எடுத்தது கிடையாது. இதுவொரு போராட்டம். இந்த போராட்டத்தை முடிக்கும் வரை நாங்கள் சத்தியவான்களாக இருக்க வேண்டும். காலையில் ஒன்றை சொல்லி மாலையில் ஒன்றை செய்யக் கூடாது. எனவே போதை என்ற பிசாசுக்கு எதிராக நாம் ஒன்று சேர்ந்து போராடுவோம் என்று தெரிவித்தார். (த-21)

## வீடுகள், பயிர்களை நாசமாக்கி தற்போது

# பாடசாலைக்குள்ளும் அத்துமீறியது யானை

வவுனியா, ஜூன் 27

வவுனியா புதியவேலன்சின்னக் குளம் ஆனந்தகுமாரசுவாமி வித்தியாலய வளாகத்துக்குள் காட்டுயானைகளின் அட்டகாசம் காரணமாக பயன்தரும் மரங்கள் பல நாசமாக்கப்பட்டுள்ளன.

வவுனியா விளக்குவைத்தகுளம் கிராம அலுவலர் பிரிவுக் குட்பட்ட புதிய வேலன் சின்னக்குளம் கிராமம் காட்டுப்பகுதியை அண்மித்துள்ளது.

இந்தக் கிராமத்துக்குள் நுழையும் காட்டு யானைகள், மக்கள் குடிமனைகளை, அவர்களின் பயிர்களை உணவாக்கியும் நாசமாக்கியும் வருகின்றன.

நேற்றுமுன்தினமிரவு குடிமனைப் பகுதிக்குள் புகுந்த காட்டு யானைகள் புதியவேலன் சின்னக்குளம் ஆனந்தகுமாரசுவாமி வித்தியாலய வேலியை அறுத்துக்கொண்டு புகுந்து வாழை, மா, பலா, உட்பட பல பயன்தரு மரங்களைப் பிடுங்கிச் சேதமேற்படுத்தியுள்ளன.

குறித்த பாடசாலை வளாகத்துக்குள் அமைக்கப்பட்டிருக்கும் ஆழ்துளைக்கிணற்றில் மாணவர்கள் கைப்பம்பியால் நீரெடுத்து மிக கஸ்டப்பட்டு பராமரித்து வந்த பயன்தரும் மரங்கள்களை தொடர்ந்தும் யானைகள் சேதப்படுத்தி வருகின்றன. அந்த வகையில் பாடசாலையையும் யானைகள் விட்டுவைக்கவில்லை. அதனால் பாடசாலை சமூகத்தினர் விரக்கியிலுள்ள னர் என்று அந்தப் பாடசாலை ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை குடிமனைப்பகுதிகளுள்ளும் விவசாயிகளின் பயிர்களையும் அடிக்கடி காட்டு யானைகள் சேதப்படுத்தி வருகின்றன.

இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றோம் என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

எனவே குறித்த கிராமத்தைச் சுற்றி யானை வேலி அமைத்துத் தரவேண்டும் என்று புதியவேலன் சின்னக்குளம் கிராமமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதுவரை காலமும் பெரும்பாலும் பொதுமக்களின் வீடுகளை, அவர்களின் பயிர்களை யானைகள் நாசம் செய்து வந்தன. தற்போது அரச, பொதுச் சொத்துக்களையும் யானைகள் நாசம் செய்யத் தொடங்கியுள்ளன. (த)

# மக்களின் ஆவணங்களை வழங்க திணைக்களங்கள் பின்னடிப்பு

## சிவமோகன் எம்.பி. குற்றச்சாட்டு

மன்னார், ஜூன் 27

50 வருடங்களுக்கு மேலாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது காணிகளில் வாழ்ந்து வரும் மக்களுக்குக் காணி ஆவணங்களை வழங்குவதற்கு திணைக்களங்கள் பின்னிற்கின்றன. இந்த விடயத்தில் பிரதேச செயலகம் அதிக கரிசனை எடுக்க வேண்டும் என்று மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது: வள்ளிபுனம் தேவிபுரம் பகுதியில் மக்கள் எழுபது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்திருக்கிறார்கள். அபிவிருத்தி உத்தரவுப் பத்திரங்கள் கூட அவர்கள் கையில் இருக்கின்றன. இவ்வளவு காலம் அந்த மக்களுக்கான காணி உரிமத்தை வழங்காத இந்தத் திணைக்களங்கள் வெளிநாடுகளில் சொகுசாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், பழைய துண்டுகளைக் காட்டி தமது மத்திய வகுப்பு காணிகள் என்று கூறுபவர்களுக்குப் பின்னால் இந்த அதிகாரிகளும் சென்று கொண்டிருக்கிறார்கள். இது கண்டிக்க தக்க விடயம். மத்திய வகுப்புக் காணி இரத்து செய்யப்பட்டால் அது பற்றிய தகவல்களை நில அளவை திணைக்களத்துக்கு வழங்க வேண்டும் என்பது நடைமுறை. அந்த நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை. எனவே முன்னைய காலங்களில் இருந்த பிரதேச செயலர்கள் அவ்வாறான காணிகளுக்குரிய அனுமதிப் பத்திரங்களை வழங்கியிருக்கிறார்கள். இப்போது இருக்கும் பிரதேச செயலர்கள் செய்தது பிழைஎன்று சொல்வது சட்டத்துக்கு முரணான பிரச்சினை. இப்படியான தகவல்களை அவர்கள் சொல்லக்கூடாது. மக்களின் வாழ்வுரிமைகளில் இவர்கள் கைவைக்கக் கூடாது. பலருக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்குவதற்கு இப்போது உத்தரவுப் பத்திரம் வழங்கமாட்டோம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் வீட்டுத்திட்டங்களைத் தடுக்கக் கூடாது. இந்த நடவடிக்கைகளில் இவர்கள் பிழையாக நடப்பார்களேயானால் இந்த அரச அதிகாரிகளுக்கு எதிராகச் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழிகள் இல்லை என்று மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் - என்றார். (த-213)

# சத்திர சிகிச்சை மூலமாக குழந்தை பெற்ற தாய் சாவு

## கிருமித் தொற்றுக் காரணமா?

சாவகச்சேரி, ஜூன் 27

சத்திர சிகிச்சை மூலமாகக் குழந்தை பெற்ற தாய், ஏழு நாள்களின் பின்னர் சாவடைந்துள்ளார். கிருமித் தொற்றால் அவர் இறந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த குபேந்திரன் லோஜிகா (வயது -35) என்பவரே நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

அவர் கடந்த வாரம் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சத்திர சிகிச்சை மூலமாகக் குழந்தை பெற்றார்.

மூன்று தினங்களின் பின்னர் வீடு திரும்பிய இவருக்கு திடீரென வயிற்றில் வலி ஏற்பட்டது. சிகிச்சைக்காக மீண்டும் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் சாவடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இறப்புத் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையில், கிருமித் தொற்றால் இறந்திருக்கலாம்என்றுசந்தேகம்குறிப்பிடப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணை நடத்தி அறிக்கையிடுமாறு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமாருக்கு நீதிவான் பணித்தார். (த-9)

# கஞ்சிப்பானை இம்ரானுக்கு தடுப்புக் காவல் மீள நீடிப்பு

கொழும்பு, ஜூன் 27

திட்டமிட்ட குற்றச்செயல்களில்ஈடுபடும்குழுவின்தலைவரான கஞ்சிப்பானை இம்ரானை மேலும் 90 நாள்கள்தடுப்புக்காவலில்வைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு செயலரூடாக இந்த அனுமதி கிடைத்து ள்ளது என்று கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

டுபாயில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட கஞ்சிப்பானை இம்ரானை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு 90 நாள்கள் வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்றுடன் நிறைவு பெற்றுள்ளது. கொழும்பு மேலதிக நீதிவான் காஞ்சனா நிரஞ்சனா முன்னிலையில் நேற்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போது கஞ்சிப்பானை இம்ரான் சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி டிரந்த வெலியத்த மன்றில் முன்னிலையானார்.

சந்தேகநபரை தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சட்டத்தரணி, குற்ற விசாரணை பிரிவினரின் கோரிக்கை தொடர்பில் தாம் தெளிவுபடுத்த வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தேகநபரை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவிடம் ஒப்படைத்த நீதிவான், ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி சந்தேகநபரை மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (எ)

see more news in NEWUTHAYAN.COM

# நாவற்குழியில் கரணமடித்தது விவசாய திணைக்கள வாகனம்

கொடிகாமம், ஜூன் 27

கேரதீவுப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பிக்கப் வாகனம் நேற்றுமுன்தினம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் ஏ32 கேரதீவு - சங்குப்பிட்டி மன்னார் வீதியில் நாவற்குழி மகா வித்தியாலயத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் வேலித் தூணுடன் மோதி வாகனம் புரண்டது.

இதில் பயணித்த அரச நிறுவனம் ஒன்றின் நிர்வாக அலுவலர் ஒருவர் (பெண்) சிறு காயங்களுக்கு உள்ளாகி யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (த-159)

# கல்முனை போராட்டத்துக்கு சாவகச்சேரி பி.சபை ஆதரவு

கொடிகாமம் ஜூன் 27


கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்த வேண்டும் என்று சாவகச்சேரி பிரதேச சபையின் நேற்றுமுன்தினம் நடந்த அமர்வில் உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றினர்.

கல்முனை உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தக்கோரி இடம் பெற்று வருகின்ற போராட்டங்களுக்கு சாவகச்சேரி பிரதேச சபை ஆதரவு வழங்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் தி.தங்கவேலு தீர்மானம் கொண்டு வந்தார்.

அதனை சகல உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர். (த-159)

# நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க கண்டி வந்து கலந்துரையாடுக

## அனைத்துத் தரப்பினரையும் அழைக்கின்றது பலசேனா



கொழும்பு, ஜூன் 27

உயிர்த்த ஞாயிறுக் குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாட அனைத்துத் தரப்பினரும் ஜூலை மாதம் 7ஆம் திகதி கண்டிக்கு வர வேண்டும் என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசியல் பிரிவினை என்பது தீவிரவாதத்தைவிட பயங்கரமான ஒன்றாகும். தேசியம் தொடர்பில் கருத்து வெளியிட்டால் எம்மையும் சந்தேகத்துடன்தான் பார்க்கிறார்கள்.

உண்மையில் தற்போது நாடு எங்கு சென்றுக்கொண்டிருக்கிறது என்று எமக்குத் தெரியவில்லை.

இப்படியான குழப்பங்களால் முஸ்லிம் அடிப்படைவாதம் தொடர்பிலான பிரச்சினையைத் தீர்க்க முடியாத நிலையிலேயே நாம் அனைவரும் உள்ளோம்.

அதற்குரிய தீர்வை வழங்க வேண்டும். அதற்காக அனைத்துக் கட்சிகளுக்கும் நாம் பகிரங்க அழைப்பு விடுகின்றோம்.

அனைவரும் கண்டிக்கு வாருங்கள். நாம் இது தொடர்பில் பேச்சு நடத்துவோம். அதற்காக பேதங்களைப் பாராது அனைவரும் ஒன்றிணைய வேண்டும்என நாம் பகிரங்க அழைப்பு விடுக்கிறோம். நாம் அரசு அல்ல.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க 7 ஆம் திகதி கண்டிக்கு வருமாறு நாம் அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

முஸ்லிம், தமிழர், சிங்களவர் என அனைவரும் இதற்கு வரவேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாகும்-என்றார். (எ)

# வென்னப்புவப் பிரதேச சபை தடைக்கு மங்கள கண்டனம்



கொழும்பு, ஜூன் 27

தங்கொட்டுவ வார சந்தையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முஸ்லிம் மக்களுக்குத் வென்னப்புவ பிரதேச சபை தடை விதித் துள்ளமைக்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர கண்டனம் தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாணம் தங்கொட்டுவ வார சந்தையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முஸ்லிம் மக்களுக்கு வென்னப்புவ பிரதேச சபை தடை விதிக்கின்றது என்று வென்னப்புவ பிரதேச சபைத் தலைவர் சுசந்த பெரேரா நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார்.

முஸ்லிம் தரப்பினருடன் இணைந்து வியாபாரம் செய்வதனால் தாம் பாதுகாப்பை உணரவில்லை, எனவே பாதுகாப்பு காரணங்களுக்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பிரதேச சபைத் தலைவர் சுசந்த பெரேரா பிரதேச அரச அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தார்.

இது தொடர்பாக நேற்றுத் தனது டுவீற்றர் பக்கத்தில் கருத்துத் தெரிவித்துள்ள நிதி அமைச்சர் மங்கள, மகிந்த ராஜபக்ச தலைமையிலான பிரதேச சபையில் தடை விதித்திருப்பது இனவெறியைத் தூண்டும் செயற்பாடு என்று தெரிவித்துள்ளார். (எ)

# தொடருந்துச் சேவைகளை அத்தியாவசியமாக்க முடிவு


கொழும்பு, ஜூன் 27

இலங்கை தொடருந்துச் சேவையை அத்தியாவசியத் சேவையாகப் பிரகடனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று போக்குவரத்து மற்றும் சிவில் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அரசிதழ் அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்று பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தொடருந்துச் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற இயந்திரச் சாரதிகள், தொடருந்துக் கட்டுப்பாட்டாளர்கள், நிலைய அதிபர்கள், பரிசோதகர்களை மீண்டும் சேவையில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# என்ரபிறைஸ் சிறிலங்கா: 46,000 பேருக்கு கடன்கள்

கொழும்பு, ஜூன் 27

என்ரபிறைஸ்சிறிலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் 76 ஆயிரம் மில்லின் ரூபா கடன்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், 46 ஆயிரத்து 673 தொழில் முயற்சியாளர்களுக்கு இந்தக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகளவான கடன்கள் 'சொந்துரு பியச' வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன என்றும், விவசாயிகளுக்கான கடன் திட்டங்களான ரன் அஸ்வென்ன மற்றும் கொவி நவோதா கடன் திட்டங்களுக்கு அதிக கேள்விகள் நிலவுகின்றன என்றும் நிதி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, ரவிபல சவிக் கடன் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 339 தொழில் முயற்சியாளர்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)




# மதத்துக்கு எனத் தனியான சட்டங்கள் இருக்க முடியா!

## சம்பிக்க கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 27

நாட்டில் பல சட்டங்கள் இருக்க முடியாது. நாடு முன்னேற வேண்டுமானால் நடுநிலையான தனியொரு சட்டமே இருக்க வேண்டும்.

இவ்வாறு மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்கரணவக்க தெரிவித்துள்ளார்.

கெஸ்பேவயில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"தாம் பின்பற்றும் மதத்துக்கும் தாம் வாழும் பிரதேசத்துக்கும் ஏற்ப தனியான சட்டங்கள் இருப்பது நாட்டுக்கு உகந்ததல்ல. உலகில் பெரிய நாடான பிரேசில், இதுவரைக்கும் கனடா, ரஷ்யா போன்று ஏன் முன்னேறவில்லை?. அங்கு பலமான ஒரு சட்டம் இல்லாமையே காரணமாகும்.

நாடு முன்னேற வேண்டுமானால் பலமான ஒரு சட்டம் மாத்திரமே இருக்க வேண்டும். இன்றேல் சோமாலியா, நைஜீரியா போன்று நாடு துண்டு துண்டாகிவிடும்"- என்றார். (எ)

# கியூபா கிராமத்தைச் சீரமைக்க நிதி வழங்குகின்றது இலங்கை

கொழும்பு, ஜூன் 27

கியூபா நாட்டில் சூறாவளி காரணமாகச் சேதமடைந்த கிராமம் ஒன்றைச் சீரமைப்பதற்காக 50 ஆயிரம் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த ஆவணத்தை வெளிநாட்டு அலுவலக அமைச்சர் திலக் மாரப்பன அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தார்.

கியூபாவில் இந்த வருடம் ஜனவரி மாதத்தில் உருவான சூறாவளி கரணமாக அவானாஹி றெக்லாவுக்கு அருகிலுள்ள கிராமம் ஒன்று பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்தநிலையில் இரு நாடுகளுக்கிடையில் இராஜதந்திர தொடர்புகள் ஆரம்பிக்கப்பட்டு இந்த வருடத்தில் 60 வருடம் நிறைவடைவதை முன்னிட்டு, இரு நாடுகளுக்கிடையில் நிலவும் நட்புறவை மேலும் உறுதி செய்யும் நல்லுறவின் அடையாளமாக 50 ஆயிரம் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்க இலங்கை அரசு தீர்மானித்துள்ளது. (எ)

# குருதி ஆறு ஓடாமைக்கு நல்லிணக்கமே காரணம்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 27

நல்லிணக்கம் தோல்வியடைந்திருந்தால் நாட்டில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்று அடுத்த நாளே குருதி ஆறு ஓடியிருக்கும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நல்லிணக்கத்துக்கும் தீவிரவாதத்துக்கும் இடையே தற்போது மோதல் ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில் எதிர்கால முடிவுகள் தொடர்பாக மதத் தலைவர்கள் மற்றும் அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாட வேண்டியதன் அவசியம். கடந்த காலங்களில் நாடு பல்வேறு சவால்களை சமாளித்துள்ளது. தற்போதுபுதிய சவால்களைஎதிர்கொண்டுவருகின்றது. இந்த சவால்களை மிக வெற்றிகரமாக கையாண்டு அரசு தீர்வு வழங்க வேண்டியுள்ளது. நாட்டில் தற்போது நல்லிணக்கம் வெற்றி பெறாவிட்டிருந்தால் ஏப்ரல் 22ஆம் திகதி நாட்டில் ஒரு குருதி ஆறு ஓடியிருக்கும்- என்றார். (எ)

## ஜப்பான் வேலை வாய்ப்பு என முகவரிடம் ஏமாற வேண்டாம்

*மனுஷ எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 27
ஜப்பானில் புதிய தொழில் வாய்ப்பு தொடர்பில் அந்தந்த விடயங்களுக்கான தகுதி மற்றும் விதிகள் தொடர்பில் அறிவிக்கப்படவுள்ளது. அது வரையில் எந்தவொரு நிறுவனத்திலோ அல்லது நபரிடமோ ஏமாந்து விடக் கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேவையான தகுதி மற்றும் மொழியாற்றல் குறித்து தற்பொழுது ஜப்பான் அரசுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது என்று அவர் தெரிவித்தார். ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான புதிய தொழில் வாய்ப்பின் கீழ் 14 துறைகளுக்காக எம்மால் பணியாளர்களை ஜப்பானுக்கு அனுப்ப முடியும்.

கப்பல் இயந்திர உபகரணங்கள் துறை, விமானச் சேவை தொழிற்துறை, இலத்திரனியல் தொழிற்துறை, தகவல் தொழில்நுட்பம், உணவு பான தயாரிப்பு, கடற்றொழில் மற்றும் நீரியல்வள உற்பத்தி, கைத்தொழில் துறை, கட்டிட நிர்மாணம், தொழில்நுட்ப இயந்திர உபகரணங்கள், இயந்திர உதிரிப்பாகங்களை ஒன்றிணைத்தல், பராமரிப்பு சேவை, கட்டிடங்களைச் சுத்தம் செய்தல், முகாமைத்துவம், வாகனங்கள் பராமரிப்பு சேவை, தங்குமிட சேவை, உணவு சேவை, தொழிற்துறை உள்ளிட்ட 14 துறைகளில் இலங்கைப் பணியாளர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் உண்டு. இவை ஜப்பானின் பல்வேறு அமைச்சுகளுக்கு உட்பட்டதாக அமைந்துள்ளது.

இவை அனைத்து தகவல்களையும் ஒரே முறையில் வழங்குவதற்கு ஜப்பானின் எந்தவொரு நிறுவனமும் தொடர்புபடவில்லை என்றும் அவர் தெரிவித்தார். ஜப்பான் அரசுடன் நாம் உடன்படிக்கையை மேற்கொண்டதை அடுத்து அந்நாட்டில் ஏனைய அமைச்சுகளுக்கான தொழில் வாய்ப்புகளுக்கான தேவையான தகுதிகளை உள்ளடக்கிய விடயங்கள் குறித்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் தற்பொழுது பேச்சு நடத்தி வருகின்றார்.

ஒவ்வொரு விடயத்துடன் தொடர்புபட்ட துறைக்குத் தேவையான தகுதி எமக்கு தனித்தனியாக விடயங்களைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

இவை தொடர்பில் தீர்மானத்தை மேற்கொண்டு உடன்பாட்டுக்கு நாம் வரவில்லை. வயதெல்லை ஜப்பானின் வயது வரையறைக்கு உட்பட்டதாக அமையும்.

இந்த 14 துறைகளுக்கும் தேவையான தொழில் அனுபவத்தைக் கொண்ட இளைஞர் யுவதிகளை நாம் அடையாளம் காண வேண்டும். இதே போன்று அந்தந்த துறைக்குத் தேவையான எண்ணிக்கையில் இந்த சம்பந்தப்பட்ட அனைவரும் ஜப்பான் மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியமாகும். இந்த அளவிற்கு எம்மை நாம் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

நபர் ஒருவருக்கு அல்லது நிறுவனத்துக்கு இது தொடர்பில் விண்ணப்பம் அல்லது பணத்தை வழங்குவதினால் பயனில்லை. எந்தவொரு முகவர் நிலையமும் அல்லது நபர்களோ இதற்காகத் தெரிவு செய்யப்படவில்லை. தனிப்பட்ட நிறுவனம் அல்லது நபர்களுக்கு இது தொடர்பில் எந்த வித பொறுப்பும் ஒப்படைக்கப்படவில்லை. இதனால் மோசடிக்காரர்களிடம் சிக்க வேண்டாம்- என்றார். (எ)

# ரணிலுக்குப் பதவி கொடுத்தது மைத்திரி செய்த முதல் தவறு

*டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு*



கொழும்பு, ஜூன் 27
நாட்டின் நிலையற்ற தன்மைக்கு அரசமைப்பின் 19ஆவது திருத்தம் மாத்திரம் காரணமல்ல. நாடாளுமன்றத்தில் மூன்றில் ஒரு பெரும்பான்மை கூட ஆதரவு கிடைக்காத ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவைத் தலைமை அமைச்சராக நியமித்தமையே முறையற்ற அரசைத் தோற்றுவித்தது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முந்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒரு தலைமைத்துவத்தின் கீழ் அரசு செயற்படாமல் அரசியல் நெருக்கடிகள் ஏற்படுவதற்கு அரசமைப்பின் 19ஆவது திருத்தம் முதன்மை காரணம் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தற்போது குறிப்பிட்டுள்ளமை பல மாறுப்பட்ட கருத்துக்களை தோற்றுவித்துள்ளது. கடந்த நான்கு வருடகாலமாக நாட்டில் ஏற்பட்ட அனைத்து அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகளுக்கும் அரச தலைவரும் பொறுப்பு கூற வேண்டும். அரசியல் நிலையற்ற தன்மை மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு அரச தலைவர் 19ஆவது திருத்தத்தை மாத்திரம் குற்றஞ்சாட்ட முடியாது. நாடாளுமன்றத்தில் மூன்றில் ஒரு பெரும்பான்மை ஆதரவு இல்லாத ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை தலைமை அமைச்சராக்கியமை அரச தலைவர் அரசியல் ரீதியில் முன்னெடுத்த முதல் தவறாகும் - என்றார். (எ)

# இலங்கையின் பாதுகாப்புக்கு மோடியின் வருகையே சாட்சி

*சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவிப்பு*



கொழும்பு, ஜூன் 27
இலங்கை பாதுகாப்பான நாடு என்பதற்கு நரேந்திர மோடியின் வருகை சான்றாக அமைந்துள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இலங்கைக்கு வந்த மோடி தாக்குதலில் பாதிக்கப்பட்ட தேவாலயத்துக்கு சென்றிருந்தார். அவர் இதன்போது சுமுகமாகவும் வசதியாகவும் இருந்தார். இதைவிட பாதுகாப்புக்குச் சிறந்த சான்று என்ன இருக்கின்றது?"

குண்டுத் தாக்குதலுக்கு முன்னர் இருந்ததைப் போலவே தற்போது நாட்டின் நிலமை காணப்படுகின்றது. தேவாலயங்களையும் விடுதிகளையும் இலக்கு வைத்து தாக்குதல் நடத்திய ஐ.எஸ். பயங்கரவாதிகளை ஆதரித்தவர்கள் யார் என்பதைக் கண்டறிய எமது உளவு துறையினருக்கு 10 நாள்கள் போதுமாக இருந்தது.

அவசரகால நிலை நடைமுறைப்பட்டுத்தப்பட்டுள்ளதால் சுற்றுலாவுக்கு எந்த ஆபத்தும் இல்லை. தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்களை விசாரிக்க வேண்டியிருந்தமையாலேயே அவசரகால நிலை நடைமுறைப்படுத்தப்பட்டது. அவசரநிலையை விரைவில் நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன்பின்னர் நாடு ஏப்ரல் 21க்கு முன்பு இருந்த நிலைக்குத் திரும்பும் என நம்புகின்றேன். சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் முகமாகப் பயண கட்டணங்கள் மற்றும் விடுதிக் கட்டணங்களை 50 முதல் 60 சதவிகிதம் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 500 இந்தியர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பொறுத்தவரை இந்தியா முதலிடத்தில் உள்ளது- என்றார். (எ)

## துப்பாக்கிச் சூடு விவகாரம்: சந்தேக நபர்கள் விடுதலை

கொழும்பு, ஜூன் 27
மட்டக்குளி - சமித்புரவில் 2016 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் உயிரிழந்தமை தொடர்பாக இரத்தினபுரியில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். குற்றச்சாட்டுக்கு இலக்காகியிருந்த 9 சந்தேக நபர்களை, நிரபராதிகளாகக் கருதி விடுதலை செய்ய கொழும்பு உயர் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் ஆதித்ய பட்பெந்தி முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் பாதாள உலக தலைவர் (குடு ரோஷன்) உட்பட 5 பேர் கொல்லப்பட்டனர். (எ)

## சிறிலங்கன் வானூர்திக்கு த்மாமில் எரிபொருள்

கொழும்பு, ஜூன் 27
சிறிலங்கன் வானூர்திச் சேவைகள் நிறுவனத்தின் விமானங்களுக்கு சவூதி அரேபியாவின் தமாம் வானூர்தி நிலையத்தில் எரிபொருளை வழங்குவதற்கு ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சவூதி அரேபியாவில் தமாம் வானூர்தி நிலையத்தில், வானூர்தி எரிபொருளை விநியோகிப்ப தற்கான ஒப்பந்தம் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கு அமைய 2 மில்லியன் டொலராகும். (எ)

# மாகாணத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழு தயார்

*அதன் ஆணையாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 27
எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராக உள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எந்தவொரு விதத்திலும் தேர்தலை பிற்போட தேர்தல்கள் ஆணைக்குழு இணக்கம் தெரிவிக்கவில்லை .

தற்காலத்தில் சமூகத்தில் பிரதான தலைப்பாக மாகாண சபை தேர்தல் மற்றும் அரச தலைவர் தேர்தல் என்பன மாறியுள்ளன.

பிற்போடப்பட்டுள்ள மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கே தேர்தல் ஆணைக்குழு ஆர்வமாக உள்ளது.

ஏதாவது சந்தர்ப்பத்தில் அரச தலைவர் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதற்கும் தேர்தல்கள் திணைக்களம் தயாராக உள்ளது - என்றார். (எ)



மகிந்த தேசப்பிரிய

# தேவதையாக காட்சியளித்த ‘19’ காட்டேரியாக மாறியது எப்படி?

## தமிழ் முற்போக்குக் கூட்டணி கேள்வி

கொழும்பு, ஜூன் 27

ஆடத் தெரியாதவன் மேடைக் கோணல் என கதைவிடுப்பதுபோல் தான் தனது இயலாமையை மூடிமறைப்பதற்காக அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டம் மீது பழிபோடுவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முயற்சித்து வருகின்றார்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலு குமார் தெரிவித்தார்.

அரசமைப்பின் 18 மற்றும் 19 ஆவது திருத்தச் சட்டங்கள் இல்லாதொழிக்கப்படவேண்டும் என்றும், 19ஆவது திருத்தச் சட்டம் காரணமாகவே நாட்டில் அரசியல் நிலையற்றதன்மை உருவாகியுள்ளது என்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் அறிவித்திருந்தார்.

நாவலப்பிட்டியவில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஜனநாயகத்துக்கு சட்ட ரீதியில் சமாதி கட்டும் நோக்கிலேயே முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவால் 18ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்மூலம் இரண்டு தடவைகளே அரச தலைவர் பதவியை வகிக்கலாம் என்ற நிலமையை மாற்றியமைத்து, ஆயுள் முழுதும் அரச தலைவர் கதிரையில் அமர்வதற்கே மகிந்த திட்டம் தீட்டினார். மறுபுறத்தில் சர்வாதிகார ஆட்சியும், ஜனநாயக அடக்குமுறைகளும் தலைவிரித்தாடின.

சட்டவாக்கம், நீதி ஆகிய துறைகளையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் மகிந்த வைத்திருந்தார். இவற்றை சகித்துக் கொள்ள முடியாததால்தான் அந்த ஆட்சியிலிருந்து தான் வெளியேறினார் என தேர்தல் பரப்புரைகளின்போது மைத்திரிபால கருத்து வெளியிட்டிருந்தார்.

அதுமட்டுமல்ல 19ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கும் அரசியல் தலைமைத்துவத்தை வழங்கினார். எனவே, அன்று தேவதையாகத் தெரிந்த 19ஆவது திருத்தச் சட்டம் இன்று அரசதலைவரின் விழிகளுக்குக் காட்டேரியாக விளங்குவது ஏன்?

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு பொதுத்தேர்தல் நடைபெற்று ஒன்றரை வருடத்தில் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இருந்தது. எனினும் 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக இந்த நிலமை மாற்றப்பட்டது. இதன்படி நான்கரை வருடங்கள் முடிவடையும்வரை அரச தலைவரால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

ஒக்ரோபர் மாதம் அரசியல் சூழ்ச்சி ஏற்பட்டபோதுகூட 19 ஆவது திருத்தச் சட்டமே நாட்டையும், ஜனநாயகத்தையும் பாதுகாத்தது. சுயாதீன ஆணைக்குழுக்களும் நிறுவப்பட்டதால் நீதித்துறையும் கம்பீரமாக செயற்படுகின்றது. அரசியல் சூழ்ச்சியின்போது உயர்நீதிமன்றம் துணிகரமாக வழங்கிய தீர்ப்பே இதற்கு சிறந்த சான்றாகும்.

அதேவேளை, அரச தலைவர் தவறான முடிவுகளை எடுக்கும் பட்சத்தில் அதை சட்டரீதியில் சவாலுக்கு உட்படுத்தும் சூழ்நிலையும் 19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமே கிடைத்தது. இந்தச் சட்டத்தில் ஜனநாயகப் பண்புகள் குவிந்து கிடக்கின்றன. ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் திருத்தம் செய்யலாம். மாறாக முழுமையாக இரத்துச் செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தற்போது திசைமாறி பயணித்துக் கொண்டிருக்கின்றார். அநீதிகளுக்குத் துணைபோகும்வகையிலேயே அவரின் அரசியல் தீர்மானங்கள் அமைந்துள்ளன. தனது இயலாமையை மூடிமறைத்து, குறுக்கு வழியிலேனும் அரசியலில் ஹீரோவாகுவதற்கே 19ஆவது திருத்தம் மீது அவர் பழிபோடுகின்றார். எஞ்சியுள்ள காலப்பகுதியிலானது நிதானமாகச் செயற்பட்டு, அரசியலிலிருந்து கௌரவமாக விடைபெறு மாறு அரச தலைவரிடம் கேட்டுக்கொள்கின்றேன்” - என்றார். (எ-22)

# வெளிப்பூச்சுக்கு போதை ஒழிப்பு மறுபுறம் மது நிலையத் திறப்பு

## அதிகாரிகளைச் சாடுகிறார் ரவிகரன்

முல்லைத்தீவு நகரில் மதுபான நிலையம் அமைக்கக் கூடாதஇடங்களில்அவற்றை அமைத்துத் திறக்க அரசிதழில் அனுமதி கொடுத்துவிட்டு, வெளிப்பூச்சுக்குபோதையை ஒழிப்போம் என்ற கோசத்துடன் அரச அதிகாரிஞும் சரி இதற்கு துணைபோவோரும் நடந்து கொள்கின்றனர் என்றுவடக்கு மாகாணசபை முன்னாள்உறுப்பினர்து.ரவிகரன் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு நகர்பகுதியில் அமைந்துள்ள மதுபான சாலை விடயம் தொடர்பில் பலதடவைகள் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், மாகாணசபையிலும் இது பற்றிய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மாவட்டச் செயலரிடம் கேட்ட போது, குறித்த மதுபான சாலை ஆறுமாதங்களுக்குப் பிறகு இருக்கமாட்டாது, அகற்றப்பட்டுவிடும் என்று எழுத்துமூலம் அறிவித்திருந்தார்.

இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இன்றும் அது இயங்கிக்கொண்டிருக்கின்றது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி மதுபான நிலையம் பூட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முற்பகுதியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் அரசதலைவர் மது ஒழிப்பு தொடர்பில் உரையாற்றிய பின்னர் இது திறக்கப்பட்டுள்ளது.

இது மக்கள் மத்தியில் பெரிய வியப்புக்குள்ளாகியுள்ளது. அரசதலைவர் மது ஒழிப்புக்காக ஒருபுறம் பரப்புரை செய்துகொண்டு மறுபுறம், பொருத்தமற்றஇடத்தில்இருக்கும் மதுபான சாலையை திறந்துவைக்கிறார்.

இதுபற்றிவடக்குஆளுநருக்கு எழுத்து மூலமாக அறிவித்திருந்தேன்.

அது பற்றி முல்லைத்தீவு மாவட்ட செயலிடம் ஆளுநரின் உதவிச் செயலர் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியிருந்தார்.

அவ்வாறு கடிதம் அனுப்பிய பின்னர் கடந்த வாரம் தொடக்கம் மீண்டும் அந்த மதுபான நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

இது தவறான நடவடிக்கை. முல்லைத்தீவு நகரிலுள்ள மதுபான நிலையம் அமைந்துள்ள இடம், இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சட்டங்களுக்கு அமைய பொருத்தமற்றது. அதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. முல்லைத்தீவு பிரதேச செயலகத்தால் நிறுவப்பட்ட குழுவின் அறிக்கை இருக்கின்றது. பள்ளிவாசல், சுனாமி நினைவாலயம், எட்வின் முன்பள்ளி, சிறுவர்பூங்கா, பொழுதுபோக்கு பூங்கா, வைரவர்ஆலயம், கப்பல்ஏந்தி மாதா என்று மதுபான.சாலையில் இருந்து குறுகிய தூரங்களுக்குள் இவை காணப்படுகின்றன.

அவ்வாறிருக்கையில் மதுபான நிலையத்தையம் இயங்கச்செய்து பித்தலாட்டம் செய்கிறார்கள்.

அரசிதழ் அறிவித்தலின் படி இவ்வாறான இடங்களுக்கு அருகில் மதுபான சாலை இருக்கமுடியாது. இவற்றையெல்லாம்புறம்தள்ளிவெளிப்பூச்சுக்கு ‘போதை ஒழிப்போம்’ என்று கோசத்துடன் அரச அதிகாரிகளும் இதற்குத் துணை பாடுபவர்களும் நடந்து கொள்கின்றனர்.

மதுபான நிலையத்தைத் திறந்துவைத்து இளைஞர்களை போதைக்கு அடிமையாக்கும் விடயத்தில் அதிக கவனம் எடுப்பவர்கள் பற்றி என்ன சொல்லவேண்டும்! சரியானவர்கள் இருந்திருந்தால் இந்த மதுபான நிலையம் இந்த இடத்தில் இருந்திருக்காது. மதுபான நிலையத்தைப் பொருத்தமான இடத்தில் அமையுங்கள். பொருத்தமற்ற இடத்தில் அமைக்காதீர்கள். முல்லைத்தீவில் அமைந்துள்ள இந்த மதுபான நிலையம் அகற்றப்படவேண்டும் - என்று மேலும் தெரிவித்தார். (சூ-ரி3)

# அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரை கைது செய்யக்கோருவது தவறாம்

கொழும்பு, ஜூன் 27

அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரை கைது செய்ய வேண்டும் என்று மாற்று கொள்கைகளுக்கான மத்திய நிலையம் பதில் பொலிஸ் மா அதிபரிடம் முறையிட்டுள்ளமை தவறான செயற்பாடாகும். குண்டு தாக்குதலை தொடர்ந்து ஏற்படவிருந்த இன வன்முறைகள் மத தலைவர்களின் வழிநடத்தலாலேயே தவிர்க்கப் பட்டுள்ளன என்பதை நினைவுப்ப டுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மத தலைவர்களின் கருத்துக்களுக்கு அரசியல் வேறுப் பாடுகளின்றி முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அரசமைப்பின்படி பௌத்த மதத்துக்கு இணையாக ஏனைய மதங்களுக்கும் உரிய இடங்கள்வழங்கப்பட்டுள்ளன.

அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் வரகாகொட ஞானரத்ன தேரரை கைதுசெய்ய வேண்டும் என்று மாற்று கொள்கைகளுக்கான மத்திய நிலைய பொறுப்பதிகாரி பதில் பொலிஸ்மா அதிபரிடம் முறை யிட்டுள்ளமை தவறான ஒருதீர்மானமாகும். அதை அவர் திருத்திக் கொள்ள வேண்டும்.

குண்டுதாக்குதல் தொடர்பில் அரசு முன்னெடுக்கும் விசாரணைகள் பல காணப்படுகின்றது. இதுவரையில் யார் குற்றவாளி என்பது அறியப்படவில்லை என்று பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளமையில் உண்மைதன்மை காணப்படுகின்றது - என்றார். (எ)

# மின்வலு அமைச்சின் திட்டத்துக்கு எதிர்ப்பு

## மின்சாரத்தைப் பயன்படுத்துவோர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

இலங்கை மின்சார சபையின் பத்தாயிரம் ரூபா இழப்பை ஈடுசெய்வதற்காக மின்சார அலகு ஒன்றை 7 ரூபாவால் அதிகரிக்கும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் திட்டம் முறியடிக்கப்படும் என்று மின்சாரத்தை பயன்படுத்துவோர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஜனநாயக முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கருத்துத்தெரிவித்தபோதே மின்சாரத்தை பயன்படுத்துவோர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கே.எச். சஞ்சீவ தம்மிக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை மின்சார சபை பத்தாயிரம் ரூபா இழப்பை சந்தித்து வருவதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த இழப்பை ஈடுசெய்வதற்காக மின்சார கட்டணத்தை ஒரு அலகுக்கு சுமார் ரூ 10 ரூபா வரை அதிகரிக்க வேண்டும். அதற்கான முயற்சிகளையே மின்சாரத்துறை அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

2016 ஆம் ஆண்டிலிருந்து அதிக விலைக்கு மின்சாரத்தை கொள்வனவு செய்தமை காரணமாகவே மின்சார சபை இந்த இழப்பைச் சந்தித்துள்ளது. தனியார் துறையினிடமிருந்து 40 ரூபா என்ற அதிகவிலைக்கு மின்சாரம் வாங்கியதால் மின்சார சபைக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்த விடயமே.

இலங்கை மின்சாரச் சட்டத்தின்படி, மின்சாரம் வாங்கும்போது ஒப்பந்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். ஆனால் முறைப்படி செயற்படாமல் தன்னிச்சையாக செயற்பட்டு வருகின்றது. ஊழல் மோசடி தொடர்பாக நாம் வெளிப்படையாவே லஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளோம்.

இவ்வாறாக மின்சாரக் கட்டணத்தில் அதிகரிப்பு ஏற்படுமாயின் மின்சார பாவனையாளர்கள் பெரும் நெருக்கடியை சந்திக்க நேரிடும். இது தொடர்பில் மின்சார பாவனையாளர்களை தெளிவுபடுத்த வேண்டியமை அவசியமாகும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இலங்கை மின்சார சபை 100 மெகாவோல்ட் மின்சாரப்பற்றாக்குறையை சந்தித்துள்ளதாக மின்வலுத்துறை அமைச்சர் ரவிகருணாநாயக்க தெரிவித்திருந்தார். துருக்கி நாட்டு கப்பலிலிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்யவதற்கான விலைமனுக் கோரப்பட்டதையடுத்து, தற்போது 200 மெகாவோல்ட் மின்சார தட்டுப்பாடு நிலவுகின்றது என்று அறிவித்திருந்தார். பின்னர் 470 மெகாவோல்ட் மின்சார தட்டுப்பாடு நிலவுகின்றது என்றுமாறுபட்ட கருத்தை தெரிவித்துள்ளார்.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு 100 மெகாவோல்ட் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான அனுமதியையே வழங்கியுள்ளது.

100 மெகா வோல்ட்டுக்கும் அதிகமான அளவு மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளின் விளைவாக அலகிற்கு 7 ரூபாவால் மின்சார கட்டணம் அதிகரிக்கும் நிலை ஏற்படும். இவ்வகையான நடவடிக்கைகளையும் மின்வலு அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

2016 ஆம் ஆண்டிலிருந்து அதிக விலைக்கு மின்சாரத்தை கொள்வனவு செய்தமையின் காரணமாகவே மின்சார சபைக்கு 10 ஆயிரம் கோடி ரூபா நட்டத்தை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எவ்வாறெனில் தனியார் துறையினரிடத்திலிருந்து 40 ரூபாவுக்கு அதிக பெறுமதியில் மின்சாரத்தை கொள்வனவு செய்துள்ளனர். இலங்கை மின்சார சட்டத்துக்கு அமைய ஒப்பந்த முறையினூடாகவே மின்சார கொள்வனவுகளை மேற்கொள்ள முடியும். மாறாக இந்த ஒப்பந்தமுறைமையை பின்பற்றாமல் செயற்படுகின்றமையே அதற்கு காரணமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. - என்றார். (எ)

## "19" திருத்தம்...

அடுத்ததாக எவர் ஆட்சிக்கு வந்தாலும், 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும். அவ்வாறு நீக்கினால் மட்டுமே 2020ஆம் ஆண்டு இலங்கைக்கு நன்மையான ஆண்டாக இருக்கும்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நாட்டுக்கு ஒரு சாபக்கேடு. அப்போது அரச சார்பற்ற அமைப்புக்கள் வழங்கிய அழுத்தத்தால் செய்யப்பட்ட அந்தத் திருத்தம் குறித்து ஆராய்ந்து அதைச் செய்ய முன்னின்றவர்கள் அரசமைப்பு நிபுணர்களா என்று பார்க்க வேண்டும். எதிர்வரும் அரசதலைவர் தேர்தலுக்கு முன்னர் இதனை ஒழித்தால்கூட நல்லது தான்.

**சுதந்திரக் கட்சியே தீர்மானிக்க வேண்டும்**

எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் நான் போட்டியிடுவதா? இல்லையா? என்பதை சிறிலங்கா சுதந்திரக் கட்சியே தீர்மானிக்கவேண்டும். கட்சி எடுக்கும் தீர்மானத்துக்கு மதிப்பளித்தே நான் செயற்படுவேன்.

**பொது வாக்கெடுப்பு என்ற செய்தி தவறானது**

அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு மக்களின் ஆணையைக்கோரி பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கு அரச தலைவர் முயற்சிக்கின்றார் என வெளிவந்த செய்தி பொய். இது தவறான செய்தி என்பதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

**அரசதலைவர் தேர்தலின் பின்னரே பொதுத்தேர்தல்**

அரசதலைவர் தேர்தல் நடத்தப்பட்டு இரண்டு மாதங்களில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும். அதற்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற வாய்ப்பில்லை. வெளிநாட்டுக்கு நான் பயணம் செய்யும்போது குறிப்பிட்ட சிறு குழுவையே அழைத்துச் செல்கிறேன். ஆனால், ஊடகங்கள் மிகைப்படுத்தி செய்திகளை வெளியிடுகின்றன. நான் கடந்த 4 வருடங்களில் 10க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை என்னுடன் வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்றதில்லை. தஜிகிஸ்தானில் நடைபெற்ற மாநாட்டுக்கு 50 பேரை நான் அழைத்துச்சென்றதாகக் கூறப்படுவதில் உண்மையில்லை.

**தெரிவுக்குழு முன் முன்னிலையாகேன்**

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவானது நாடகத்தையே அரங்கேற்றி வருகின்றது. இதற்கான கதை, திரைக்கதை வசனமெல்லாம் அலரிமாளிகையில் இருந்தே எழுதப்படுகின்றது. தெரிவுக்குழுவில் முன்னிலையாகுமாறு எனக்கு இதுவரை அழைப்பு விடுக்கப்படவில்லை. அவ்வாறு அழைப்பு வந்தால்கூட தெரிவுக்குழு முன்னிலையில் நான் முன்னிலையாக மாட்டேன்.

**பாதுகாப்பில் திருப்தி**

ஏப்ரல் 21ஆம் திகதிக்குப் பின்னரான நாட்டின் பாதுகாப்பில் எனக்குத் திருப்தி. தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் நடத்தும் விசாரணைகளிலும் எனக்குத் திருப்தி. தாக்குதல் சம்பவங்களின் முன்னர் சந்தேகநபர் வெளிநாட்டில் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார். ஏனையோரில் பலர் சாவடைந்துவிட்டனர். சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதேவேளை, இவர்கள் அனைவருடனும் தொடர்பு வைத்திருந்தவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

**அவசரகாலச் சட்டம் இனி நீடிக்கப்படாது**

நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் இப்போதைக்கு மட்டுமே நீடிக்கப்படும். அடுத்த தடவை அது நீடிக்கப்படாது.

**நால்வருக்கு விரைவில் சாவுத்தண்டனை**

போதைப்பொருள் கடத்தல் குற்றத்துக்காக சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட 4 பேருக்கான தண்டனை விரைவில் நிறைவேற்றப்படும். அதற்கான ஆவணத்தில் நான் கைச்சாத்திட்டுள்ளேன்.

**அமெரிக்க இராணுவத்துக்கு இலங்கையில் இடமில்லை**

அமெரிக்காவுடனான சோபா மற்றும் எக்சா உடன்படிக்கைகளுக்கும் நான் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளேன். இவை நாட்டுக்கு ஆபத்தானவை. ரஷ்யாவுடன் பாதுகாப்பு உறவுகளை நிறுத்துமாறு இலங்கையிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது. எனினும், அமெரிக்க இராணுவம் இலங்கையில் நிலைகொள்ள நான் ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன் - என்றார். (ம-22)

## சட்டம்...

கொழும்பு, ஜூன் 27

அனைத்து இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்று ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை விளக்கமளித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் 41ஆவது அமர்வில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பெச்சலெட் இலங்கை தொடர்பாக தனது கவலையை வெளியிட்டார். இந்த நிலையில் இலங்கையின் தற்போதைய சூழ்நிலைகள் குறித்து இலங்கையின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு விளக்கமளித்துள்ளனர்.

குறிப்பாக ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலை அடுத்து பாதுகாப்பு நிலமைகள் தொடர்பாக தெளிவுப்படுத்தப்பட்டுள்ளதாக, ஜெனீவாவில் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிட அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ள அயலுறவுத் துறை அமைச்சு, ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட நாட்டின் சமீபத்திய நிலைமைகளைத் தெளிவுபடுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் நலனுக்காகவே அவசரகால சட்டம் நீடிக்கப்பட்டது என்பதையும், தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களை காவலில் வைத்து விசாரணை செய்ய இந்த அவசரகால சட்டம் உதவுவதாகவும் இலங்கையின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

இதேவேளை பாடசாலைகள், மத நிறுவனங்கள் மற்றும் இராஜதந்திரிகள் அலுவலகம் என பாதிக்கப்படக்கூடிய இடங்களில் சோதனைகளை நடத்தி பாதுகாப்பினை உறுதிப்படுத்தவே படைகள் குவிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். அத்தோடு படையினர் தங்கள் கடமைகளை இடையூறின்றி செய்வதற்கு அதிகாரம் அளிக்க அவசரகால விதிமுறைகள் அவசியமாக இருந்ததாகவும் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளதாக அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

## இலங்கைக்...

அதில் இருந்த 7 பேரையும் கைது செய்தனர். இலங்கை இராமேஸ்வரம் பகுதியில் இருந்து மீன்பிடிக்கப் புறப்பட்ட ஓர் படகில் நான்கு மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் நெடுந்தீவுக் கடற்பரப்பின் அருகே கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட நால்வரும் இன்றைய தினம் யாழ்ப்பாணம் நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இதேபோல் யாழ்ப்பாணம் பருத்தித்துறையை அண்டிய கடற்பரப்புப் பகுதிக்குள் ஊடுருவிய இந்திய நாட்டுப்படகு ஒன்றையும் கடற்படையினர் கைது செய்தனர்.

குறித்த படகில் மூன்று இலங்கையரே பயணித்த நிலையில் மூவரும் ஈழ அகதிகளாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. குறித்த படகு மண்டபம் பகுதியைச் சேர்ந்த ஒரு மீனவரினது எனவும் குறித்த படகினை தனது அனுமதி இன்றி எடுத்துச் சென்றுவிட்டனர் என்று இந்தியப் பொலிஸாரிடம் அவர் முறையிட்டுள்ளார். (ம-105)

## பலத்த...

வங்களின் முக்கிய சூத்திரதாரி ஸஹ்ரான் ஹாசீமின் மனைவியும் சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் ஏப்ரல் 26ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்து உயிர்தப்பியவருமான அப்துல் காதர் பாத்திமா ஹாதியா (வயது - 28) நேற்று கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஸஹ்ரானின் மனைவியும், மகளும் நேற்றுக் காலை கல்முனைக்கு அழைத்துவரப்பட்டனர். ஸஹ்ரானின் மனைவி, கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவர் தொடர்பான விசாரணை நீதிவானின் மூடிய அறைக்குள் முன்னெடுக்கப்பட்டது. இந்த விசாரணையில் 3 சாட்சியாளர்கள் வேறுவேறாக மூன்னிலைப்படுத்தப்பட்டு நீண்ட நேர விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

எனினும், குறித்த சாட்சியாளர்களிடம் எந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்பதை ஊடகங்களுக்கு அறிவிக்க நீதிமன்றப் பதிவாளர் தயக்கம் காட்டினார்.

பின்னர் ஸஹ்ரானின் மனைவி பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கும் சிறிது நேரம் அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. இதன்போது பணக்கொடுக்கல் வாங்கல் தொடர்பான விடயங்களையும், தான் அறிந்த தாக்குதல் விடயங்களையும் வாக்குமூலத்தில் அவர் தெரிவித்துள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஸஹ்ரானின் மனைவியுடன் கல்முனைக்கு அழைத்துவரப்பட்ட அவரின் மகளான பாத்திமா ருஸையா (வயது - 03) நீதிமன்ற வளாகத்திலும் பொலிஸ் நிலையத்திலும் பொலிஸ் அலுவலர்களுடன் செல்லமாக விளையாடினார். இவரும் சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் தாயாருடன் படுகாயமடைந்து உயிர்தப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த விசாரணைகளை அடுத்து எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி புதன்கிழமை மீண்டும் நீதிமன்ற விசாரணைக்காக ஸஹ்ரானின் மனைவி அழைக்கப்பட்டுள்ளார். நேற்றைய விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் மீண்டும் கொழும்பு நோக்கி ஸஹ்ரானின் மனைவியும், மகளும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். (ம-22)

## ரிசாத்தின்...

லும், தெரிவுக்குழுவின் கோரிக்கைக்கமைய அவர் மீதான விசாரணை நாளை வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தெரிவுக்குழுவில் நேற்று முதலாவதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மஹேஷ் சேனாநாயக்கவின் சாட்சியங்கள் பெறப்பட்டிருந்தன. அதன்பின்னர், வர்த்தக அமைச்சின் செயலாளர் கே.டீ.என்.ஆர். அசோக்க, தொழிற்றுறை அபிவிருத்தி சபையின் நிறைவேற்று அதிகாரி டீ.எல்.யூ. ன்னமல்ல ஆகியோரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. எனினும், மாலை 5 மணியளவில் சாட்சியமளிக்க முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவுக்குழுவில் முன்னிலையான போதிலும் சாட்சியமளிப்பு ஒத்திவைக்கப்பட்டது.

'அவசர கூட்டம் ஒன்று இருப்பதன் காரணமாக சாட்சியத்தை இன்று (நேற்று) பதிவு செய்ய முடியாது. 28ஆம் திகதி (நாளை) பிற்பகல் 2 மணிக்கு தங்கள் சாட்சியத்தைப் பதிவுசெய்யத் தீர்மானித்துள்ளோம்' என்று தெரிவுக்குழு உறுப்பினர்கள் அறிவித்ததையடுத்து கதிரையில் உட்கார்ந்த கையோடு அங்கிருந்து ரிசாத் வெளியேறினார். (ம-22)

## கைதான...

ரிசாத் பதியுதீனோ அல்லது வேறு எவருமோ எனக்கு எவ்வித அழுத்தங்களையும் கொடுக்கவில்லை.' இவ்வாறு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்தார்.

'கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி இஷாம் அஹமட் என்ற நபர் தெஹிவளைப் பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டதன் பின்னர், ரிசாத் பதியுதீன் தொலைபேசி ஊடாக மூன்று தடவைகள் என்னைத் தொடர்புகொண்டு இஷான் அஹமட் என்ற நபர் கைதுசெய்யப்பட்டுள்ளாரா என்று மாத்திரமே என்னிடம் வினவினார்' எனவும் இராணுவத் தளபதி கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தினமன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தாக்குதல் சம்பவத்தின் பின்னர் அரசியல்வாதி அல்லது தனிநபர் விசாரணையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனரா என்று தெரிவுக்குழு குழு இராணுவத் தளபதியிடம் கேள்வி எழுப்பியது. அப்போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட இராணுவத் தளபதி, மேலும் கூறியதாவது:

'இந்த சம்பவத்துக்குப் பிறகு, ஏப்ரல் 21ஆம் திகதி, நான் இராணுவத்தைப் பாதுகாப்பில் ஈடுபட வைத்தேன். நான் வழங்கிய அறிவுறுத்தல்கள் மற்றும் அதிகாரங்களைக் கொண்டு இராணுவம் சோதனைகள், தேடல்கள் மற்றும் கைதுகளை மேற்கொண்டது.

ஏப்ரல் 26ஆம் திகதி, தெஹிவளையில் இஷாம் அஹமட் என்ற நபர் கைதுசெய்யப்பட்டார். முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பைக் கொடுத்தார். எனக்கு அமைச்சரைத் தெரியும். இந்த நாடாளுமன்றத்தில் பல எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களை இராணுவத் தளபதி என்ற ரீதியில் நான் அறிவேன். அது நாட்டு மக்களுக்கும் தெரியும். எனவே, அவர்கள் என்னைத் தனிப்பட்ட முறையில் பேச தொலைபேசியில் அழைப்பு எடுப்பார்கள். நிகழ்வுகளைப் பற்றியும் அவர்கள் என்னிடம் பேசுவார்கள்.

அன்று ரிசாத் பதியுதீன் என்னை அழைத்து இஷாம் அஹமட் என்ற பெயருள்ள நபர் கைதுசெய்யப்பட்டாரா என்று கேட்டார். அந்த நேரத்தில் நான் தெரியவில்லை என்றும், பின்னர் பார்த்து தகவல் தருகின்றேன் என்றும் குறிப்பிட்டேன்.

இரண்டாவது முறையாக அவர் அழைத்த போது நான் இன்னும் தேடுகிறேன் என்று சொன்னேன். அந்த நேரத்தில் என்னால் பதிலளிக்க முடியவில்லை. அந்த நேரத்தில் கொழும்பில் விசேட அதிரடிப்படை செயற்பட்டு வந்தது. இந்தப் பெயரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டாரா என்று நான் அவர்களிடம் கேட்டேன். அவர்கள் அதனை ஆம் என்று உறுதி செய்தனர்.

அன்று மாலையில் மீண்டும் ரிசாத் பதியுதீன் தொலைபேசியூடாக என்னுடன் பேசிய போது, 'ஆம், அப்படி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இனிமேல் இதுதொடர்பில் என்னுடன் பேச வேண்டுமெனில் ஒன்றரை வருடங்கள் கழித்து எனக்கு அழைப்பு எடுங்கள்' என்று சொன்னேன்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட எந்தவொரு நபரையும் 24.மணி நேரத்துக்குள் ரி.ஐ.டியிடம் ஒப்படைக்க வேண்டும். பயங்கரவாத விசாரணைக்குள் குறித்த நபரை ஒன்றரை ஆண்டுகள் வரை தடுத்து வைக்க முடியும் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் ரிசாத்திடம் அப்படிச் சொன்னேன். ஆனால், ரிசாத் குறித்த நபரை விடுவிக்குமாறு எனக்கு எவ்வித அழுத்தங்களையும் கொடுக்கவில்லை' என்றார். 'வேறு யாராவது உங்களுக்கு அழுத்தங்களை வழங்கினார்களா?' என்று தெரிவுக்குழு உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்குத் பதிலளித்த இராணுவத் தளபதி, அரசதலைவரோ அல்லது தலைமை அமைச்சரோ இதுவரை எனக்கு அழுத்தம் கொடுக்கவில்லை' என்றார்.

இராணுவத் தளபதியிடமிருந்து சாட்சிகள் சேகரிக்கத் தொடங்கிய சுமார் 18 நிமிடங்களுக்குப் பிறகு, தெரிவுக்குழு உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு கேள்வின்ய எழுப்பினார். 'ஐ.எஸ்.ஐ.எஸ். அச்சுறுத்தலை எதிர்கொள்ள உளவுத்துறை மறுசீரமைப்புக்கு எவ்வளவு காலம் ஆகும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?' என்று இராணுவத் தளபதியிடம் பீல்ட் மார்ஷல் கேட்டார்.

'பீல்ட் மார்ஷல் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டுள்ளார். எனவே, ஊடகங்களை இங்கிருந்து வெளியேற்றுவோம்' தெரிவுக்குழுவின் மற்றொரு உறுப்பினரான அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

தெரிவுக்குழுவின் ஏனைய உறுப்பினர்களும் 'ஊடகவியலாளர்களே தயவுசெய்து இதற்கு இடம் விடுங்கள். இது ஒரு முக்கியமான பிரச்சினை என்று நாங்கள் நினைக்கின்றோம். எனவே, இங்கிருந்து வெளியேறுங்கள்' என்று கூறினார்கள். பாதுகாப்பு விடயங்கள் வெளிப்பட்டதால் அந்தச் சாட்சியம் முடியும்வரை ஊடகவியலாளர்கள் வெளியில் நின்றார்கள். (ம-22)


# சமாதானத்தை விரும்புவதாக பொய்யுரைக்கிறது அமெரிக்கா

## ஈரான் அதிபர் விசனம் தெரிவிப்பு


தெஹ்றான், ஜூன் 27

ஒருபுறம் தொடர் தடைகளை விதித்துக்கொண்டு மறுபுறம் சமாதானப் பேச்சுக்குக் கதவுகள் திறந்திருப்பதாக அமெரிக்கா பொய் சொல்கிறது என ஈரான் அதிபர் ஹசன் ரவுகானி தெரிவித்தார்.

அமெரிக்காவின் ஆளில்லா உளவு வானூர்தியை ஈரான் சுட்டு வீழ்த்திய பின்னர் ஈரான் மீது புதிய பொருளாதாரத் தடைகளைப் பிறப்பித்தார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.



அதேவேளை ஈரானுடன் ஆக்க பூர்வமான பேச்சுக்களை நடத்துவதற்கான சமாதானக் கதவுகளைத் திறந்தே வைத்திருக்கிறோம் என அமெரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன் குறிப்பிட்டார். இந்த நிலையிலேயே, "ஒருபுறம் தொடர் தடைகளை விதிக்கும் அமெரிக்கா மறுபுறம் சமாதானப் பேச்சுக்குக் கதவுகள் திறந்திருப்பதாகப் பொய் சொல்கிறது" என்று ஈரான் அதிபர் ஹசன் ரவுகானி தனது விசனத்தைத் தெரிவித்தார்.



# அதிவேக ரயில்களை நிறுத்திய தனி ஒரு நத்தை

டோக்கியோ, ஜூன் 27

ஜப்பானில் இயக்கப்படும் அதிவேகத் தொடருந்து (புல்லட் ரயில்) சேவையானது நத்தை ஒன்றால் நிறுத்தப்பட்டது. இந்தச் சம்பவம் அங்கு பெருமளவில் பேசு பொருளாகியுள்ளது. நேரம் தவறாமைக்கு முன்னுதாரணமாக இருந்து வருகின்ற குறித்த தொடருந்துச் சேவைகள் நிலநடுக்கம், கடும் மழை போன்ற இயற்கை இடர்களின்போது கூட அங்கு முழுமையாக நிறுத்தப்பட்டது கிடையாது. இந்த நிலையிலேயே குறித்த சேவையை ஒற்றை நத்தை ஒனடறு நிறுத்தியுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

கடந்த மாதம் 30ஆம் திகதி ஜப்பானின் தெற்குப் பகுதியில் அதிவேகத் தொடருந்துகளின் வழித்தடத்தில் ஏற்பட்ட மின் தடை காரணமாக 25 வரையான தொட்ருந்துகளின் சேவை நிறுத்தப்பட்டது.

இதனால் 12 ஆயிரத்துக்கும் அதிகமான பயணிகள் பாதிப்புக்கு உள்ளானார்கள். மின்சாரம் தடைப்பட்டதற்கான காரணம் குறித்து ஆராய்ந்தபோது, தொடருந்துப் பாதைக்கான மின்சாதனக் கட்டுப்பாட்டு அறையில் உள்ள கருவி ஒன்றைக் கடக்க முயன்ற நத்தை ஒன்றின் மீது மின்சாரம் பாய்ந்து, அந்த நத்தை அந்த இடத்திலேயே சாவடைந்திருந்தமை கண்டறியப்பட்டது. அதனாலேய மின்சாரம் தடைப்பட்டது என்று தெரியவந்தது.

# ஏமனின் ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் கைது

சனா, ஜூன் 27

ஏமனில் செயற்பட்டு வருகின்ற ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவரான அபு ஒசாமா அல் முகஜர் மற்றும் அந்த இயக்கத்தின் கணக்காளர் ஆகியோரைக் கைது செய்துள்ளதாகச் சவூதி-ஏமன் கூட்டுப்படைகளின் பேச்சாளரான துருக்கி அல் மலிகி தெரிவித்தார்.

ஏமனின் தேசிய செய்திச் சேவை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கைதுகளின்போது பொதுமக்கள் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் இந்த நடவடிக்கையின் போது, ஏராளமான ஆயுதங்களும், தொலைத் தொடர்பு சாதனங்கள் போன்றவையும் கைப்பற்றப்பட்டதாகவும் அல் மலிகி மேலும் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் எங்கு சிறைவைக்கப்பட்டுள்ளனர் போன்ற எந்த விவரங்களையும் அவர் வெளியிடவில்லை.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு ஏமனில் 2014ஆம் ஆண்டில் கால்பதித்த பின்னர் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அந்த நாட்டின் தலைநகர் சனாவிலுள்ள சியா முஸ்லிம் மதத் தலங்கள் மீது தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டது. இந்தத் தாக்குதலில் 137 போர் சாவடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மக்களுக்கு உணவு வழங்குவதை போராட்டக்காரர்கள் தடுக்கின்றனர்

## ஏமன் விடயத்தில் ஐ.நா. குற்றச்சாட்டு

சனா, ஜூன் 27

ஏமனில் போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பொதுமக்களுக்கு உணவு வழங்குவதற்குச் செல்கின்ற பாதையைப் போராட்டக்காரர்கள் மூடி வைத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டியது. இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் உதவிக் குழு மேலும் தெரிவித்ததாவது:

ஏமனில் நடந்துவரும் உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை நீண்ட காலமாகப் பேச்சுக்களை நடந்தி வருகிறது. பேச்சுக்கள் தோல்வியடைந்த நிலையில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உணவளிக்கவிடாமல் ஹவுத்திப் போராளிகள் தடுக்கின்றனர் என்றது.

**பின்னணி**

தென்மேற்கு ஆசிய நாடான ஏமனின் அதிபர் மன்சூர் ஹைதி சன்னி பிரிவைச் சேர்ந்தவர். ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்திப் போராளிகளுக்கும் அரசுக்கும் இடையே 2015 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியது. அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாகச் சவூதி செயற்படுகிறது. ஹவுத்திப் போராளிகளுக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

ஏமன் அரசுடன் இணைந்து சவூதி அங்கு நடத்தும் மனிதாபிமானமற்ற தாக்குதலை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்திருந்தது. இந்தப் போரில் இதுவரை 11 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 5ஆயிரம் பேர் குழந்தைகள்.







# ஈரான் மீதான தாக்குதல் நிறுத்தத்துக்கு 65 சதவீத அமெரிக்கர்கள் வரவேற்பு

வோஷிங்டன், ஜூன் 27

ஈரான் மீதான தாக்குதலை நிறுத்திய ட்ரம்பின் நடவடிக்கைக்கு 65 சதவீத அமெரிக்கர்கள் ஆதரவு தெரிவித்தனர். இது குறித்து அமெரிக்காவில் தனியார் நிறுவனம் ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றிலேயே இந்த விடயம் கண்டறியப்பட்டது.

அத்தோடு ஈரான் மீதான தாக்குதலை நிறுத்தியதற்கு 14 சதவீதம் பேர் எதிர்ப்பும் தெரிவித்துள்ளமை அந்தக் கருத்துக்கணிப்பில் தெரியவந்தது. அமெரிக்காவின் உளவு வானூர்தி ஒன்றை ஈரான் சுட்டு வீழ்த்தியதைத் தொடர்ந்து ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டார். பின்னர் உடனடியாக அவரே தான் விடுத்த அந்த உத்தரவைத் திரும்பவும் பெற்றார். ட்ரம்பின் இந்த நடவடிக்கைக்கே அங்கு 65 சதவீத அமெரிக்கர்கள் ஆதரவும் 14 சதவீத பேர் எதிர்ப்பும் தெரிவித்து உள்ளனர்.

# ஹொங்கொங்கில் நெகிழ்ச்சிச் சம்பவம் போராட்டக்காரர்கள் மன்னிப்புக் கோரினர்

ஹொங்கொங், ஜூன் 27


சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கின் கைதிகளைச் சீனாவுக்குக் கையளிப்பதற்கான சட்ட அதிகாரங்கள் குறித்த தீர்மானம் ஹொங்கொங் நிர்வாக சபையில் அண்மையில் கொண்டு வரப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் ஹொங்கொங் மக்களில் பலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்துக்குப் பணிந்த ஹொங்கொங் நிர்வாகம் குறித்த சட்ட மாற்றத்தை நிறுத்தியது.

ஹொங்கொங்கின் தலைமை நிர்வாகியான கேரி லேம் இந்த முன்னெடுப்புக்காக மன்னிப்பும் கோரினார். அதற்காக அங்கு பெரும் போராட்டம் நடந்தது. அரசு அலுவலங்கள் முன் போராட்டம் நடத்திப் பொதுமக்களுக்கு தொந்தரவு அளித்ததற்காகப் போராட்டக்காரர்கள் தற்போது மன்னிப்புக் கேட்டுள்ளனர்.




### தமிழகத் தண்ணீர் தட்டுப்பாடு விவகாரம்

# கவலை தெரிவித்தார் ஹொலிவூட் பிரபலம்





கலிபோர்ணியா.ஜீன் 27
இந்தியாவின் தமிழக மாநிலத்தில் நிலவும் தண்ணீர்த் தட்டுப்பாடு, தண்ணீருக்காக மக்கள் படும் துயரம் குறித்துக் ஹொலிவூட் நடிகர் லியோனார்டோ டிகாப்ரியோ கவலை தெரிவித்தார்.
அமெரிக்காவின் முன்னணிச் செய்தி நிறுவனமான 'நியூயோர்க் ரைம்ஸ்' சென்னை குடிநீர் பஞ்சம் குறித்துச் செய்தி வெளியிட்டு இருந்தது.
இந்த நிலையில் "மழை மட்டுமே சென்னை மக்களைத் தண்ணீர்ப் பஞ்சத்திலிருந்து காக்கும்" என்று ஹொலிவூட்நடிகர்லியோனார்டோடிகாப்ரியோ தனது சமூக வலைத்தளப் பக்கம் ஒன்றில்பதிவிட்டார்.
நீர்த் தேக்கங்கள் வறண்டு விட்டன. தென்னிந்திய நகரமான சென்னை நெருக்கடியில் உள்ளது.
கடுமையானநீர்ப்பற்றாக்குறைஅவசர தீர்வு களுக்காகக் கட்டாயத்தில் உள்ளது. அரச தொட்டிகளில் இருந்து தண்ணீரைப் பெறுவதற்காக மணிக்கணக்கில் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது.
உணவகங்கள் மூடத் தொடங்கி உள்ளன-எனலியோனார்டோடிகாப்ரியோ அந்தப்பதிவில் மேலும் குறிப்பிட்டார்.
ரைற்றானிக் திரைப்படத்தில் நாயகனாக நடித்ததன்மூலம் உலகப் புகழ் பெற்ற இவர் அடிப்படையில் சுற்றுச்சூழல் மற்றும் உயிரின ஆர்வலர் என்பது குறிப்பிடத்தக்கது.




# சவூதி குடியுரிமைக்கு 2.55 கோடி அறவீடு

ரியாத்.ஜீன் 27
வெளிநாட்டுத் தொழிலாளர்கள் சவூதி அரேபியாவில் குடியுரிமை பெற வேண்டுமாயின் 8 லட்சம் ரியால் (2.55 கோடி) கட்டணம் செலுத்திக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்ளாலம்என்கிறபுதியதிட்டத்தைஅறிமுகம் செய்தது சவூதி.
சவூதி அரேபியா, கட்டார் உள்ளிட்ட நாடுகளில் வெளிநாட்டுக்காரர்களுக்குக்குடியுரிமைவழ்ங்கப்படுவதுகிடையாது. தற்போதுகுடியுரிமைபெறுவதற்கான சிறப்புத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது சவூதி.
அத்தோடு ஓராண்டுக்கு மட்டும் சவூதி அரேபியாவில்வசிக்க, 1லட்சம்ரியால் (48.45 லட்சம்)கட்டணம் செலுத்த வேண்டும் என்றும், அதைப் புதுப்பித்துக் கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.
இதற்கான விண்ணப்பப் பதிவை இணையம் மூலம் மேற்கொள்வதற்கான நடைமுறையை நேற்று முன்தினம் சவூதி தொடங்கியது.

## ஹிந்தி கட்டாய பாடம்!

புதுடெல்லி. ஜீன் 27
இந்தியா முழுவதுமுள்ள கல்லூரி, பல்கலைக்கழகங்களில் இளநிலைபட்டப்படிப்புகளில் ஹிந்தியைக் கற்பிக்கும்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. அதற்குக் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. இந்தியாவில் அண்மையில் வெளியிடப்பட்டபுதியகல்விக்கொள்கை வரைவு அறிக்கையில், இந்தியாமுழுவதும் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துமாறுபரிந்துரைசெய்யப்பட்டு இருந்தது. இது, ஹிந்தியைத் திணிக்கும் முயற்சி என்று தென்னிந்தியாவில் கடும் எதிர்ப்பு எழுந்தது. இதையடுத்து, 3ஆவது மொழியை அவரவர் விருப்பப்படி தெரிவு செய்யலாம் என்று வரைவு அறிக்கையில் அரசு திருத்தம் செய்தது. இந்த நிலையிலேயே அனைத்து இளநிலை பட்டப்படிப்புகளிலும் ஹிந்தியைக் கட்டாயமாக்கும் முயற்சி குறித்த தகவல்கள் வெளியாகி உள்ளன. பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழுபல்கலைக்கழகங்களுக்குஅனுப்பியுள்ளசுற்றறிக்கையில், ஹிந்திகற்பித்தல்தொடர்பான ஆலோசனைகள், அபிப்பிராயங்கள் பல்கலைக்கழகங்களிடமிருந்துவரவேற்கப்படுகின்றனஎன்றுஅறிவுறுத்தியுள்ளது.
இது, ஹிந்தியைத்திணிக்கும்மற்றொரு முயற்சியாகக் கருதப்படுகிறது என்று கூறி இதற்கு அரசியல் கட்சிகளும், மாணவர்களும்எதிர்ப்புத்தெரிவித்தனர்.

# பிரிட்டனின் அடுத்த தலைமையார்? அடுத்த மாதம் அறிவிக்கப்படும்





லண்டன். ஜீன் 27
பிரிட்டனின் ஆளும்கட்சியின் அடுத்த தலைவர்மற்றும்தலைமைஅமைச்சர் யார் என்பது எதிர்வரும் ஜீலை மாதம் 23ஆம் திகதி அறிவிக்கப்படும்; எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'பிரெக்சிட்'விவகாரம் காரணமாகத் தற்போதை தலைமை அமைச்சர் தெரேசா மே பதவி விலகுவதாக அறிவித்தைத் தொடர்ந்து பிரிட்டனின் அடுத்த தலைமை அமைச்சருக்கான போட்டி ஆரம்பமாகியது. எல்லாமாகப் பத்து பேர் இந்தப் பதவிக்கு விருப்பம் தெரிவித்தநிலையில்முதன்மைவேட்பாளர்களாகப் பிரிட்டனின் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் போரிஸ் ஜோன்சன் மற்றும் அயலுறவுத்துறைஉயரதிகாரி ஜெரேமி ஹன்ட் ஆகியோர் பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தெரிவில் முன்னிலையில் உள்ளனர்.
இந்த நிலையில், பிரிட்டனின் அடுத்த தலைமை அமைச்சர் யார்? என்பது எதிர்வரும் ஜீலை மாதம் 23ஆம் திகதி வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இன்றைய நாள்

**மேடம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும். மனதில் உற்சாகம் நிறைந்து புத்துணர்வு பெறுவீர்கள். தொழிலில், உற்பத்தி விற்பனை அதிகரிக்க சில மாற்றம் செய்வீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**இடபம்:** பொறுப்புணர்வும், அறிவாற்றலும் சில நன்மை தரும். தொழில், வியாபார நடைமுறையில் சுமுக நிலை இருக்கும். சிறிது பணக்கடன் பெற நேரிடலாம். நிர்பந்தத்தின் பேரில் பொருட்கள் வாங்க வேண்டாம்.

**மிதுனம்:** எதார்த்தமாக பழகுவீர்கள். அடுத்தவரின் சூழ்நிலை அறிந்து செயல்படவும். தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். சேமிப்புப் பணம் செலவுகளுக்கு பயன்படும்.

**கடகம்:** ஒரு சிலரின் அனுசரணையான உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராள பணவரவில் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**சிம்மம்:** சிலரின் விமர்சனம் மனதில் வருத்தம் தரலாம். தொழில், வியாபாரத்தில் அனுகூலம் பாதுகாத்திடுவீர்கள். சராசரி பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** நண்பருக்கு தேவையான உதவியை வழங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். ஆதாய பணவருமானம் கிடைக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**துலாம்:** குடும்ப உறுப்பினரின் பாச மழையில் நனைவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு படிப்படியாக நிறைவேறும். கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள். தியானம், தெய்வ வழிபாடு மனதில் அமைதி தரும்.

**விருச்சிகம்:** உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். தாராள அளவில் பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** குடும்ப விவகாரத்தில் முக்கியமான தீர்வு ஏற்படும். தொழில், வியாபாரத்தில்வளர்ச்சி இலக்கு எளிதாக நிறைவேறும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**மகரம்:** உங்களுக்கு சிலர் சொல்லும் அறிவுரை சங்கடத்தை ஏற்படுத்தும். புதிய முயற்சிகளை பின்னொரு அனுகூல நாளில் துவங்கலாம்.

**கும்பம்:** குழப்பம் நீங்கி மனநிம்மதி காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். நிலுவைப்பணம்வசூலாகும்.

**மீனம்:** முக்கியமான செயல் ஒன்றில் அதிக கவனமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். புதிய வாகனம் வாங்க அனுகூலம் உண்டு.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 27
மாமுனை கலைமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் மறைந்த வீர, வீராகனைகள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9பேர் பங்கு பற்றும்விலகல்முறையிலான கால்பந்தாட்டத்தொடரில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் செம்பியன்பற்று சென். பிலிப்நேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர்கள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியான் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இரணைமாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக் அணி மோதவுள்ளது. மாலை 2.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முரசு மோட்டை விளைபூமி விளையாட்டுக்ழக அணி மோதவுள்ளது. மாலை 4.00மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கட்டைக்காடு சென் மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக அணி மேதவுள்ளது. (23)



# விக்ரோறியாவை வீழ்த்தி கொக்குவில் இந்து வெற்றி

யாழ்பபாணம், ஜூன் 27
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 17 வயதுப்பிரிவினருக்கான பிரிவு 2இக்கான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கடினப் பந்து துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.
கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியக்கல்லூரி அணி மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சுழிபுரம் விக்ரோறியக்கல்லூரி அணி துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அணி 28 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லம்போதரன் 44 ஓட்டங்களையும், சிவானுசன் 25 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் காபானந் 4 இலக்குகளையும், கௌதமன், டினேஸ்குமார் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
இலகு இலக்கை நோக்கிக் களமிறங்கிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 18.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 116ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. இதில் பிரவின் 56 ஓட்டங்களையும், துவாரகன், 23 ஓட்டங்களையும், ஜெருசன் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஜீவன் 2 இலக்குகளையும், பத்மபிரியன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (23)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 27
மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மறைந்த வீர, வீராங்கனைகள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத்தொடரில் கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் இரண்டு அணிகளும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் எதுவித கோல்களையும் பதிவு செய்யாதவிடத்து ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்கு சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 7:6 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக கட்டைக்காடுசென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியின் கோல் காப்பாளர் கியூமன் தெரிவு செய்யப்பட்டார்.. (23)

---

யாழ்ப்பாணம். ஜூன் 27
மற்றுமொரு ஆட்டத்தில் பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆழியவளை அருணேதயா விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 3:1 என்ற கோல் கணக்கில் பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனான பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி வீரர் டேமியன் தெரிவானார். (23)

---

யாழ்ப்பாணம், ஜூன் 27
இன்னுமோர் ஆட்டத்தில் பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. பள்ளிக்குடா ஜொலிபோய்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 2:1 என்ற கோல் கணக்கில் பள்ளிக்குடா ஜொலிபோய்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனான பள்ளிக்குடா ஜொலிபோய்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் அருள்தாஸ் தெரிவானார். (23)

# சென்.அன்ரனிஸ் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம் ஜூன் 27
தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மன்னார் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாழ்வுபாடு பிறீமியர் லீக் ரி -20 துடுப்பாட்டத் தொடரில் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.
தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி 11.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துசி 13 ஓட்டங்களையும், றவுபிக் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் அகிலன் 4 இலக்குகளையும், ஜெறோன் 3 இலக்குகளையும், லஜீத் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
இலகு இலக்கை நோக்கிக் களமிறங்கிய தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 6 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் மேனன் 22 ஓட்டங்களையும், றோய் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஜொறேசன் 3 இலக்குகளை வீழ்த்தினார். (23)



## கனகபுரம் வி.க அபார வெற்றி

கிளிநொச்சி கால்பந்தாட்டலீக்கில் பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வரும் இந்தத் தொடரில் கிளிநொச்சிகனகபுரம்வி.க. அணியைஎதிர்த்துசாந்தபுரம் கலைமகள் வி.க. அணி மோதியது.
இதில் கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழக அணி 9:1 என்ற கோல் கணக்கில் கனகபுரம் அணி வெற்றி பெற்றது. (23)

## சித்தி விநாயகர் வி.க. இலகு வெற்றி



யாழ்ப்பாணம், ஜூன் 27
தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மன்னார் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில்நடத்தும் தாழ்வுபாடு பிறீமியர் லீக் ரி- 20 துடுப்பாட்டதொடரில் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணி 10 இலக்குகளால் வெற்றி பெற்றது.
தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்ரார் ஈகிள் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக்கழக அணி 19.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அன்ரன் 34 ஓட்டங்களையும், றொக்சன் 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயபிராகாஸ், கரிபவன் ஆகியோர் தலா 4 இலக்குகளையும், கரிகரன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணி 13.1 பந்துப்பரிமாற்றங்களில் எந்தவித இலக்கு இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் கிரிசாந் 52 ஓட்டங்களையும், அனோசன் 49 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். (23)




# தாகீர் புதிய சாதனை

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் 2 இலக்குகளை வீழ்த்தியதன் மூலம் தென்னாபிரிக்கா வீரர் இம்ரான் தாகீர் புதிய சாதனையைப் படைத்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் தென்னாபிரிக்கா சுழற்பந்து வீரர் இம்ரான்தாகீர் 2 இலக்கைக் கைப்பற்றினார். இதன்மூலம் உலகக் கிண்ணத்தில் 39 இலக்குகளைக் கைப்பற்றி அதிக இலக்குகளைக் கைப்பற்றிய தென்னாபிரிக்கா வீரர் என்ற சாதனையை படைத்தார்.

ஆஸ்திரேலியா அணியின் மெக்ராத் 71 இலக்குகளைக் கைப்பற்றி முதலாவது இடத்திலும், இலங்கை அணியின் முரளீதரன் 68 இலக்குகளை எடுத்து 2ஆவது இடத்திலும், பாகிஸ்தான் அணியின் அக்ரம் 55 இலக்குகளைக் கைப்பற்றி மூன்றாவது இடத்திலும் காணப்படுகின்றனர்.

# பார்சிலோனா அணியில் மீண்டும் நெய்மர்?

பிரேசில்கால்பந்து அணித் தலைவரும், உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவருமான நெய்மர் பார்சிலோனா அணிக்காக விளையாடி வந்தார். கடந்த 2017ஆம் ஆண்டு கால்பந்து வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு சுமார் 200 மில்லியன் யூரோவுக்கு மேல் விலைகொடுத்து அவரை பிரான்ஸ் நாட்டின் தலைசிறந்த அணியான பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி வாங்கியது.

ஆனால் பார்சிலோனாவில் விளையாடியபோது கிடைத்த புகழ், இந்த அணியில் விளையாடும் போது அவருக்கு கிடைக்கவில்லை. மேலும், பாரிஸ் செயின்ட் அணியில் இருந்து ரியல் மட்ரிட் அணிக்கு செல்ல் விரும்பினார். அது தோல்வியில் முடிந்தது. இதனால் மீண்டும் பார்சிலோனா அணிக்கு திரும்ப நெய்மர் விரும்பினார். இதை பாரிஸ் செயின்ட் அணி உரிமையாளரும் உறுதிப்படுத்தினார்.

தற்போது நெய்மர் ஆண்டுக்கு சுமார் 283 கோடி ரூபாய் வருமானமாக பெறுகிறார். பார்சிலோனா அணிக்கு மீண்டும்செல்வதற்காக சுமார் 100 கோடி ரூபாயை விட்டுக்கொடுத்து 185 கோடி ரூபாய் தந்தால் போதும் என்கிறாராம் நெய்மர். இதனால் நெய்மர் பார்சிலோனா அணிக்குச் செல்ல வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. மீண்டும் பார்சிலோனா அணிக்கு நெய்மர் வந்தால் ஐந்தாண்டுக்கு ஒப்பந்தம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.



# இந்தியாவை வீழ்த்துவோம்

*சகிப் அல் ஹசன் நம்பிக்கை*

நடப்பு உலகக் கிண்ணத்தில் இலங்கைக்கு எதிரான ஆட்டத்திலும், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்திலும் இங்கிலாந்து அணி தோல்வியடைந்ததன் மூலம் இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகளுக்கான அரையிறுதி வாய்ப்புக்கான நம்பிக்கை அதிகரித்துள்ளது.

பங்களாதேஷ் இதுவரை 7 ஆட்டங்களில் விளையாடி 3 வெற்றி, 3 தோல்வி, ஒரு ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. அந்த அணி 7 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தில் உள்ளது.

அடுத்த போட்டியில் இந்தியாவை எதிர்கொள்கிறது. உலகக் கிண்ணத்தை வெல்லும் அணிகளில் ஒன்றாக கருதப்படும் இந்தியாவை வீழ்த்தி விட்டால் பாகிஸ்தானை எப்படியும்



வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்து விடலாம் என அந்த அணி திட்டமிட்டுள்ளது.

இது குறித்து பங்களாதேஷ் அணித் தலைவர் ஷாகிப் அல் ஹசன் தெரிவிக்கையில்;

இந்தியாவுக்கு எதிரான ஆட்டம் எங்களுக்கு மிக முக்கியமானது. அவர்கள் கிண்ணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை வீழ்த்துவது எளிதான காரியம் அல்ல. ஆனால், நாங்கள் எங்களது சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவோம்.

அனுபவம் உதவியாக இருக்கும். ஆனால், அது மட்டுமே முடிவாக இருக்க முடியாது. இந்தியாவை வீழ்த்த வேண்டுமென்றால், நாங்கள் எங்களது சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். நாங்கள் எங்களுடைய சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவோம்- என்றார்.



# ஆஸிடம் தோற்றதால் ‘பீதி’ அடையவில்லை

## மோர்கன் இறுமாப்பு

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து அணி தோல்வியைத் தழுவியது. இந்தத் தோல்வியின் மூலம் இங்கிலாந்து அணி அடுத்து இடம்பெறும் இரண்டு போட்டிகளில் வெற்றி பெறவேண்டிய கட்டாயத்தில் உள்ளன.


இங்கிலாந்து அணி 7 ஆட்டத்தில் 4 வெற்றியும், 3 தோல்வியும் பெற்றுள்ளது. அடுத்து இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு எதிராக விளையாடவுள்ளது.

இதுகுறித்து இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் தெரிவித்ததாவது;

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நாங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்று நான் நினைக்கிறேன். ஆஸி வீரர்கள் நல்ல இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தி விளையாடினார்கள். நாங்கள் விரைவில் இலக்குகளை இழந்ததால் நெருக்கடி ஏற்பட்டது.

இந்த ஆட்டத்தின் சூழ்நிலைகள் மிகப் பெரிய அதிருப்தியை அளிக்கவில்லை. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தோல்வியால் இங்கிலாந்து அணி ‘பீதி’ அடையவில்லை. எல்லாமே எங்கள் கையில்தான் இருக்கிறது. வரும் ஆட்டங்களில் சிறப்பாக விளையாடி முன்னேற்றம் காண்போம் என்று நம்புகிறேன் - என்றார்.

# பார்முலா 1 கார்பந்தயம் ஹமில்டன் வெற்றி



நடப்பு ஆண்டுக்கான பார்முலா 1 கார் பந்தயம் உலகம் முழுவதும் 21 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 8ஆவது சுற்றான பிரெஞ்ச் கிராண்ட்பிரி பந்தயம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் 309.69 கிலோமீற்றர் கொண்ட பந்தய தூரத்தை நோக்கி 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர். எதிர்பார்த்தது போலவே முதல் வரிசையில் இருந்து புறப்பட்ட நடப்பு சம்பியனான இங்கிலாந்தின் லீவிஸ் ஹமில்டன் வெற்றி பெற்றார்.

இவர் 1 மணி 24 நிமிடம் 31.198 வினாடிகளில் முதலாவதாக வந்து 25 புள்ளிகளை வசப்படுத்தினார். இந்தத் தொடரில் அவரது 6ஆவது வெற்றி இதுவாகும். அவரை விட 18.056 வினாடி மட்டுமே பின்தங்கிய பின்லாந்து வீரர் வால்டெரி போட்டாஸ் 2 ஆவது இடத்தை பிடித்து 18 புள்ளிகளை பெற்றார். முன்னாள் சம்பியன் ஜேர்மனியின் செபாஸ்டியன் வெட்டல் 5ஆவது இடத்தைப் பிடித்தார்.

இதுவரை நடந்துள்ள 8 சுற்று முடிவில் ஹமில்டன் 187 புள்ளிகளுடன் முதலிடத்திலும், வால்டெரி போட்டாஸ் 151 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் நீடிக்கிறார்கள். இதன் அடுத்த சுற்று போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி ஆஸ்திரியாவில் இடம்பெறவுள்ளது.

**Techno World**
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகில் -யாழ்.)
**A/L - 2021**
**தொழில்நுட்பப் பிரிவு**
**மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா....**
கண்டி நுவரெலியா
(ஆராய்ச்சி நிலையம், பண்ணை, Tissue Culture lab பார்வையிடப்படும்)
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
077 017 5346, 077 170 3549

## மரண அறிவித்தல்

### செல்வி சந்திரிக்கா மகாதேவன்

ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சந்திரிக்கா மகாதேவன் நேற்று (26.06.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மகாதேவன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - ஊரெழு கணேசா வித்தியாசாலை) - ஜெயசோதி தம்பதியினரின் அன்பு மகளும் ஜெயசுதன் (கதிரியக்கவியலாளர் - ஆதார வைத்தியசாலை - தெல்லிப்பளை), கஜன் (OYSLANS Software Solution (Pvt) Limited) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இறைவியின் (பட்டதாரிப்பயிலுனர் - பிரதேச செயலகம், தெல்லிப்பளை) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2019) வியாழக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு மு.ப 10.30 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 08 . 1932



மறைவு 22 . 06 . 2019

### அம்பலவாணர் குமாரவேலு

கோப்பாய் வடக்கு, இலகடி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கு, கண்ணகி அம்மன் சனசமூக நிலையத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் குமாரவேலு கடந்த (22.06.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 4.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
மதவடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்

தகவல்: குடும்பத்தினர்.



கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் இடம்பெற்ற போட்டியில் ஆர்ஜென்ரீனா - கட்டார் அணிகள் மோதின. இதில் ஆர்ஜென்ரீனா அணி கோல் ஒன்றைப் போடுவதற்கு வாய்ப்பிருந்தும் அதனைத் தவறவிட்டது. இதன் போது ஆர்ஜென்ரீனா ரசிகர் ஒருவர்.

# சிலி அணியை வீழ்த்தி உருகுவே காலிறுதிக்கு

கோபா அமெரிக்க கால்பந்து போட்டி பிரேசிலில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் 15 முறை சம்பியனான உருகுவே அணி, நடப்பு சம்பியன் சிலியை எதிர்கொண்டது.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் உருகுவே அணியினரின் தாக்குதல் ஆட்டத்தை சிலி அணியினர் அருமையாக தடுத்தாடினர். இரு அணிகளும் கோல் அடிக்க பலமுறை முயற்சி செய்தாலும் முதல் பாதியில் இரு அணிகளாலும் கோல்கள் எதுவும் பெற முடியவில்லை. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்தது முதல் இரு அணி வீரர்களும் ஏட்டிக்குப் போட்டியாக ஆடினர். ஆனால் ஆட்டத்தின் 82ஆவது நிமிடத்திலேயே உருகுவே அணியின் வீரர் எடின்சன் கவானி தலையால் முட்டி கோல் அடித்தார். பதிலுக்கு கோல் அடிக்க சிலி அணி வீரர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டாலும் அதற்கு பயன் கிடைக்கவில்லை. இறுதியில் உருகுவே அணி 1:0 என்ற கோல் கணக்கில் சிலியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது. சிலி அணி ஏற்கனவே காலிறுதிக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.



**சிறுநீரகம் தேவை**
0+ இரத்தவகை சிறுநீரகம் 45 வயதுடைய ஒருவருக்கு உடன் தேவைப்படுவதால் உதவ விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.
077 064 9111
077 060 8400

**நாள் வாடகைக்கு நல்லூரில் வீடு**
நாள் வாடகை
அடிப்படையில் நல்லூரில்
"A/C. குசினியுடன் உண்டு"
தொடர்பு:- 0715130100




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.